
கல்கி



KALKI
28·6·1964
30
காசு



மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் கொடுத்து



மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் அஜீரணத்தைத் தடுக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்குப் பற்கள் தோன்றும்போது பெருமளவில் உதவுகிறது.

குடலில் ஏற்படும் திருகுவலி போன்ற வயிற்று வலி சம்பந்தமான தொல்லைகளைப் போக்கி, சுகமான நிலையை உண்டாக்குகிறது.

வயிற்று வீக்கங்களை- உப்புசங்களைப் போக்கி, காற்று பிரிவதற்கு உதவுகிறது.

உடல் நலத்தைப் பாதுகாத்து, குழந்தை அமைதியுடன் உறங்கவும் உறுதுணை புரிகிறது.



மீண்டும் புன்னகை தோன்றக் காணுங்கள்



ஒரு நாளைக்கு இருமுறை வீதம்
ஒவ்வொரு நாளும்
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து வந்தால், உங்கள் குழந்தை
உற்சாகத்துடனும், உடல்
நலத்துடனும் காணப்படும்

GEOFFREY MANNERS & COMPANY LIMITED

ASP/GM 18 TM


ஸிர்ஸில்க்
டபேட்டா, ஸாடின்,
கிரேப்,
சாதா & பிரிண்டட்
ஸிர்ஸில்க் லிட்.
ஸிர்பூர்,
காகஸ்நகர், ஆந்திரப் பிரதேசம்
ASP 55—3/64

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ்.'பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B. P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயுர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்தபோதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மந்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மந்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்ட்டின் & ஹாரிஸ் (பிரை.) லிட்.
ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மேர்க்கன்டைல் பில்டிங்ஸ், லால்பஜார், கல்கத்தா-1
பம்பாய் – புது தில்லி – சென்னை

M/P/T TA



for that extra pleasure in travel.....

You can make your travel delightfully delicious when you relish J. B. Mangharam's famous Biscuits & Sweets made with selected, wholesome ingredients.


J. B. MANGHARAM'S
BISCUITS

Buy them at almost any restaurant or canteen.

J.B. MANGHARAM & CO.,
GWALIOR-HYDERABAD

JB—122

Madras Office: Post Box No. 1397; 35/37, Thambu Chetty Street, Madras-1. *Telephone:* **24696**







உயரிய பண்போடு
உபயோகிப்பதற்கும்
உதவுவதற்கும்
உகந்தது
பனாமா
Panama
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
20
CIGARETTES
பனாமா
இழுக்க
இழுக்க
இன்பம்
இறுதிவரை
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.
பம்பாய்-56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT-(P) 634 TM
Greens' Advtg.

கல்கி

பொருளடக்கம்


குரோதி, ஆனி 15 ● ஜூன் 28


வயிற்றிலடிக்க வேண்டாம்! ...	8 அ
சட்டம் செய்வார்களா? ...	8 ஆ
என்ன சேதி? ...	8 இ
கயல் விழி ...	10
படம் பிடிக்கும் போதினிலே ...	19
ஆண்டவன் கட்டளை ...	21
தேக்கடி தர்பார் ...	22
ஆளப்பிறந்தவன் ...	30
சிறைச்சாலை என்ன செய்யும்? ...	34
இளைய பாரதத்தினர் ...	39
சிரிக்கவும் சிந்திக்கவும் ...	43
புகழ் பெற்ற பீவர் புருக் ...	44
அறிவுக்கனலே, அருட்புனலே! ...	47
அடாவடி ஆறுமுகம் ...	59
குண்டுமல்லிகை ...	62
வழக்கறிஞர் வரிசை ...	71
கோயிலுக்குள் ஒரு துணை ...	74
துக்கடா ...	80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மூஷிகர்: நீர் வராமல் மின் சாரக் கட்டுப்பாடு ஏற்பட்டு, வேலையின்றி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். வருணனே! நீரும் மனமிரங்கி நீர் வடிக்கப்படாதா?


சோர்வடையாதீர் கெய்ரோன்ஜி,
நாளைக்கு என்ன வெல்லாம்
மாறுதல் நேருமோ,
யார் கண்டது?
டெல்லி
கெய்ரோன்
PK


அன்று கனரகத் தொழில்;
இன்று லேசான தொழில்
PK



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 48

வயிற்றிலடிக்க வேண்டாம்!

உணவுப் பொருட்களின் விலை உயர்வதைத் தடுப்பதற்காகக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் செய்யப்பட்டுள்ள சில யோசனைகளை எண்ணும்போது திகில் உண்டாகிறது. மக்களுக்கு நன்மை செய்வதாகச் சொல்லிக் கொண்டு அவர்களைக் கால் வயிற்றுக்குக் கூட உணவு கிடைக்காமல் திண்டாடச் செய்யும் விபரீதப் பாதையில் ஆளும் கட்சியினர் செல்கிறார்களே என்று வேதனையா யிருக்கிறது.

கட்டுப்பாடுகள் என்ற பெயரில் உணவு தானிய விற்பனையை மேற்பார்வையிடுவதாகச் சொல்லிக் கொண்டு ஆட்சியாளர்கள் திட்டத்தை ஆரம்பிப்பார்கள். காலக்கிரமத்தில் சிறுகச் சிறுக உணவுப் பண்டங்களின் பூரண விநியோகமும் சர்க்காரின் பொறுப்பே ஆகிவிடும். இதைவிடத் தவறான, துர்ப்பாக்கியமான முடிவு வேறு இருக்கமுடியாது. உணவுப் பண்ட விநியோகம் என்பது எவ்வளவு பரந்து விரிந்த சிக்கலான துறை என்பதையும், அதனை ஒரே அமைப்பின் கீழ் கட்டுக்கோப்பாக்கி அரசாங்கமே நிர்வகிப்பதென்பது எத்தகைய அசாத்தியமான காரியம் என்பதையும் 'ஹிந்து' பத்திரிகையின் பொருளாதார நிருபர் சமீபத்தில் எடுத்துக் காட்டி யிருக்கிறார். ஆண்டொன்றுக்குச் சுமார் 2000 கோடி ரூபாய் புரளும் உணவுப் பொருள் வியாபாரத்தில் தற்போது சுமார் எழுபது லட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். பத்து லட்சத்துக்கு மேம்பட்ட கடைகள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளனவாம். இதையெல்லாம் பார்க்கும்போது உணவுப் பொருள் விற்பனை சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்தக்கூடிய துறை அல்லவே அல்ல என்பது பற்றி எள்ளளவும் சந்தேகம் உண்டாகாது. சில ஆயிரம் பொற்கொல்லர்களுக்கு மொரார்ஜியின் மௌடீகத்தினால் நேர்ந்த துர்க்கதி, இன்று லட்சக்கணக்கான உணவுப்பொருள் விற்பனையாளருக்கு ஏற்படாமல் உணவு மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். சென்னையில் ராஜாஜி ஆட்சியின்போது ரேஷனை நீக்கிப் பலர் வயிற்றில் பால் வார்த்த ஸ்ரீ சுப்பிரமணியம் தற்போது அதற்கு நேர் எதிர் திசையில் சென்று மக்கள் வயிற்றிலடிக்கும் திட்டத்துக்கு உடன்படலாகாது.

உணவுப் பொருள்களின் விலை உயர்ந்துவிட்டது என்பதற்கு வியாபாரிகளைக் குறைகூறிப் பொருளில்லை. சர்க்காரின் டாம்பீக வெறியைத் திருப்தி செய்வதற்காகப் போடப்படும் திட்டங்களை முன்னிட்டுப் பண வீக்கம் பெருகி வருகிறது. இதன் விளைவாக, எல்லாப் பண்டங்களும் விலை உயர்வது போலவே தானியங்களின் விலையும் உயர்ந்து விட்டது. ஆகையால் அடிப்படைப் பிரச்னையைத் தைரியத்துடன் தீர்த்தாக வேண்டும். டம்பாச்சாரித் திட்டங்களை விட்டு விட்டு, பண வீக்கத்தைக் குறைத்தால் எல்லா விலைவாசிகளும் தாமே இறங்கும். அதற்கு மனமில்லாத சர்க்கார், கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகளின் இன்னல்களைப் புரிந்து கொள்ளாமல், உணவுப் பொருட்களுக்குக் குறைந்த விலை நிர்ணயித்துக் கொள்முதல் செய்வதால் தானிய உற்பத்தி அடியோடு நசித்துப்போகும்.

ஏராளமான தானியங்களைச் சர்க்காரே குவித்து வைத்துக் கொண்டு ஆபத்துக் காலத்தில்தான் வெளியிடுவோம் என்று கூறி வருகிறது. சர்க்கார் எதிர்பார்க்கிற அந்தப் பேராபத்தான காலம் வருமுன் இந்தச் சரக்கு அவ்வளவும் எலிகள், பெருச்சாளிகள் இவற்றின் வயிற்றை நிரப்பிவிடும். சர்க்கார் கொள்முதல் செய்யும் தானியங்களை அவ்வப்போது வெளியிட்டுச் சந்தையில் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொண்டால்

விலை ஏகதேசமாக உயராது. இரண்டாவதாக, சில ராஜ்ய சர்க்கார்கள் மிகக் குறைந்த விலைக்குத் தானியங்களைக் கொள்முதல் செய்து அவற்றைக் கொள்ளை லாபம் வைத்து அண்டை ராஜ்யங்களுக்கு விற்கின்றன. 'ஏக இந்தியா' என்று கோஷமிடும் ஆட்சியாளர்கள், 'உணவு மண்டலங்கள்' என்பதாக ஒரு பிரிவினையைச் செய்து கொண்டு வருவதின் அர்த்தம் ஆண்டவனுக்குத்தான் புரியும். தங்களிடம் குறைந்த விலைக்கு வாங்கும் தானியத்தைச் சர்க்கார் கொழுத்த லாபத்துக்கு விற்பதை வியாபாரிகள் எப்படிச் சகிக்க முடியும்? எனவே அவர்கள் தங்கள் கையிருப்பை மறைத்து வைத்து, அவற்றை உயர்ந்த விலை போகும் அண்டை ராஜ்யங்களுக்குத் தாங்களே கள்ளத்தனமாகக் கடத்தி விற்பனை செய்கிறார்கள். அதாவது, உணவுப் பண்டங்கள் பதுக்கப்பட்டு விலை உயர்வதற்குச் சர்க்காரின் விவேகமற்ற துராசைத் திட்டங்கள் முக்கியமான காரணம்.

இந்தத் திட்டங்களைக் கைவிட்டு வியாபாரிகள் நேர்மையாக நடந்து நியாயமான லாபம் சம்பாதிக்கச் சர்க்கார் உதவுவதுதான் பிரச்னை தீர வழி. அதை விட்டு, சுமார் ஒரு கோடி மக்கள் ஈடுபட்டுள்ள ஒரு சிக்கலான தொழிலைச் சர்க்காரே எடுத்துக் கொண்டு மானேஜரும், கிளார்க்கும், சப்ராஸியும் வைத்துக் கொண்டு வியாபாரம் செய்து விடலாம் என்று நினைப்பது வடிகட்டின மடமையாகும். நாற்பது கோடி மக்களுக்கு வேண்டிய உணவைக் கொள்முதல் செய்வது, சேமித்து வைப்பது, ஓரிடத்திலிருந்து வேறிடம் கொண்டு செல்வது, விநியோகிப்பது, இவ்வளவுக்கும் கணக்கு வைப்பது என்பதெல்லாம் இமாலய சாகஸமாகும். இவற்றில் ஒவ்வொரு நிலையிலும் லஞ்சமும், திருட்டும், தானியம் வீண் போவதும், எலி பெருச்சாளிகள் செழித்துக் கொழுப்பதும்தான் விளைவாகும். இதற்கான செலவுகளை யாரேனும் கணக்குப் போட்டுப் பார்த்திருப்பார்களா? தற்போது நடுவே புகுந்து கொள்ளையடிப்பதாகச் சொல்லப்படும் வியாபாரிகள் பெறும் லாபத்தை விடச் சர்க்காரின் செலவு நிச்சயம் அதிகமாக இருக்கும். எனவே, இறுதியில் இந்த அழகான சர்க்கார் வியாபாரத்தின் பயனாக **விலைகள் இப்போது இருப்பதைவிட அதிகமாகும்.** சர்க்கார் தொழிலின் திறமை அப்போதுதான் தெரியும். ஆனால் ஆட்சியாளர்களின் மாயை தெளிவதற்காக நாடு இவ்வளவு கொடிய கூலி கொடுக்கவேண்டிய அவசியமில்லை.

தற்போது சர்க்கார் தரப்பில் வாதிக்கப்படும் உணவுக் கட்டுப்பாடுகள் ஏதோ தாற்காலிகமாக இருந்து மறைந்து விடும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. காரணம், இதுவரை நாம் கூறி வந்த **விநியோகத்** துறையில் மட்டுமின்றி, அதற்கு ஆதாரமான **உற்பத்தித்** துறையிலேயே சர்க்கார் மாபெரும் தவறுகள் செய்திருப்பதுதான். நிகழ்கால நிலச் சட்டங்களின் கீழ் உணவு உற்பத்தியில் யாரும் நல்ல முதலீடு செய்ய முன் வர முடியாது. சிறு சிறு நில ஆஸ்திகளில் சிறு முதலீடுதான் செய்ய முடியும்; உற்பத்தியும் சிறுத்துக் கொண்டே வரும். எனவே உணவு தானியப் போதாக்குறை நிரந்தரமாகவேண்டியதுதான். அந்த நிரந்தரப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகக் கன்ட்ரோலும் சர்க்கார் வர்த்தகமும் நிரந்தரமாக வேண்டியதுதான். விவசாயிகள் நாடு என்று பறைசாற்றப்படும் நாட்டில் உணவுப் பிரச்னையும் நிரந்தரமாக வேண்டியதுதான். அதை மக்கள் பொறுக்க முடியாது. இவ்வாறு பாரத தேசம் முழுவதையும் வயிற்றிலடிக்காமல் காப்பாற்றிய புண்ணியத்தை ஸ்ரீ லால் பஹாதுர் அவர்களும், ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்களும் அடைவார்களா?

சட்டம் செய்வார்களா?

மக்களைப் பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாக்கும் சட்டங்களைப் போடுவதில் காங்கிரஸ் ஆட்சியாளருக்கு ஓர் அலாதி மோகம். அவர்கள் தங்களையே கட்டுப்படுத்தும் ஒரு சட்டம் விதிக்க வேண்டியதுதான் இப்போது உடனடியாகத் தேவை. லஞ்ச ஊழலை ஒழிப்பது பற்றி ஓயாமல் வாய்ப்பந்தல் போட்டு வரும் ஆட்சியாளர்கள் உண்மையாகவே இவ் விஷயத்தில் அக்கறை கொண்டிருந்தால் இச் சட்டத்தை அவசியம் செய்தாக வேண்டும். அதாவது தொழில் துறையில் சம்பந்தப்பட்ட எந்த மத்திய மந்திரியும், மாநில மந்திரியும், முதல் மந்திரிகளும் ஆளும் கட்சிக்குத் தேர்தல் நிதி சேகரிக்கக் கூடாது என்று ஒரு நியதி செய்து கொள்ள வேண்டும். தொழில் துறையில் யாரை வேண்டுமானாலும் உச்சியில் ஏற்றலாம்; யாரை வேண்டுமானாலும்

அதல பாதாளத்தில் தள்ளலாம் என்ற அதிகாரத்தைத் தொழில் மந்திரி காரியாலயங்கள் பெற்றுள்ளன. எனவே தொழில் துறையில் சம்பந்தப்பட்ட மந்திரிகளுக்குத் தொழிலதிபர்கள் எவ்வளவு அடங்கியிருக்க வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆளும் கட்சிக்குப் பணம் கொடுப்பது லஞ்சம் தவிர வேறு என்ன? லஞ்ச ஊழல் தீர வேண்டுமானால் இந்தப் பெரிய வடி காலைத் தூர்த்தேயாக வேண்டும்.

பெயரளவில் மந்திரிகள் பண வசூலில் ஈடுபடாததாகச் சொல்லிக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத மந்திரக் கயிறுகள் மூலம் பொம்மலாட்டம் நடத்தக்கூடும். சதாசார சமிதிகள் நடத்தி நாட்டில் தர்மத்தை ரட்சிக்கும் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா அவர்கள் தொழில் துறை மந்திரிகளைக் கட்டுப்படுத்த ஒருவிதி செய்து அதைச் சத்தியமாக நிறைவேற்றிக் காட்ட வேண்டும்.

என்ன சேதி?

உடும்புப் பிடியும் தளர்ந்தது!

பஞ்சாப் முதன் மந்திரியாயிருந்த ஸ்ரீ கெய்ரோன் அவர்கள் அதிகார துஷ்பிரயோகம் செய்தது ஊர்ஜிதமாகிவிட்டது. உடும்புப் பிடியாகப் பதவியைப் பிடித்துக் கொண்டிருந்த அவர் ராஜிநாமா செய்ய வேண்டி ஏற்பட்டு விட்டது. வெகு காலம் முன்பே இது நடந்திருக்க வேண்டும் என்று நினைக்கும் போது, நேருஜி அவருக்குக் காப்பாக இருந்ததும் நினைவில் வந்து உறுத்துகிறது. அதைப் பற்றி இப்போது சஞ்சலம் தேவையில்லை. மக்கள் கருத்து எத்தனையோ தடைகளை எதிர்த்து வெற்றி கண்டதை எண்ணிப் பெருமைப் படுவோம்.

தவறு செய்தவருக்கு ஆட்சி அதிகாரம் கிடையாதெனில் அவருக்கு ஆளும் கட்சியை ஆட்டி வைக்கவும் உரிமை இருக்கலாகாது. இதற்கு விரோதமாக ஸ்ரீ கெய்ரோன் இன்று கட்சியை ஆட்டி வைப்பதைப் பார்த்தாலே அக்கட்சி தர்மத்திலிருந்து எவ்வளவு விலகி விட்டது என்பது புரியும்.

ஜோதியில் கலந்தது!

பல பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர் காங்கிரஸில் சேர்ந்துவிட்டதை வரவேற்றுச் சென்ற இதழில் எழுதியிருந்தோம். தமிழ் தேசியக் கட்சியும் காங்கிரஸுடன் இணைந்துவிடப் போவதாக இப்போது செய்தி வெளி வந்துள்ளது. இம்முடிவை வரவேற்கிறோம். பெரியார் அவர்களும், திரு சம்பத் அவர்களும் பெயரளவில்தான் காங்கிரஸுக்கு வெளியே இருந்து வந்தார்கள். அப்படிப் பிரிந்திருப்பதாகக் காட்டுவதில் ஒரு மாயாஜாலம் இருந்தது. அதை விட்டு இப்போது காங்கிரஸ் கட்சியுடன் த. தே. க. அத்வைத முக்தி அடைந்திருப்பது மிகவும் நல்ல காரியம்.


இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஸ்ரீ லால் பஹாதூர் சர்க்காருக்குத் தனது ஆதரவை அளிக்கப்போவதாக ஜூன் 17ந் தேதி தீர்மானம் நிறைவேற்றி விட்டது. படிப்படியாக அக் கட்சியும் காங்கிரஸுடன் இரண்டறக் கலந்து விடலாம்.

இந்தோனேஷியாவைப் பார்!

இந்தோனேஷியாவில் சர்க்கார் தன் வசமாக்கிக் கொண்டிருந்த சில தொழில்களை இப்போது மீண்டும் தனியாருக்கு விற்கத் தொடங்கி யிருக்கிறது. தவறு செய்தாலும், தாமதமாகவேனும் அதனைத் திருத்திக் கொள்வதில் இந்தோனேஷிய சர்க்காரின் கவனம் சென்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். மனிதர்கள் இதயபூர்வமான ஈடுபாட்டுடன் சொந்த நலன்களை முன்னிட்டுத் தொழில்கள் நடத்தும்போதுதான் அவை செழிக்குமேயன்றி, உயிரற்ற சர்க்கார் யந்திரத்தின் நிர்வாகத்தில் தொழில்கள் ஒருபோதும் வளர முடியாது. இதை உணர்ந்து, இந்தோனேஷியாவில் சர்க்கார் தொழிலைத் தனியாரிடம் ஒப்பிக்கும் அதே சமயத்தில், இங்கே தனி மனிதர்கள் திறம்பட நடத்தி வந்த தொழில்களின் தலையில் கையை வைக்கும் இந்திய சர்க்கார் என்று ஞானோதயம் பெறுமோ?

அகதிகள் கற்பிக்கும் பாடம்

கிழக்கு வங்காளத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு அனுப்பப்பட்ட அகதிகளுக்குச் சேலம், கோவை மாவட்டங்களிலுள்ள தொழிற் கூடங்களிலும் மற்ற இடங்களிலும் வேலை தேடித் தந்து, புனர்வாழ்வு அளிக்கத் திட்டம் வகுத்தார்கள். ஆனால் அகதிகள், தொழிற் கூடங்களில் வேலை செய்ய மறுத்துவிட்டு விவசாயம் செய்ய நிலமும், எருதும், பசுமாடும், வீடும் வேண்டுமென்று



சென்னை சர்க்காரைக் கேட்டிருக்கின்றனர். இவற்றைத் தர இயலாவிடில் தங்களை மத்தியப் பிரதேசத்திலுள்ள ராய்ப்பூருக்கே திருப்பி அனுப்பிவிடுமாறு கூறியிருக்கின்றனர். இவர்களை 'அகதிகள்' என்று எப்படி அழைப்பது என்று நமக்குக் கூச்சம் ஏற்படுகிறது. ஆனால் இதிலிருந்தும் நமது சர்க்கார் பெறக்கூடிய பாடம் ஒன்று இருக்கிறது.

இந்த அகதிகள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வருஷம் 6000 ரூபாய் வருமானம் பெற்று வந்தவர்கள். வருடத்தில் மூன்று நான்கு மாதம் வேலை செய்துவிட்டு மற்ற மாதங்களில் வெறுமே யிருந்தவர்கள்தான் என்று அவர்களே கூறுகிறார்கள். இப்போது வேறு தொழில்களில் ஈடுபடத் தயாராயில்லை என்கிறார்கள்.

விவசாயம் என்பது ஒருவித வாழ்க்கை முறை. அந்த வாழ்க்கை முறையில் ஈடுபட்டவர்களுக்குக் கைகட்டிச் சேவகம்செய்ய மனம் வராது. இதுதான் கிழக்கு வங்காள அகதிகள் கூறுவதிலுள்ள உண்மை.

நில உரிமைகளை நாசமாக்கி வரும் அரசாங்கம் கண் விழிக்குமா?

ஆஸ்பத்திரியில் அசிரத்தை

காகினாடாவிலிருந்து ஒரு துயரம் தரும் செய்தி வந்திருக்கிறது. சர்க்கார் ஆஸ்பத்திரியில் உரிய தருணத்தில் பிராண வாயு சிகித்ஸை தர முடியாததால் ஒரு பத்து மாதக் குழந்தை இறந்து விட்டது. குழந்தையின் நிலையைப் பரிசோதித்த டாக்டர் பிராண வாயு செலுத்த வேண்டும் என்று கூறி விட்டுப் போய்விட்டார். ஆஸ்பத்திரியில் உள்ள சிப்பந்திகள் அவசர உணர்ச்சியே காட்டவில்லை. குழந்தையின் தந்தையே 11 மணியிலிருந்து ஒவ்வொரு வார்டாக அலைந்து கெஞ்சிக் கூத்தாடிக் கடைசியில் 2 – 45 மணிக்குத்தான் ஸிலிண்டர் கொண்டுவர முடிந்தது எனச் சொல்லப் படுகிறது. குழந்தையின் உயிர் அதுவரை பொறுத்திருக்கவில்லை.

தற்போதுள்ள கொட்டகை வார்டில் குழந்தைகளால் கடும் கோடையைத் தாங்க முடியாது, உடனடியாக நல்ல கட்டடத்துக்கு மாற்றவேண்டும் என்று டாக்டர் வற்புறுத்தி வந்திருக்கிறாராம். காகினாடாவில் உஷ்ணம் 108 டிகிரியிலிருந்து 112 டிகிரி வரை இருந்திருக்கிறது என்பதை நினைவில் கொண்டால் அந்த வார்டிலிருந்த குழந்தைகள் என்ன பாடு பட்டிருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

காலம்சென்ற பிரதமரின் நினைவாக ஏதாவது செய்ய வேண்டுமெனில் அது குழந்தைகளின் நலனைக் கவனிப்பது தான். காகிநாடாவில் நடந்த கொடுமை வேறெங்கும் நடக்காதிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.



ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்

சிறு குழந்தைகளுக்கு மிகவும் சிலாக்கியமானது

1. உயர்ரக டால்க்கிலிருந்து தயாரிக்கப்படுகிறது. 2. குழந்தையின் சருமத்தை மென்மையாகவும், மிருதுவாகவும் வைக்கிறது. 3. சருமத்தில் அழற்சி, எரிச்சல் இல்லாமல் பாதுகாக்கிறது. 4, வியர்வையை உறிஞ்சி குழந்தையை குளுமையுடன் இதமாக வைக்கிறது. 5. மென்மையான சுகந்தம் கொண்டது. 6. கெடுதல் விளைவிக்காதது, பரிசுத்தமானது, சுகாதார முறையில் பாக் செய்யப்பட்டது. 7. குழந்தையை குளிப்பாட்டிய பிறகும், இடுப்புத்துணியை மாற்றும் போதும் உபயோகிக்கலாம்.

75 வருஷங்களுக்கும் மேலாக குழந்தைகளுக்கான மிகச் சிறந்த பொருள்களைத் தயாரிப்பவர்கள்

ஜான்ஸன் & ஜான்ஸன்
ஆ∴ப் இந்தியா லிமிடெட்
30, ∴போர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்-26

* டிரேட் மார்க்

JWT-JJ-2574

கயல் விழி

அகிலன்

பத்தொன்பதாம் அத்தியாயம்

தலைவன் எங்கே?



செய்தியைக் கேட்ட குலசேகர பாண்டியரின் துயரம் தனது எல்லையை மீறி அவரைச் செயல் இறந்தவராகச் செய்து விட்டது. அந்தக் குகைக்குள்ளே உருவாக்கிய குடவரைச் சிலைபோல் சலனமின்றி நெடுநேரம் சாய்ந்திருந்தார். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற குறளைக் கூறி, துன்பம் வருங்காலத்தில் நகைக்கச் சொல்லும் விழுப்பரையரே தேம்பி அழுதது அவருக்கு வேதனையைத் தந்தது.

மௌனத்தைக் கலைத்து மெதுவாகப் பேசினார் பாண்டியர்.

''நாட்டின் எதிர்காலத்து நம்பிக்கையின் பேருருவமாக அவன் எனக்குத் தோன்றினான். பாண்டிய மண்டலத்தின் விடுதலையும் வீறுகொண்ட வளர்ச்சியும் தவிர வேறு எந்தச் சிந்தனையும் அவனிடமில்லை. நினைவில், சொல்லில், செயலில் அவன் சிறுமைகளை அழிக்கும் வீரனாக விளங்கினான். நாட்டின் சிறப்பெல்லாம் ஒன்று சேர்ந்து தனக்குக் காவலனாக அவனைத் தேடியிருக்கிறது என்று நான் பெருமை கொண்டிருந்தேன்....அவன் இந்த நாட்டின் இலட்சியவீரன்...வருங்கால நம்பிக்கை...இனி அவன்?...''

உருக்கம் நிறைந்த பாண்டியரின் குரலைக் கவனமாகக் கேட்டார் விழுப்பரையர். எப்படியாவது பாண்டியரின் மனச்சுமை குறைந்தால் போதும் என்ற எண்ணம் அவருக்கு.

பாண்டியர் தொடர்ந்தார்:

''அரண்மனையின் சுகபோக வாழ்வை அவன் அலட்சியம் செய்து பழகினான். கடுமையான உழைப்பிலும் இடர்கள் நிறைந்த சாதனைகளிலுமே அவன் மனம் ஒன்றியிருந்தது. நாட்டைச் சுற்றிவிட்டுத் தலைநகருக்குத் திரும்பும்போதெல்லாம் அவன் குடிமக்களின் துன்பங்களையே தனக்குள் சுமந்து வருவான். கோல் உயர்ந்து, குடி உயர்ந்து செல்வச் செழிப்போடும், மன மகிழ்ச்சியோடும் மக்களை விளங்கச் செய்ய வேண்டுமென்ற பெருநோக்கு அவனுக்கு. நாடு உறங்கும் நள்ளிரவு வேளைகளிலும் தான் உறங்காமல் விழித்திருந்து அரசியல் கடமைகளுக்குத் துணை செய்வான்.''

''தீவிரமான அன்புக்கு ஒரு மாபெரும் தீய சக்தி இருக்கிறது. குடிமக்களிடம் அவர் கொண்ட அன்பு தியாக உணர்ச்சி கொண்டது. மக்களில் பலர் அவரை நேரில் பார்த்து அறியாவிட்டாலும் இந்த அன்பை அவர்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள். அவர் வீழ்ந்த செய்தி இப்போது காட்டுத்தீபோல் நாடெங்கும் பரவி விட்டது. மக்கள் இப்பொழுது மிகவும் கொதிப்படைந்திருக்கிறார்கள். சோழர்களின் படை வலிமையால் இனி இந்த நாட்டை ஆண்டுவிட முடியாது'' என்றார் விழுப்பரையர்.

''நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'' என்று கேட்டார் பாண்டியர்.

''இனி இந்த நாட்டைப் பிறர் ஆளமுடியாது. இப் போரில் நாடு அழியலாம்; ஆனால் மக்களின் உரிமை உணர்ச்சி கொழுந்து விட்டு எரியத்தான் செய்யும். இன்று



இல்லாவிட்டாலும், விரைவில் தங்களைத் தேடிப் பிடித்துத் தங்களிடம் ஆட்சியை ஒப்புவிக்கப் போகிறார் குலோத்துங்கர்.''

நாடெங்குமுள்ள வளநாட்டுத் தலைவர்களுக்குப் பாண்டியர் பத்திரமாக இருக்கும் செய்தி அனுப்பபபட்டுவிட்டதென்றும், இளவரசரைக் கொன்ற சோழர்களின் ஆட்சி ஒருநாள் கூட அந்த மண்ணில் நடைபெறுதபடி அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றும் உறுதியோடு கூறினார் விழுப்பரையர். ''உயிர் வாழ்ந்த சுந்தர பாண்டியருக்கு இருக்கும் சக்தியைவிட

மக்களுக்காக உயிர் நீத்த இளவரசருக்குச் சக்தி அதிகம்'' என்றார்.

''மதுரையில் இப்போது என்ன நடைபெறுகிறதென்று கூறவில்லையே?'' என்று குறுக்கிட்டார் பாண்டியர்.

விழுப்பரையர் இதைக் கேட்டுத் துணுக்குற்றார். அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த பழி வாங்கும் வெறிச் செயல்கள் கட்டுக்கடங்காதவை. குலோத்துங்கரின் வெஞ்சினம் எந்த எல்லைக்குச் செல்ல முடியுமோ அதையும் அப்போது கடந்து விட்டது. மதுரை மதுரையாக இல்லை. பாண்டிய நாடு பாண்டிய நாடாக இல்லை.

* ''மதுரைமா நகரத்தை இடுகாடாக மாற்றி அங்கேயே வெற்றி விழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகிறார் குலோத்துங்கர்'' என்றார் விழுப்பரையர். ''மதுரை நகரத்தின் பெயரையே மாற்றி, 'முடித் தலை கொண்ட சோழபுரம்' என்றும், பாண்டிய மண்டலத்தைச் 'சோழ பாண்டிய மண்டலம்' என்றும் புதுப் பெயர்களால் அழைக்கப் போகிறார்களாம். நம்முடைய அரண்மனை மண்டபத்துக்குச் 'சேர பாண்டியர் தம்பிரான்' என்று பெயரெழுதி, அதில் இருந்து 'திரிபுவன வீரர்' என்றும், 'சோழபாண்டியர்' என்றும் வீரமுடி சூட்டிக்கொள்ளப்போகிறாராம் சக்கரவர்த்தி.''

நீண்ட பெருமூச்சு விட்டார் குலசேகர பாண்டியர்.

''அதோடு நிற்காமல் அவருடைய தோள் வலிமையைப் பாடிய பாணன் ஒருவனுக்கு அவர் பாண்டியர் என்று பட்டம் சூட்டி நம்மைச் சிறுமைப் படுத்தப் போகிறாராம். — செய்வது எதுவுமே நிலைத்து நிற்கப் போவதில்லை; நாடு விழித்துக் கொண்டு விட்டது.''

விழுப்பரையரிடம் அவருடைய குடும்பத்தைப் பற்றி விசாரித்துவிட்டு, ''தங்கள் குமாரன் ஆலவாய் நம்பி நலமாக இருக்கிறானா?'' என்று கேட்டார் பாண்டியர்.

''அவன் வீர சுவர்க்கம் புகுந்து விட்டான்'' என்று எவ்விதக் கலக்கமுமின்றிக் கூறினார் விழுப்பரையர். ''இளவரசர் மீது குலோத்துங்கர் குறி வைத்திருந்தார் என்பதால் முதலில் அவனை இளவரசரின் உடையில் அனுப்பி வைத்திருந்தேன். சோழ நாட்டு வீரர்கள் தங்கள் சக்கரவர்த்தியிடம் பரிசில் பெறுவதற்காக அவனைச் சின்னாபின்னப் படுத்திவிட்டார்கள்.''

''விழுப்பரையரே!'' என்று உணர்ச்சி பொங்கக் கூறி, அவரது கரங்களைப் பற்றிக் கொண்டார் பாண்டியர். ''இதைத் தாங்கள் முன்பே கூறவில்லையே! சுந்தரபாண்டியனைக் காக்கும் முயற்சியில் அடுத்தவனையும் பலி கொடுத்து விட்டீர்களே!''

''நாழிகையாகிறது; நான் சென்று வருகிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டு எழுந்தார் விழுப்பரையர். பின்னர் வேகமாக இறங்கி மலையடிவாரத்துக்கு வந்தார். காவலர்களிடம் விழிப்போடிருக்கும்படி கூறிவிட்டு, ஒரு மரத்தடியில் நின்ற தமது புரவியின்மீது ஏறிக் கொண்டார்.

ஆலவாய் நம்பியைப் பலி கொடுத்த பிறகும் இளவரசர் சுந்தரபாண்டியனைக் காப்பாற்ற முடியுமா என்ற ஐயம் அவருக்குள் வலுத்து வந்தது. போர்க்களத்தில் உருக்குலைந்து போன புதல்வனைப் பொருட்படுத்தாமல் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்த சுந்தர பாண்டியனை அவர் எப்படியோ அன்றைக்கே தூக்கி வந்து விட்டார். அங்கிருந்து அழகர்மலைக் காட்டுக்கோ வேறு எங்கோ அவனைத் தூக்கிச் சென்று மறைவிடத்தில் வைக்கலாமென்று அவருக்குத் தோன்றியது. ஆனால் நினைவிழந்து பேச்சற்றுக் கிடந்த அவனது உடல்நிலை அந்தச் சிறு பிரயாணத்தைக் கூடத் தாங்கக் கூடியதாக இல்லை.

மதுரையின் புற மதிலுக்கு நெடுந் தூரத்தில் வைகைக் கரையோரமாகப் புதர் சூழ்ந்த குடிசை வீடுதான் அப்போதைக்குக் கிடைத்தது. நம்பிக்கையான மருத்துவரின் பொறுப்பில் அவனை விட்டு விட்டு வந்திருந்தார். மருத்துவராலும் திட்டமாக ஏதும் கூற முடியவில்லை. மார்பெங்கும் அம்புகள் துளைத்து வேல்கள் கிழித்திருந்ததால் அவன் பிழைத்து எழுந்தால் அது மறு பிறவிதான்.

---

*''சோழபாண் டியன்என்று
போர்வீரர் கள்களிப்ப
வீரமா முடிபுனைந்து
திரிபுவன வீரரென்று....
வண்டரைதார் *வழுதியரைக்
கொண்டபாண்டி மண்டலத்தைச்
சோழபாண்டியன் மண்டலமென்று
ஏழுபாருஞ் சொலநிறுத்தி
மல்லல்வைய மதுரையையும்
மதுரையென்ற பேரொழித்துத்
தொல்லைமுடித் தலைகொண்ட
சோழபுர மென்றருளித்
தார்வழுதி மண்டபத்தில்
சேரபாண்டியர் தம்பிரானென்றெழுதி..
பாணனைப் பாண்டியனென்று
பருமணிப் பட்டஞ்சூட்டி....''
—மூன்றாம் குலோத்துங்கர் மெய்க்கீர்த்தி.

---

* வழுதியர் - பாண்டியர்.


MAFATLAL
GROUP



நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்

டாடா-ஃபின்லே
தேயிலை


ஈடில்லாத தேயிலை!

புத்தம் புது தேயிலை
•
சுவையுள்ள தேயிலை
•
சிறந்த தேயிலை

டாடா-ஃபின்லே தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!



பின்வரும் ஐந்து
ரகங்களில்
கிடைக்கிறது:
ப்ரெஸ்டிஜ் டார்ஜி
லிங்-டின்களில்.
லலித்-பொன்னிற
அட்டைப் பெட்டியில்
மிலாப்-வெள்ளி நிற
அட்டைப் பெட்டியில்
பஹாதூர்-ஆரஞ்சு நிற
அட்டைப்பெட்டியில்
ஷான்-நீல நிற
அட்டைப்பெட்டியில்



BI-TFN-5-TAM

அந்த மறு பிறவியைக் கொடுத்து அவனைக் காப்பாற்றும்படி ஆலவாய் அண்ணலையும், அங்கயற்கண்ணி அம்மையையும் வழுத்திக் கொண்டே மதுரையை நோக்கிப் பறந்தார் விழுப்பரையர். நல்லோரைக் காப்பதற்காகத் தானே நஞ்சை உண்ட தியாகச் செம்மல் ஆலவாய் அண்ணல்; அவனையே காத்தவள் அருளம்மை. அவர்களை நினைத்துக் கண்ணீர் பெருக்குவதைத் தவிர அவருக்கு வேறெதுவும் தோன்றவில்லை.

பொழுது சாய்ந்த வேளையில் விழுப்பரையரின் குதிரை வைகைக் கரையை அடைந்தது. குடிசைக்குள் நுழையப் போன விழுப்பரையர் அதன் வெளியே கண்ட கலவரக் காட்சியால் திடுக்கிட்டு நின்றார். காவலுக்காகப் புதர்களில் மறைந்திருந்த வீரர்கள் விழுப்பரையரைக் கண்டவுடன் நடுநடுங்கினர். மருத்துவர் ஓடோடியும் வந்து அவர் பாதங்களில் விழுந்து பற்றிக் கொண்டு அழுதார்.

சுந்தர பாண்டியனை அங்கு காணவில்லை. அவனைக் கிடத்தியிருந்த இடம் வெற்றிடமாக இருந்தது.

மருத்துவர் பச்சிலை பறித்து வரச் சென்று அப்போதுதான் திரும்பி வந்தாராம். புதர்களில் மறைந்திருந்த ஆபத்து உதவிகளும் வெளியிலிருந்து யாரும் வந்ததைத் தாங்கள் காணவில்லை என்றார்கள். ''அவருக்குச் சுயநினைவு வந்து விட்டது; ஆனால் அசையக் கூட முடியாத நிலையில் கிடந்தார்'' என்றார் மருத்துவர். கைகளைப் பிசைந்தவாறு வகை தெரியாமல் விழித்தனர் காவலர். விழுப்பரையரின் நெஞ்சு பதறியது.

இருபதாம் அத்தியாயம்

கண்ணகி வந்தாள்

நான்மாடக் கூடல் என்ற பெயர் விளங்க நான்கு புறங்களிலும் புற மதிலில் நான்கு பெரும் கோபுர வாயில்களைக் கொண்டிருந்த அந்த அழகான மதுரைத் திருநகரம் எங்கே போய் விட்டது? அதற்கு முன்பு, எத்தனை எத்தனையோ படையெடுப்புக்களையும் போர்களையும் கண்ட நகரம்தான் அது. ஆனாலும் இம்முறை போல் என்றுமே அது அவ்வளவு கொடுமைக்கு உட்பட்டதில்லை.

ஆலவாய் அண்ணலின் கோவிலும் கோபுரங்களுமே எஞ்சியிருந்தன. வைகை நதி கூடத் தன் திசை மாறி நிறம் மாறி நகருக்குள் இரத்த ஆறாகப் பெருக்கெடுத்து விட்டது. அந்த ஆற்றுப் பெருக்கிடையே அங்கங்கே திட்டுத் திட்டாகப் பாறைகள் முளைத்திருந்தன. அவை பாறைகளா, அல்லது மத்த மதக் களிறுகளின் சடலங்களா?

குன்றுகளெனச் சரிந்த யானைகள், உடைந்து ஒதுங்கிய தோணிகள் போன்ற குதிரைகள், திரும்பிய திசைகளிலெல்லாம் வீர சுவர்க்கம் புகுந்த வீரர்கள்! செஞ்சோற்றுக் கடன் தீர்க்கப் போராடியவர்கள் செஞ்சேற்றுப் புழுதியில் புன்முறுவலோடு புரண்டு கிடந்தார்கள்.

வீரர்களைப் பெற்றெடுத்த அன்னையர் அவர் தம் கரம் பற்றிய கற்பரசியர், இவர்கள் யாவரும் அவர்களைச் சார்ந்த வீரர்களைக் களத்தில் தேடி அலைந்த அலைச்சலையும், நாடிக் கூவிய கூக்குரலையும் எங்ஙனம் கூறுவது? தம் கணவரது உடல்களைக் காண முடிந்த சிலர் அவர் தம் பரந்த மார்பில் துடித்து வீழ்ந்தவாறே மீளா உலகுக்குச் சென்றனர் — அவர்களைத் தேடி. சிலர் முட்டி மோதிக் கொண்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டவாறே மயங்கிச் சாய்ந்தனர். இன்னும் சிலரோ அவர் சிதைவுண்டு கிடக்கும் கோரக் காட்சியைக் கண்டவுடன் சித்தப்பிரமை கொண்டு விட்டனர்.

செந்தமிழ் வளர்த்த மதுரையையோ செந்தழல் பற்றிக் கொண்டு விட்டது. வானத்திலே புகை மூட்டமும் பருந்துக் கூட்டமும் சூழ்ந்து கொண்டன. பாண்டியரின் அரண்மனை இருந்த இடத்தில் ஒரே ஒரு பெரிய மண்டபம் மட்டிலும் தனித்து நின்றது. — சக்கரவர்த்தியின் வெற்றி விழா மண்டபம் அது; அதற்குத்தான் 'சேர பாண்டியர் தம்பிரான்' என்ற தம்முடைய விருதுப் பெயர்களில் ஒன்றைச் சூடியிருந்தார் குலோத்துங்கர்.

கோயிலையும் அதைச் சூழ்ந்திருந்த இரண்டு தெருக்களை மட்டிலும் அழிவுக்குள்ளாக்காமல் விட்டிருந்தனர் சோழப் படையினர். தங்களது சொந்தக் குடியிருப்பு வசதிக்காக அவர்கள் செய்து கொண்ட ஏற்பாடு அது. கொள்ளைகொண்ட பொருட்குவியல்கள், கைப்பற்றப்பட்ட தானியக் களஞ்சி

யங்கள், கவர்ந்து சென்ற கன்றுகாலிகள் இவை சில மாளிகைக்குள்ளும் வெளியிலும் நிரம்பியிருந்தன. போரில் வீழ்ந்த பாண்டிய வீரர்களின் படைக்கலன்களும் குதிரைகளும் யானைகளும் அங்கங்கே தென்பட்டன. வெற்றிச் செருக்குற்ற வீரர்கள் சக்கரவர்த்திகளின் ஆணையால் நடைபெற்ற உண்டாட்டு விழாக்களில் கலந்து கொண்டு உண்டும் குடித்தும், களி வெறி கொண்டு திளைத்தனர். சிறுசோற்று விழாக்களும் பெருஞ்சோற்று விழாக்களும் சோழப் படையினருக்கு மாறி மாறி நடைபெற்றன.

இளவரசன் சுந்தரபாண்டியனை உயிருடனோ சடலமாகவோ கொண்டு வருபவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதாகக் கூறியிருந்தாரல்லவா சக்கரவர்த்தி? நூறு பேர்களுக்கு மேல் அதற்கு உரிமை கொண்டாடிப் போட்டியிட்டனர். அனைவருக்குமே தாராளமாக வழங்கினார் சக்கரவர்த்தி. இளவரசனின் மணி முடியைக் கொண்டு வந்தவனுக்கும் உடைவாளைக் கொண்டு வந்தவனுக்கும் தனித்தனியே பதின்மடங்கு பரிசில்கள் கிடைத்தன. அந்த மணி முடியையும் உடை வாளையும் பார்த்துப் பார்த்து ஒருவாறு தமது வெஞ்சினம் தணியப் பெற்றார் அவர்.

மாலைக் கதிரவன் மதுரை நகரத்தில் நடைபெற்று வந்த அந்தத் துயரக் காட்சிகளைக் காணச் சகியாதவன் போல் தனது கிரணங்களைச் சுருக்கிக் கொண்டு மேற்குப்புற மலைச் சரிவுகளின் பின்னால் நழுவத் தொடங்கினான். அப்போது வைகையாற்றுக் கரையோரம் வளர்ந்து நின்ற ஒரு வேப்ப மரத்தின் உச்சியில் ஒரு கிளை சிறிது அசைந்தது. இலைகள் அடர்ந்திருந்ததால் அதற்குள்ளிருந்த உருவம் சரியாகத் தெரியவில்லை.

நெற்றிப் புருவத்துக்குமேல் தனது கையை வைத்துக் கதிரொளியை மறைத்துக் கொண்டு அந்த உருவம் தொலை தூரத்துக்கு உற்றுப் பார்த்தது. புகை மூட்டத்துக்கிடையிலும் பருந்துக் கூட்டத்துக்கிடையிலும் அவன் விழிகள் ஊடுருவி நோக்கின. மதுரைப் பெரு நகரமாக விளங்கிய அந்த ஊருக்குள் இன்னும் வீரர்களின் நடமாட்டம் இருந்தது. பெண்களின் கூக்குரல்கள் திடீர் திடீரென்று எழுந்தன. குதிரைகள் மீது வெறியோடு பாய்ந்து வரும் சில வீரர்களைக் கண்டு பெண்கள் தறி கெட்டு அங்குமிங்கும் ஓடுவதும் தெரிந்தது.

பின்னர் பாண்டியரின் அரண்மனை இருந்த திசையை நோக்கியது அந்த உருவம். ஒரே ஒரு மண்டபத்தைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் நூற்றுக்கணக்கான கழுதைகளுக்கு ஏர் பூட்டி உழுது கொண்டிருந்தார்கள் வென்றவர்கள். உழுவதற்குத் தண்ணீர் அவர்களுக்குத் தேவையில்லை. செந்நீரால் முன்னமேயே அது சேறாகிக் கிடந்தது. அவர்கள் உழுது விட்டு அதே இடத்தில் வரகுத் தானியத்தையோ கொள்ளையோ தூவி விதைக்கப் போகிறார்கள் என்பதும் விளங்கி விட்டது.— வெற்றியின் புகழ்க் கதிர் அது!

வைகை நதி வெள்ளத்தில் புரண்டு வந்த பல்வேறு வகைச் சடலங்களைக் கண்டபோதும் வேப்ப மரத்தின் கிளையிலிருந்த உருவம் அதிர்ச்சி அடையவில்லை. யானைகள், குதிரைகள், வீரர்கள் அடித்து வரப் பெற்ற போதெல்லாம் அது பதறவில்லை. இடையிடையே பெண்களின் உடல்கள் காணப்பட்ட போதுதான் அந்தக் கிளையே நடுங்கியது.

கரையின் மீது பின்புறம் யாரோ ஓடி வருவது போல் சத்தம் கேட்கவே சட்டென்று திரும்பிப் பார்த்தது அது. தொலைவில் தலைவிரிகோலமாக ஒரு பெண்பிள்ளை ஓடிவந்து கொண்டிருந்தாள். பின்னால் யாரேனும் துரத்தி வருகிறார்களோ என்று ஒரு கணம் தயங்கியது அவ்வுருவம். அப்படி யாரும் வரவில்லை. அப்பெண்பிள்ளை ஏன் அவ்வளவு துடிப்போடு ஓடி வருகிறாள் என்பது அதற்கு விளங்கிவிட்டது. புரண்டு ஓடும் வைகை வெள்ளத்தில் தஞ்சம் புக வந்தவள்தான். அவளுடைய நெஞ்சே அவளைத் துரத்திவர அதனிடமிருந்து தப்புவதற்காக அவள் ஓடி வருகிறாள்.

கிளையைப் பற்றித் தொங்கியவாறே தரையில் குதித்தான் அந்த இளைஞன். ஒரு போர்வை அவனுடைய உடலை நன்றாக மறைத்திருந்தது. சரேலென்று குறுக்கே வந்து நின்று அவள் வழியைத் தடுத்தான்.*

''இதோ பார், நில்! நீ எங்கே போகிறாய்?''

அவள் அவனைச் சிறிதுகூடப் பொருட்படுத்தவில்லை. அவன் மரத்திலிருந்து குதித்ததையோ, வழியில் வந்து நின்றதையோ, தன்னிடம் பேசியதையோ

* இந்தக் காட்சியை இவ்விதழ் அட்டைச் சித்திரமாக அளிக்கிறார் ஓவியர் வினு.

உணராதவள்போல் அவள் எங்கோ நினைவாக இருந்தாள். ஓட்டத்தின் வேகம் மட்டிலும் அவனுடைய குறுக்கீட்டால் சிறிது குறைந்தது. அவனைத் தாண்டிப் போக முடியாதபடி கரை குறுகலாக இருந்ததால் சட்டென்று நின்றுள்.

''இதோ பார், நீ எங்கே போகிருய்?'' என்று திரும்பவும் கேட்டான் இளைஞன்.

''நானு?'' அவள் பயங்கரமாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவனை நடுங்கச் செய்தது. ''சீ! வழியை விடு; நான் எங்கே போனுல் உனக்கென்ன?'' என்றுள் அவள்.

இத்தகைய அவமானத்தை அந்த இளைஞன் தன் வாழ்நாளில் கண்டதில்லை. ஆனுல் அவளோ தாங்க முடியாத துயரத்தால் ஏற்பட்ட சித்தப் பிரமையால் பேசுகிருள் என்பது தெரிந்தது. அவள்மீது அநுதாபம் கொண்டு ஒரளவு பொறுமையைக் கடைப்பிடித்தான்.

அவள் நெற்றி எங்கும் சுருள் சுருளான கேசம் புரண்டு காற்றில் அலைந்தது. கண்கள் எங்கோ, எதையோ நோக்கிக் கொண்டிருந்தன. சட்டென்று அந்த இளைஞனுக்கு ஒரு பழைய காட்சி நினைவில் பளிச்சிட்டது. மதுரைமா நகரத்தை எரித்த பத்தினித் தெய்வம் கண்ணகியாக முன்பு அவளை ஏதோ ஓர் அரங்கத்தில் கண்ட நினைவு அவனுக்கு.

முன்பு அவள் அரங்கத்தில் நடித்தாள். இப்போதோ மதுரையை எரித்துவிட்டு வரும் மாபத்தினியாகவே எதிரில் நிற்கிருள்.

''நீ வந்து... நீ... உன்னை.....'' என்று தடுமாறினுன் அந்த இளைஞன். பிறகு, ''யார் நீ?'' என்று அதட்டிக் கேட்டான்.

''யார் நீ?'' என்று திருப்பி அதட்டினுள் அவள். 'என்னைப் பற்றிக் கேட்க நீ யார்? என்னைத் தடுத்து நிறுத்த நீ யார்? என் வழியில் குறுக்கிட நீ யார்?' என்று அவளுடைய விழிகள் அவனைக் கேட்கத் தொடங்கின.

''நான் ஒரு புலவன்; இந்த நாட்டுப் புலவன்'' என்றுன் இளைஞன்.

''புலவனும், புலவன்! பேடிகள், பேடிகள், ஒரே பேடிகளின் கூட்டம்! இந்த நாட்டில் ஆண்கள் கூடவா இருக்கிருர்கள்.....''

''பெண்ணே அளவுக்கு மீறிய துயரத்தால் நீ குழம்பியிருக்கிருய். இந்த நிலையில் நீ என்ன முடிவு செய்தாலும் அது சரியான முடிவாக இருக்காது. அதை மட்டும் நான் இப்போது கூற விரும்புகிறேன்'' என்றுன் அவன்.



பிரின்ஸிபால்: இந்தாங்க தட்சிணை!

புரோகிதர்: தட்சிணை வேண்டாம், சார்!

பிரின்ஸிபால்: தட்சிணையை வேண்டாங்கிறவா கூட உண்டோ! ஏன் வேண்டாங்கிறேள்!

புரோகிதர்: தட்சிணைக் காசை எடுத்துக் கொண்டு அந்த இடத்திலே என் பையனுக்கு காலேஜ் அட்மிஷன் சீட்டை வைத்துக் கொடுத்துவிடுங்கள்!

''ஐயா புலவரே! படுகளம் பற்றி எரிகிற வேளையில் நீர் இப்படி வீணுக ஓர் அபலையிடம் வாதம் செய்து கொண்டு நிற்கிறீர். இதைவிட நீர் போய் அந்தச் சக்கரவர்த்தியைப் புகழ்ந்து பாடி ஏதாவது பரிசு பெற்று வரலாம். தன்னைப் பாடிய பாணன் ஒருவனுக்கு அவன் பாண்டியன் என்று பட்டம் சூட்டிப் பெருமை தந்திருக்கிருனும். நீரும் அங்கே போகலாம்; அல்லது உம்முடைய எழுத்தாணியை எறிந்துவிட்டுக் களம் புகுந்தாவது உயிர் துறந்திருக்கலாம். இது பேடித்தனம்; வழியை விடுங்கள்!''

''கயல்விழி!'' என்று அதட்டினுன் இளைஞன்.

''அவள் செத்துப் போய்விட்டாள்; அவள் செத்துப் போய் விட்டாள்!'' என்று நாத்தழுதழுக்கக் கூறிவிட்டு, ''தயைசெய்து எனக்கு ஓர் உதவி நீங்கள் செய்கிறீர்களா?'' என்று மன்றுடினுள் கயல்விழி.

''என்ன?''

''வழியை விடுங்கள்; என்னை வைகைத் தாய் அழைக்கிருள்!''

சரேலென்று பாய்ந்தோடி நதியில் குதிக்கப் போனுள் அவள். இளைஞன் சற்றுத் திரும்பி மெல்லத் தன் கரத்தால் அவளைப் பற்றினுன். அந்தப் பிடியே அவளுக்கு இரும்புப் பிடியாக இருந்தது. அவள் திமிறிக்கொண்டு பாயத் துணிந்தாள். (தொடரும்)



படம் பிடிக்கும் போதினிலே..

சினிமாப் படத்தின் இன்றியமையாத சாதனம் காமிரா என்பதை யாவரும் அறிவர். படத்தின் வெற்றி, தோல்வி இரண்டுக்கும் ஆதாரமாயிருப்பது ஒளிப்பதிவு தான். நம் தமிழ்ப் படாதிபதிகள், முன்பு— அதாவது சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு – படப் பிடிப்புக்கு கல்கத்தா, பம்பாய் என்று ஓடிக் கொண்டிருந்தார்கள். (இப்பொழுது கதைக்கு மாத்திரம் 'வடநாட்டுக்குக் காவடி தூக்குகிறார்கள்!) இதற்குக் காரணம் ஒன்று சென்னையில் எல்லா வசதிகளும் கொண்ட ஸ்டுடியோக்கள் இல்லாதது; இரண்டாவது சரியான ஒளிப்பதிவுக் கலைஞர்கள் இல்லாதது. இப்போது நிலைமை அடியோடு மாறிவிட்டது. சென்னையில் இருப்பது போல் சினிமாத் துறைக் கலைஞர்கள் (டெக்னீஷியன்கள்) வேறு எந்த ஊரிலும் இல்லை. ஸ்டுடியோக்களும் சென்னையில் உள்ளதுபோல் வேறெங்கும் இல்லை. கலை நுணுக்கங்கள் அறிந்த பல நிபுணர்கள் தோன்றிப் படஉலகில் அபார சாதனைகளைச் செய்து வருகின்றனர்.

எந்தச் சினிமா நட்சத்திரத்துக்குக் காப்பி பிடிக்காது. எந்தச் சினிமா நட்சத்திரம் வெந்நீரில் குளிப்பதில்லை என்பன போன்ற உபயோகமற்ற செய்திகளை அறிவதில் காட்டும் ஆர்வத்தில் ஒரு துளிக்கூடச் சினிமாக் கலை நிபுணர்கள் விஷயத்தில் யாரும் காட்டுவதில்லை.

தினம் எண்ணிறந்த பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸைப் பற்றிப் பேசாத நாம் அது எங்காவது தடம் புரண்டு விழுந்து விபத்துக்குள்ளாகி விட்டதென்றால் அதன் டிரைவர் யாரென்று அறிந்து கொள்ள ஆவலாயிருக்கிறோம்; இத்தனை காலமாக விபத்து நேராமல் ஜாக்கிரதையாகவும் திறமையாகவும் என்ஜினைச் செலுத்தி நமக்குச் சேவை செய்த டிரைவரை இதற்கு முன்பு நினைத்துப் பார்த்ததுகூட இல்லை! இதே போன்றதுதான் திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு படத்தை உருவாக்கும் சினிமாக் கலை நிபுணர்கள் நிலையும். நல்ல படங்களை எடுத்தபோது கிடைக்கும் நல்ல பெயரைவிடத் தோல்விப் படங்களில் கிடைக்கும் கெட்ட பெயர்தான் நிலைக்கும்.

ஒளிப்பதிவுக் கலையில் திறமை வாய்ந்த கலைஞர்கள் சிலருள் ஸ்ரீ தம்புவும் ஒருவர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் அதிகமாகவே ஒளிப்பதிவுக் கலையில் அநுபவம் உள்ளவர். தமிழ்த் திரைப்பட உலகின் வளர்ச்சிக்குப் பல விதத்திலும் சேவை செய்து புகழ்பெற்ற பழம் பெரும் டைரக்டரான ஸ்ரீ கே. சுப்பிரமணியத்தின் மூலம்தான் ஸ்ரீ தம்பு திரை உலகில் புகுந்தார்.

திறமை மிக்க ஒளிப்பதிவுக் கலைஞரான கமால்கோஷிடம் பயிற்சி பெற்றவர் ஸ்ரீ தம்பு. பிறகு சைலன் போஸ், கே. ராம்நாத் ஆகிய அருங்கலை விநோதர்களோடு இணைந்து வேலை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது அவருக்கு: 1939ம் ஆண்டில் ஜெமினி ஸ்டுடியோவில் கமால்கோஷிடம் உதவியாளராகப் பணியாற்றினார். பிறகு ஜெமினி ஸ்டுடியோவிலேயே வேலைக்குஅமர்ந்து ''சக்ரதாரி'', ''சம்சாரம்'' ''ஔவையார்'' முதலிய வெற்றிப் படங்களை எடுத்தார் ஸ்ரீ தம்பு. ''வஞ்சிக்கோட்டை வாலிபனு''ம் இவர் எடுத்ததுதான். இன்னும் இவை போன்ற பல படங்கள் எடுத்துப் பேரும் புகழும் பெற்றார். சுமார் பதினொன்று ஆண்டுகள் ஜெமினியில் இருந்து விட்டு விலகி, ''ஒரே வழி'', ''கைராசி'', ''ஜூலா'', ''பரோஸா'', ''ஆலயமணி'' போன்ற வெற்றிப் படங்களை எடுத்தார்.

''உங்களுக்கு மிகவும் திருப்தியைத் தந்த படம் எது?'' என்று நான் கேட்ட கேள்விக்கு ''ஔவையார்'' என்று பதிலளித்தார் ஸ்ரீ தம்பு. ''இன்னும் ஒளிப்பதிவுக் கலையில் பல புதிய சோதனைகளைச் செய்து பார்க்க ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் போய் வர வேண்டும் என்பது என் நீண்ட நாளைய அவா. அந்த நாடுகளில் சினிமாக்கலை அபாரமாக வளர்ந்திருக்கிறது. டைரக்டர் சங்கரும் நானும் விரைவில் புறப்படத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். எங்கள் சுற்றுப்பிரயாணம் நம் நாட்டுச் சினிமாத் துறைக்கு எத்தனையோ விதங்களில் உபயோகமாக இருக்கும்'' என்று நம்பிக்கையோடு கூறினார்.

ஸ்ரீ தம்புவின் ஆசை நாட்டுக்கு நலம் தரும் நல்ல ஆசை. கலையில் புதுமை வேண்டும் என்று சொல்லிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருப்பதில் பயன் எதுவும் இல்லை. அதைச் செயலாக்க ஒருவர் முன்வர வேண்டுமே! ஒளிப் பதிவாளர் ஸ்ரீ தம்புவை முன் கூட்டியே வாழ்த்துகிறேன்.

— விஜயம்

அதிசயமான புதுமுறை தயாரிப்பு



பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்

எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் இந்தியாவில் தயாரிப்பது



ஆண்டவன் கட்டளை



ஆயுள் முழுவதும் பிரம்மசரியத்தைக் கடைப்பிடிக்க முயன்ற ஓர் ஆண் மகன் கடைசியில் ஒரு பெண்ணிடம் தோல்வியடைவதைப் புதுக்கதையாகச்சொல்ல முடியாது. ஆனால் பிரம்மசரியத்தைக் கடைப்பிடிக்க முயன்ற புரொபசர் கிருஷ்ணனாக நடித்த சிவாஜி கணேசன் தம் திறமையான நடிப்பினால் அந்தப் பாத்திரத்தையே புதுமையாக்கி விட்டார். குறிப்பிட்ட மணிக்குப் புறப்பட்டு ஒரே மாதிரி நடையில் கல்லூரிக்குப் போவதும், பாடம் நடத்துவதும் எல்லாமே புதுமைதான். படம் முழுவதும் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்குகிறார் சிவாஜி கணேசன்! அசோகன், சந்திரபாபு, பாலாஜி மற்றும் உள்ள நடிகர்கள் படத்தில் நடிப்பதாகவே தெரியவில்லை. அதற்கு அவர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. திரைக் கதையில் சிவாஜிக்குத்தானே அதிக 'சான்ஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது!

முருகன் சந்நிதியில் ஆண்டிக் கோலத்தில், பசிக் களைப்போடு புஷ்பலதாவைச் சந்திக்கும் சிவாஜியின் நடிப்பு கண் கலங்க வைக்கிறது.

பாதி வரையில் விறுவிறுப்பாக ஓடிக் கொண்டிருந்த படம் திடீரென்று மந்தகதியை அடைந்து குழம்ப ஆரம்பிப்பது கண்டு இது தமிழ்ப் படத்துக்கு 'ஆண்டவன் கட்டளை' என நினைத்து வருந்தினேன்.

தேவிகாவின் நடிப்பு நன்றாகவே இருக்கிறது. படகு விபத்துக்குப் பிறகு புத்தி மாறாட்டத்துடன் நடிக்கும் தேவிகாவின் நடிப்பு ஏற்கனவே "நெஞ்சம் மறப்பதில்லை" என்ற படத்தில் வந்ததுதான் என்பதை மறக்க முடியவில்லையே!

படகு விபத்து நிகழ்ந்த சமயத்தில் சிவாஜி கணேசன் மரத்தில் ஏறி நிற்கிறார்; தேவிகா உதவிக்காகக் கதறக் கதறக் கவனியாமல் இருந்து விட்டுப் பிறகு நீரில் குதித்துக் காப்பாற்ற முயல்கிறார். எவ்வளவு விறுவிறுப்பாயிருக்கவேண்டிய காட்சி அது! பாழாகிவிட்டதே! சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைந்த புரொபஸர் கிருஷ்ணன் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை பார்க்கும் போது தன் காதலி ராதாவைச் சந்திப்பது, சுரங்க அதிபரையே மணந்து கொள்ளும்படி வற்புறுத்துவது எல்லாம் பழைய பாணி. சுரங்கப் பாதையில் கம்பி மார்க்கமாகச் செல்லும் தொங்கும் கூண்டில் சிவாஜியும் தேவிகாவும் தர்க்கம் செய்வது 'போர'டிக்கிறது. சுரங்கத்தின் அதிபர் பாலாஜி சற்று முன்னதாக வந்து சிவாஜியின் சிக்கலை நீக்கியிருந்தால் நாம் அந்த 'போரி'லிருந்து தப்பியிருக்கலாம்.

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளுக்கும் பலவிதமான பரதேசிக் கோலங்களில் செல்லும் சிவாஜியின் நடிப்பும், தோற்றமும் மிகவும் பொருத்தமானவை. அப்பொழுது பாடப்படும் "ஆறு மனமே ஆறு" என்ற பாட்டைக் கேட்க ஆறுதலாயிருக்கிறது.

கே. பி. கொட்டாரக்கராவின் மூலக் கதைக்கு ஜாவர் சீதாராமன் திரைக்கதை, வசனம் இரண்டும் எழுதியிருக்கிறார்.

ஸ்ரீ தம்புவின் கைவண்ணம் படத்துக்கு எழில் கூட்டியிருக்கிறது.

கல்லூரி ஆசிரியர் தம் மாணவியை வகுப்பிலேயே காதலிப்பதிலும், பிறகு அவளை மணக்க முடியாமல் போய்ப் பல அவதிகளுக்குள்ளாகி, கடைசியில் அவளை மணந்து அதே கல்லூரியில் ஆசிரியராக வேலை பார்க்க வருவதிலும் "ஆண்டவன் கட்டளை" என்ன இருக்கிறது என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்! ஆனால் இது பி. எஸ். வி. பிக்சர்ஸின் அதிர்ஷ்டத் தலைப்பாயிற்றே! முதலில் "ஆலய மணி" பிறகு "ஆனந்த ஜோதி". இப்பொழுது "ஆண்டவன் கட்டளை."

—கார்த்தன்







மேலே: பட்ட மரங்களும் பசுமைச் சோலையும் – தேக்கடியில் ஒரு காட்சி

கீழே: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மணிக்கு அறுபது மைல் வீதம் சென்று கொண்டிருந்த காரின் வேகம் மணிக்கு ஆறு மைலாகக் குறைந்தபோது காரணம் என்ன வென்று ஆராயப் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி விட்டுத் தலையை நிமிர்த்தி னேன். சம தரையைப் பின்னால் விட்டு விட்டு மலை மேலே அமைந்த பாதையில் ஏறத் தொடங்கியிருந்தது கார். எதிரே பெரியாறு நீர் மின்சாரத் திட்டத்தின் தொழிற்சாலை தெரிந்தது. அதிலுள்ள 'ஜெனரேட்டர்'களை இயக்குவதற்காக மலை உச்சியிலிருந்து கீழ் மட்டம் வரை விரைந்து இறங்கும் நீரைக் கொணரப் பெரிய பெரிய உருளைக் குழாய்கள் ஏறக்குறைய செங்குத்தாகவே அமைக்கப்பட் டிருந்தன. ஆறடி உயரமுள்ள மனிதன் ஆறுயிரம் அடி உயரமுள்ள மலையையும் அதன் உச்சியில் உற்பத்தியாகும் ஆற்றையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள் ளும் ஆற்றலைப் பெற அவனுக்கு ஆறு அங்குல நீளமுள்ள மூளையை அளித்த ஆண்டவனை நினைத்து நான் வியப்பும் பிரமிப்பும் கொண் டிருக்கையில், "நிறுத்துங்கள்! நிறுத் துங்கள்!" என்ற கூக்குரல் என்னைத் திடுக் கிட்டுத் துள்ளச் செய்தது.

திரு அகிலன், வண்டி நின்றதும் ஓவியர் வினுவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு கீழே இறங்கி விட்டார். "அதோ பாருங்கள்!" என்று அடர்ந்த கானகத்தி னூடே சுட்டிக் காண்பித்தார். சற்றுக் குனிந்து பார்த்தபோது தென்பட்ட சிறிய இடைவெளியில் மூங்கில் பிளாச்சுகளால் பர்ணசாலை போல் ஓர் அழகிய குடிசை அமைக்கப்பட்டிருந்தது. "பதுங்கி வாழப் போகும் நமது பாண்டி நாட்டு வீரர்கள் கானகத்தின் மத்தியில் இப்படித்தான் சிறு குடில்கள் அமைத்துக் கொள்வார்கள். சிலர் படகு வீடுகளிலும் பலர் மரக்கிளைகளுக்கிடை யில் உருவாக்கப்பட்ட குடிசைகளிலும் வசிப் பார்கள். காட்டில் கிடைத்ததைப் புசிப் பார்கள்....."

எனக்கு அகிலன் அவர்கள் வண்டியை நிறுத்துமாறு அலறியதன் உட்பொருள் இப் போதுதான் விளங்கியது. நான் இன்றைய சமுதாயத்தின் சிறப்பையும் விஞ்ஞான வளர்ச்சியையும் நினைத்துப் பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கும்போது அகிலன் சரித்திர காலத்திலேயே உலவிக் கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது. சென்னையை விட்டு நாங்கள் கிளம்பி வந்ததே 'கயல் விழி' கதைக்கேற்ற நல்ல சூழ்நிலைகளைக் கண்டு வரத்தானே? எழுத்தாளர்களுக்குப் புதுப்புது சூழ்நிலைகளில் விதம் விதமான கற்பனைகள்

எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் திருவாளர்கள்: நாரண துரைக்கண்ணன், அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், டாக்டர் மெ. சுந்தரம், அகிலன்

குன்றக்குடியின் ஒரு தோற்றம்





தேக்கடி தர்பார்

கி.ராஜேந்திரன்

மலரை ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் முகமாக அவர்களைப் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லும் பணியைப் பத்திரிகை தர்மமாக ஏற்றுக்கொண்டு பல சந்தர்ப்பங்களில் அந்தக்கடமையை நிறைவேற்றியிருக்கிறது கல்கி. இம்முறையும் திரு அகிலன் அவர்கள் தேக்கடிக்கும் வேறு பல இடங்களுக்கும் செல்ல விருப்பம் தெரிவித்த போது உடனடியாக அதற்கு இசைவு தந்து வசதிகள் செய்து கொடுத்திருந்தார் ஆசிரியர்.

மீண்டும் காரில்ஏறிக் கொஞ்ச தூரம் சென்ற பிறகு, ''இதோ, தேக்கடி வந்து விட்டது!'' என்று கூறி வண்டியை நிறுத்தினார் காரோட்டி.

கீழே இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தோம்.



ராமநாதபுரம் மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர்

கழுத்து வலிக்க அண்ணாந்து நோக்கினோம். தலை கிறுகிறுக்கக் குனிந்து பார்த்தோம். நாலா புறமும் நெடிதுயர்ந்த மரங்கள்; அவற்றிலிருந்து எழும் விதம் விதமான நறுமணங்கள்; புள்ளினங்களின் கண்டங்களிலிருந்து கிளம்பும் இனிய நாதங்கள் இவற்றுக்கு மத்தியில் இருந்தோம் நாங்கள். ஒரு பக்கத்தில் சரிவாக அமைந்திருந்த நிலத்தில் கீழிறங்கிச் சென்றால் மாபெரும் ஏரியை அடையலாம். ஏரியைச் சூழ்ந்து எல்லாத் திசைகளிலும் மலைகள், மடுக்கள், மரங்கள்.

''சரியான காட்டுக்கு மத்தியில் வந்து அகப்பட்டுக் கொண்டோமே? இங்கே சாப்பாடு கீப்பாடு என்று யாரும் கூப்பாடு போடக் கூடாதோ ?'' என்று என் இரைப்பை படுத்தும் பாட்டை மெல்ல வெளியிட்டேன்.

''ஏன்? தாராளமாய்க் கூப்பாடு போடுங்களேன்! அரண்யத்துக்கு மத்தியிலேயே ஆரண்ய நிவாஸ் இருக்கிறதே'' என்றார் மதுரை நண்பர் சுவாமிநாதன்.

''ஆஹா! உயிர் கொடுத்த உத்தமரே!'' என்று அவரை வாழ்த்தியபடியே அரண்யத்துக்கு இடையில் ஒளிந்து கொள்ளாமல் தன் பெரிய அளவு காரணமாகத் தெளிவாகவே தெரிந்த ஓட்டலை நோக்கி நடந்தோம்.

ஆனால் ஆரண்ய நிவாஸ் எங்களை ஏமாற்றி விட்டது. இந்தக் காலத்தில் முன் அறிவிப்பு இல்லாமல் எது நடக்கிறது? வீட்டுக்காரரர் குடியிருப்பவருக்கு நோட்டீஸ் கொடுக்கிறார். சட்டசபையில் கேள்வி கேட்பதற்கு முன் மந்திரிக்கு நோட்டீஸ் தருகிறார் எம். எல். ஏ. இன்னும் கோர்ட் நோட்டீஸ், சினிமா நோட்டீஸ், பிட் நோட்டீஸ் போன்ற எத்தனையோ நோட்டீசுகள் இருக்கும் போது ஆரண்ய நிவாஸ் நிர்வாகிகள் சாப்பாட்டுக்கு வருவதானால் முன் கூட்டியே நோட்டீசு கொடுக்க வேண்டும் என்ற வழக்கத்தை ஏற்படுத்தி இருப்பதில் வியப்பென்ன?


'' சாப்பாடு இல்லாமல் போனால் போகிறது. நாங்கள் கலை உள்ளம் படைத்தவர்கள், இயற்கைக் காட்சிகளை அநுபவித்து மனம் நிறைவுறுகையில் வயிற்றின் கோரிக்கைகளை நிராகரித்து விடுவோம். ஒரு விசைப் படகு மட்டும் கொடுத்து உதவுங்கள், போதும்!''

'' பேஷாக! ஜல தேவதையில் ஏறிக் கொண்டு ஏரியைச் சுற்றி வாருங்கள். முன் பணம் மட்டும் ஞாபகமாகக் கட்டி விட்டுப் போங்கள்.''

அவர்கள் குறிப்பிட்ட தொகையைக் கேட்டதும் ஏற்கனவே பசியினால் சுற்றிக் கொண்டிருந்த தலை மேலும் விரைவாகக் கிறுகிறுவென்று சுழலத் தொடங்கி விட்டது. நல்ல வேளையாக நண்பர் சுவாமிநாதன் முன் யோசனையுடன் 'காந்தி டிபனை' உடனெடுத்து வந்திருந்தார். வேர்க்கடலையையும் வாழைப் பழத்தையும் உரித்து உள்ளே தள்ளியபடியே விசைப் படகில் விரைந்தோம்.

பெரியாறு நீர்த் தேக்கம் அமைந்திருக்கும் விதமே அலாதியான அழகுடன் விளங்குகிறது. ஆங்காங்கே குன்றுகள் நெடிதுயர்ந்து

ஜலதேவதையும் புறப்படத் தயாராக இருக்கிறது



மரத்தடியில் இருப்பது நிழலுக்காகப் பதுங்கிய யானைதான், பாறையல்ல.



நிற்க அவற்றைச் சுற்றிலும் தன் சிற்றலைகளால் மலையடிவாரங்களை அசைக்க முற்பட்டு விளையாடுவது போல் பெரியாறு ஏரி நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பரவிக் கிடக்கிறது. பல திருப்பங்கள், வளைவுகளைத் தாண்டிப் பல குன்றுகளையும் மலைகளையும் கடந்து படகு நீரைக் கிழித்துக் கொண்டு போயிற்று.

நீர்த் தேக்கம் தோன்றிய காலந்தொட்டு இன்று வரை நீரிலேயே இருக்க நேரிட்டதால் பல மரங்கள் அழுகிக் கருகிப் போய் ஏரியின் மத்தியில் மொட்டை மொட்டையாக நிற்கின்றன. "இவற்றையெல்லாம் ஏன் விட்டுவைத்திருக்கிறார்கள்? வெட்டி எடுத்திருக்கலாமே?" என்றார் எங்களில் ஒருவர். பசுமையான சூழ்நிலையின் செழிப்பையும் வனப்பையும், இந்தக் கருகிய மொட்டை மரங்கள் மாசுபடுத்துவதாக அவர் கருதினார்.

ஆனால் எனக்கென்னவோ பசுமையையும் கருமையையும், செழிப்பையும் அழிவையும், வாழ்வையும் சாவையும் அருகருகே காண்பதிலும் ஏதோ ஓர் அழகு இருப்பதாகவே தோன்றியது. இனம் புரியாத விசித்திரமான உணர்வுகளை அந்தக் காட்சி மனத்தில் உருவாக்கியது. அடுத்துக் கன்னங் கரிய மொட்டை மரத்தில் வெள்ளை வெளேர் என்றிருக்கும் ஒரு நாரை உயிர்த் துடிப்புடன் வந்து உட்காருவதையும் ஏரியில் துள்ளித் திரியும் மீனைக் கொத்தி விழுங்கத் தன் அலகினைப் பட்டுப் போன அந்த மரத்தில் தீட்டிக் கொள்வதையும் கண்டபோது என்னையும் அறியாமல் என் மேனி சிலிர்த்தது.

இந்தச் சமயத்தில், "அதோ! அதோ!" என்று பல குரல்கள் ஏககாலத்தில் எழுந்தன.

நான், "என்ன? என்ன?" என்று பதறவில்லை. "எங்கே? எங்கே?" என்றுதான் ஆர்வத்துடன் கேட்டேன் — தேக்கடியில் இயற்கைச் சூழலில் யானைகள் தன்னிச்சையாக ஒரு கவலையுமின்றி உலவி வரும் என்று ஏற்கனவே நான் கேள்விப்பட்டிருந்த காரணத்தால்.

"அதோ, அந்த மரக்கிளைகளில்பாருங்கள்!"

"மரக் கிளைகளில் யானை எப்படி ஐயா, ஏறும் ?"

"யானையைப் பற்றி யார் என்ன சொன்னார்கள்? குரங்குக் கூட்டத்தை அல்லவா குறிப்பிட்டேன்!"

"பூ, இவ்வளவுதானா?"

"என்ன அத்தனை அலட்சியமாய்ப் பேசிவிட்டீர்கள்? குரங்குக் கூட்டம் முதலில் இந்த உலகில் தோன்றியிருக்கவில்லையானால் நாம் இன்று இப்படி ஆனந்தமாகத் தேக்கடி நீர்த் தேக்கத்தில் விசைப் படகில் பவனி வர முடியுமா? டார்வினை வேணுமானால் கேட்டுப் பாருங்கள் !"

"டார்வினைத் தேடிக் கொண்டு இப்போது நான் எங்கே போக? அகிலனை வேணுமானால் ஒரு கேள்வி கேட்கிறேன்" என்று கூறி விட்டு அவர் பக்கமாய்த் திரும்பி, "ஏன் ஸார் ? உங்கள் கதாநாயகன் நம்மைப் போலவே 'ஜம்'மென்று கானகத்தின் மத்தியில் ஆற்று நீரில் உல்லாசமாகப் படகில் பவனி வருவானா ?" என்றேன்.

"அவன் படகில் பவனி வந்தால் மட்டும் போதாது ஸார்! யானைகளைப் பிடிக்க வேண்டும்; அவற்றுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கவும் வேண்டும்! இங்கே என்னடா வென்றால் ஒரு யானைகூடக் கண்ணில் தட்டுப்பட மாட்டேன் என்கிறது!" என்று கூறிக் கவலையுடன் சுற்று முற்றும் பார்த்தார் அகிலன்.

அவருக்கு அபயம் அளிப்பது போல் தொலைவில் ஒரு யானை உடலை மெல்ல அசைத்தபடி தும்பிக்கையை இயக்கி நிதானமாக அரை ஆள் உயரத்துக்கு வளர்ந்திருந்த புல்லை மேய்ந்து கொண்டிருப்பது புலப்பட்டது.

அகிலன் படகுக்குள்ளே ஒரு துள்ளுத் துள்ளினார். அவருக்கிருந்த உற்சாகத்தைப் பார்த்தால் அவரே அந்த யானையைப் பிடிக்க ஓடிப் போய் விடுவார் போல் இருந்தது. படகைச் செலுத்தியவர், "இந்தப் படகு எல்லாரும் உட்கார்ந்து வரத் தயாரானது தான்; நடனமாட ஏற்பட்டது அல்ல! படகு கவிழ்ந்து விட்டால் உங்கள் உயிருக்கெல்லாம் நான் ஜவாப்தாரியல்ல" என்று கூறி எச்சரித்த பிறகுதான் சற்று அமைதியுற்றார்.

இதன் பின் சிறு சிறு கூட்டங்களாகப் பல யானைகள் தர்பார் நடத்துவதைக் கண்டோம். நமது மிருகக் காட்சி சாலைகளில் உள்ளவற்றைப் போலல்லாது நல்ல வாட்டசாட்டமாகவும் செந்நிறமான அடர்ந்த ரோமங்கள் கொண்டதாயும் பார்க்கப் பயங்கரமாய்க் காட்சியளித்தன, இயற்கைச் சூழலில் கொழுத்து வளர்ந்த அந்த யானைகள்.

விசைப் படகு ஏழு மைல் தூரம் சென்று பெரியாறு அணைக்கட்டை அடைந்தது. அணைக்கட்டைப் பார்த்து விட்டு மீண்டும் படகு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தோம்.

"ஸார்! ஒரு சிட்டிகை கொடுத்து உதவுகிறீர்களா? காலையிலிருந்து பொடி போடுகிறவர்கள் யாராவது இந்தப் பக்கம் வரமாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன்" என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு அகிலனிடம் வலுவில் சென்று பேசினார், அணைக்கட்டு சம்பந்தப்பட்ட ஓர் அரசாங்க ஊழியர். பொடி ஏக்கம் தீர்வதிலும் அந்த ஏக்கத்தைத் தீர்ப்பதிலும் பொங்கும் மகிழ்ச்சியை அப்போது இருவரது முகங்களும் பிரதிபலித்தன!

"இந்தக் காட்டுக்கு மத்தியில் தனியாக வாழ்வது உங்களுக்கெல்லாம் பயமாக இல்லையா? இரவு நேரங்களில்...."

"வருங்க! யானை வரும்! சில சமயங்களில் சிறுத்தைகூட வரும்!" என்று குறுக்கிட்டுப் பேசினாள் பாதையோரமாக அமர்ந்திருந்த கிழவி. "ஒரு தடவை ஒரு யானைக்கும் சிறுத்தைக்கும் சண்டை வந்துடுச்சு. அப்பப்பா! ஒரே ரகளை ஆயிடுச்சு. ஆனால் இதோ நம்ம ஜிம்மி இருக்கு பாருங்க, இது இருக்கிற வரை நமக்குக் கவலையே இல்லே. சிறுத்தை இந்தப் பக்கம் வந்தால் 'வள்வள்'ளென்று விழுந்து பிடுங்கி விரட்டி விடும். கேளுங்க, ஒருசமயம் இது காட்டுக்குள்ளே போய் எதையோ கவ்விக்கிட்டு வந்து என் காலடியில் போட்டுது. என்னடான்னு பார்த்தால் யானைக் காதைக் கடிச்சு ஒரு துண்டத்தை எடுத்து வந்திருக்கிறது.......!"

கிழவி ரொம்பச் சிரமப்பட்டுப் புனைந்த கதைகளுக்கு எங்கள் காணிக்கையைச் செலுத்தி விட்டு மேலே நடந்தோம்.

வந்த வழியாகத் திரும்புகையில் இடையில் படகு ஒரு சிறு தீவினருகில் கரை தட்டி நின்றது. தீவின் மையத்தில் ஒரு விருந்தினர் விடுதி. அதன் நாலாபுறமும் பெரிதும் சிறிதுமான வட்டங்களாய் முறையே மலைகள், வனங்கள், நீர்த் தேக்கம், மலர்த் தோட்டம் ஆகியவை அமைந்திருந்தன. நான் அகிலனைப் பார்த்தேன். "ஸார்! நீங்கள் மனோரம்மியமான இந்தக் காட்சியை விடவே கூடாது. இதை அப்படியே ஒரு சரித்திர காலத்து வசந்த மாளிகையாக்கி விடுங்கள்!"

"அப்படியே செய்யலாம்!"

எனக்கு உற்சாகம் கரை புரண்டது. "சுந்தர பாண்டியனுக்கும் கயல்விழிக்குமிடையே காதல் உருவாகி இருவரும் கரம் கோத்து இங்கே உலவி வந்தபடி இன்பம் துய்ப்பார்கள்!"

"காதலிக்கச் சுந்தரபாண்டியனுக்கு நேரமேது?" என்று அகிலன் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

"ரொம்பத் துரதிருஷ்டம் பிடித்த கதாநாயகனயிருப்பான் போல் இருக்கிறதே" என்று நான் அலுத்துக் கொண்டேன். "யானை பிடிக்கும் நேரம் போக மீதமுள்ள சமயத்தில் கொஞ்சம்....."

"யானை பிடிப்பது மட்டுமா? அவற்றுக்குப் போர்ப்பயிற்சி அளிக்க வேண்டும்! வீரர்களின் பெரும்படை திரட்ட வேண்டும்; அவர்களுக்குச் சுதந்திர ஆர்வத்தை ஊட்ட வேண்டும்! வாள் வீச்சும் வேல் வீச்சும் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். பாண்டிய நாட்டிலிருந்து சோழர்களை விரட்டுவதே அவன் லட்சியம்; அவன் வாழ்க்கையே பெரும் போராட்டம்!"

"ஐயோ! போச்சு! எல்லாம் போச்சு! காதலுக்கேற்ற அருமையான சூழ்நிலைகள் பாழாய்ப் போச்சு!" என்று வருந்தினேன்.

"கவலைப்படாதீர்கள். அவர்களிடையே காதல் மலராமல் போகாது. ஆனல் அந்தப் போகத்துக்கு மத்தியில் யோகம் இருக்கும்! பாண்டி நாட்டின் விடுதலை என்ற யோகத்தில் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள்!"

"அடப்பாவமே! போகத்தையும் யோகத்தையும் இணைக்கப் பார்க்கிறீர்களே! அது நடக்கிற காரியமா?"

"ஏன் நடக்காது? யோக போகேசுவரர் என்ற ஆண்டவன் திருநாமத்தை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?"

நான் வாயடைத்துப் போனேன். "நாளைக்குப் பிரான் மலையில் ஓர் அருமையான சிலா வடிவத்தைக் காண்பிக்கிறேன், பாருங்கள்! அங்குதான் எனக்கு முதன் முதலில் கயல்விழிக்கான கருத்து உதயமாயிற்று" என்றார் அகிலன்.

தேக்கு மரங்கள் மிகுந்து, நீர்த் தேக்கத்தின் அடிவாரமாகவும் அமைந்திருப்பதால் தேக்கடி என்று பெயர் பெற்ற ஊரை விட்டுக் கிளம்பிய நாங்கள் மறுநாள் பிரான் மலையைச் சென்றடைந்தோம்.

முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த பாரி வள்ளல் வாழ்ந்த மலை என்பதால் இலக்கியத்தில் இடம் பெற்றதுடன் இன்றும் அழியாப் பேரும் புகழும் சிறப்பும் பெற்று விளங்கும் மலை திருக்கொடுங்குன்றம் என்னும் பிரான்

திரைத் துணுக்குகள்

இரண்டு சிங்கங்கள்

நமது எம். ஜி. ஆர்., சிவாஜி கணேசன் ஆகிய இருவரையும் இனி சிங்கம் எம். ஜி. ஆர். என்றும், சிங்கம் சிவாஜி கணேசன் என்றும் தான் அழைக்க வேண்டும். ஏனெனில் இருவரும் சமீபத்தில் உருவான பெரம்பூர் லயன்ஸ் கிளப்பில் அங்கத்தினர்களாகியிருக்கிறார்கள். லயன்ஸ் கிளப் அங்கத்தினர்கள் தங்கள் பெயருக்கு முன்னல் லயன் என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்வதில் பெருமைப்படுவர்.

லயன்ஸ் கிளப் என்ற சர்வதேச ஸ்தாபனத்தின் ஒரு கிளையாகப் பெரம்பூர் லயன்ஸ் கிளப் செயல்படும். இதன் அங்கத்தினர்கள் பிறர்க்குரியாளர்கள்தான் என்றாலும் தமக்கெனவும் அவர்கள் தாராளமாக வாழலாம். ஆனல் தங்கள் தொழிலிலோ வர்க்கத்திலோ ஒழுக்கத்தையும் நேர்மையையும் கடைப்பிடிப்பதாகப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். சென்ற ஜூன் 14-ந் தேதி இரவு ஹோட்டல் ஓஷியானிக்கில் விருந்துக்குப் பிறகு, புதிய பெரம்பூர் லயன்ஸ் கிளப்பின்



அங்கத்தினர்களான பிரபல தொழில், வர்த்தகப் பிரமுகர்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்ட போது அங்கு சிங்கம் சிவாஜி கணேசனைக் காண முடியவில்லை. சிங்கம் எம். ஜி. ஆர். மற்ற எல்லாப் புது அங்கத்தினர்களையும் போலவே தாமும் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து விட்டு 'கியூ' வரிசையில் நின்றார். 'மக்களின் துன்ப இருளைப் போக்கி ஒளி கூட்ட என்னல் இயன்றதைச் செய்வேன்' என்று சங்கல்பித்துக் கொள்வதாக இதற்கு அர்த்தம். மற்றச் சிங்கங்களுக்கும், சிங்கம் எம். ஜி. ஆர். அவர்களுக்கும் இடையில் ஒரே ஒரு வித்தியாசத்தைப் 'பளிச்'சென்று காண முடிந்தது. எல்லோரும் கருமையான நிறத்தில் கோட்டும் பாண்டும் டையும் அணிந்திருக்க இவர் மட்டும் சரிகை போட்ட வெண் பட்டு வேஷ்டியும் சில்க் ஜிப்பாவும் புன்முறுவலும் அணிந்து அந்தக் கூட்டத்திலும் 'தனித்து' நின்றார்!

சினிமா மோகம்!

1962ல் நேருஜியும் அன்றைய உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் இரண்டு கட்சிகளின் தலைவர்களாயிருந்து ஒரு நல்ல காரியத்துக்கு நிதி திரட்ட கிரிக்கெட் விளையாடினர். வசூலான தொகை ரூ. 30,000. அதே மாதத்தில் திலீப் குமாரும் ராஜ் கபூரும் இரண்டு கட்சிகளின் தலைவர்களாயிருந்து ஒரு நல்ல காரியத்துக்கு நிதி திரட்ட கிரிக்கெட் விளையாடினார்கள். வசூல் ரூ. 100,000!

மலை. பிரான் மலையையும் சுற்றுவட்டாரத்தில் திருப்புத்தூர், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி ஆகிய ஊர்களையும் அவற்றிலுள்ள திருக்கோயில்களையும் சுற்றிப்பார்த்து அந்த ஸ்தலங்களைப் பற்றிய சரித்திர வரலாறுகளை அறிந்து கொள்ளப் பெருந் துணையாக இருந்தவர் திருவண்ணமலை ஆதினம் குருமகா சந்நிதானமாகிய தவத்திரு தெய்வசிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள். இப்படி நீண்ட பெயரைக் கூறிச் சிரமப்படுத்துவதைவிட குன்றக்குடி அடிகளார் என்று சொன்னல் போதும், எளிதில் புரியும்.

''அடிகளாருக்குத் தமது ஆதினத்துக்குக் கீழுள்ள கோயில்களைக் கவனிக்கப் போது எங்கே இருக்கிறது? அவர் பாட்டுக்குப் பொதுக்கூட்டம், சொற்பொழிவு என்றுதான் ஊர் ஊராய்ச் சென்று கொண்டிருக்கிருரே'' என்று சிலர் கூறக் கேட்டிருக்கிறேன்.

அப்படிச் சொல்பவர்கள் அடிகளாரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். மற்றவர்கள் கோயில்களிலுள்ள சிலா வடிவங்களை மட்டும்தான் பூஜிக்கிருர்கள். அடிகளார் அத்துடன் தமிழையும் வணங்கி வழிபடுகிருர் — வித்தியாசம் இதுதான். தமிழுக்குத் தாம் தொண்டு செய்வதுடன் தமிழுக்குத் தொண்டாற்றுபவர்களுக்குத் தொண்டராக இருக்க விழைகிருர். ஆகவே எங்கு தமிழ் இலக்கியத்துடன் தொடர்புகொண்ட விழாக்கள் நடந்தாலும் அழைப்பை அவரால் தட்டிக் கழிக்க முடிவதில்லை.

தமிழ் இலக்கியம் என்றதும் உடனே புராதனமான கவிதை இலக்கியம்தான் இலக்கியம் என்று பிடிவாதமாகக் கூறி விடும் மனப்பான்மை அடிகளாருக்குக் கிடையாது. இன்றைய தலைமுறையில் வாழும் எழுத்தாளர்களின் சக்தியையும் அவர் நன்கு உணர்ந்திருக்கிருர். மக்களிடையே பழங்கால இலக்கிய ஆர்வத்தைத் தூண்டவும் இறையுணர்ச்சியை ஊட்டவும் நல்லொழுக்கத்தை வளர்க்கவும் இன்றைய எழுத்தாளர்கள் பெரும் பணியாற்ற முடியும் என்பதில் அவருக்கு நியாயமான நம்பிக்கை உண்டு. ஆகவேதான் ராமநாதபுரம் மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் இருந்து எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து வருகிருர்.

திருப்புத்தூருக்கு நாங்கள் சென்றிருந்த போது திருமுறை விழா நடந்து கொண்டிருந்த சமயம். விழாவில் ஒரு தினத்தை மொழித் துறைக்கு ஒதுக்கி அன்று ராமநாதபுரம் மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முதல் ஆண்டுக் கூட்டத்தை நடத்த வழி வகுத்திருந்தார் குன்றக்குடி அடிகளார். அன்றைய நிகழ்ச்சி நிரலே மொழி வளர்ச்சி பற்றிய அவருடைய மனப்பான்மையை நன்கு உணர்த்திக் காட்டுவதாயிருந்தது. காலையில் இன்றைய எழுத்தாளர்களின் பிரச்னைகள் பல பேசப்பட்டன. மாலையில் பட்டிமன்றத்தில் ''சங்க காலத் தமிழ் இலக்கியத் தோற்றத்தின் நிலைக்களன் மக்கள் வாழ்வியலா அல்லது அரசர்கள் வாழ்வியலா?'' என்பது பற்றி நண்பர்கள் விவாதங்கள் நிகழ்த்தினர்.

இரவு கலை நிகழ்ச்சியும் இடம் பெற்றிருந்தது. காலஞ்சென்ற மதுரை ஏ. வைத்திய நாதய்யர் அவர்களின் புதல்வர் திரு வை. சங்கரன் எம். எல். ஏ. அவர்களின் மக்களான சியாமளா, ஜெயந்தி, உமாமகேசுவரன் ஆகியோர் நடன விருந்தளித்தனர்.

இதன் பிறகு மேலும் ஓர் இனிய அநுபவம் எங்களுக்காகக் காத்திருந்தது. நள்ளிரவுக்கு மேல் வெள்ளியாலான ரிஷப வாகனங்கள் இரண்டு திருப்புத்தூர் இறைவனையும் இறைவியையும் சுமந்து வீதி உலா புறப்பட்ட அற்புதக் காட்சிதான் அது. இந்த வாகனங்கள் உருவான புதிதில் மண்டப வாயிலை இடித்துப் பெரிதாக்கித்தான் அவற்றை வெளியே கொணர வேண்டியிருந்தது என்ருல் வாகனங்களின் அளவினை ஒருவாறு ஊகிக்கலாம். வீதி விளக்கொளியிலும் தீவட்டிகளின் ஒளியிலும் தகதகத்த வெள்ளி ரிஷப வாகனங்களுக்கும் அவற்றின் மீது வீற்றிருந்த மூர்த்திகளுக்கும் வழிபாடு முடிந்து ஊர்வலம் கிளம்பும் வரை அருகிலிருந்து அனைத்தையும் நடத்தி வைத்து விட்டுத்தான் ஓய்வு பெறக் கிளம்பினுர் குன்றக்குடி அடிகளார். எங்களுக்கும் ஓய்வு அவசியத் தேவையாகத்தான் இருந்தது!

மறு நாள் மயில் தோகை வடிவமாக அமைந்திருக்கும் படிக்கட்டுகள் வழியே ஏறிப் போய், குன்றக்குடியில் குன்றின்மேல் வாழும் அழகே உருவான குமரனைத் தரிசித்துப் புத்துணர்ச்சி பெற்றுச் சென்னைக்குத் திரும்பினேம்.



தமயந்திக்கு மடல்

அரண்மனை தோட்டம்தன்னில் அழகிய குளமிருக்க
பெருமையாய் தாமரையும் பெரிதாகப் பூத்திருக்க
அருமையாய் அன்னமொன்று அதனில் வீற்றிருக்க
சிறுமையாய் ஓலையொன்று வாயதனில் கண்டேன் நான்!

கரைதனில் கயல்விழியாள் கூந்தலோ முகிற்கூட்டம்!
வரையாது வாரி முடிந்து வாசமோ புகைந்துவர,
நரையாது பார்த்தாள் அந்த நடையிலும் அன்னம் தன்னை
பறைசாற்றும் அவ்வழகி பைங்கொடியாள் தமயந்தி!

அன்னத்தின் அலகிருந்த அவ்வோலை எடுத்திட்டாள்!
புன்னகையாய் படித்திட்டாள் புதுமையோ என எண்ண
மன்னன் நளன் வரைந்தான் ''மங்கையே உன் கூந்தல்
மென்மையாய் வளர்ந்திருக்க செழுமைக்கோ குறையில்லை!''

''உண்மையை சொல்லிடுவாய் உன் குழலில் மணமேது?
தன்மையாம் ஒளியேது, தடைமறைக்கும் செழிப்பேது?''
கன்னியவள் சிரித்திட்டாள் **''கேசவர்த்தினி''** என்றிட்டாள்!
அன்னமே அவரிடம் சொல் அதுவே ரகசியமாம்!—



கேசவர்த்தினி ரெடி மிக்சட் ஹேர் ஆயில்,
அஞ்சன் கண் மை,
சௌகந்திகா பிளவர் டஸ்ட்டு
எங்கும் கிடைக்கும்



கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்

ஜெயில் ரோடு :: கோயமுத்தூர்-1



தான் இளவரசன் என்பதை நம்பாத மோகன் தன்னை வளர்த்தவர்களைப் பார்க்கிறான்.
இளவரசே! நீங்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும். எங்களுக்கு இடப்பட்ட கட்டளைப்படி உங்களை நாங்கள் வளர்த்தோம். நீங்கள் நாட்டை யாளும் தருணம் வந்து விட்டது. சென்று வாருங்கள்.
ஆளப்பிறந்தவன்
3
கதை: ராஜி
சித்திரம்: விஜு
தோழர்களே! கண் கலங்காதீர்கள். உங்களை நான் மறக்க மாட்டேன். என்னை வந்தடையும் ஏற்பாட்டைச் செய்கிறேன்.
மோகன் தான் வளர்ந்த கிராமத்திலிருந்து அரண்மனை நோக்கிச் செல்லுகிறான்.
பத்து வருஷங்களுக்கு முன்பு சேனபதி வீரசிம்மன் உங்கள் தந்தையை வஞ்சகமாகக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். அப்போது உங்களுக்கு இரண்டு வயது. அவனிடமிருந்து காப்பாற்றவே உங்களை இந்தக் கிராமத்தில் இரகசியமாக வளர விட்டிருந்தோம்.
உங்களைக் கண்டுபிடிக்க வீரசிம்மன் எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால் அவன் முயற்சி இன்றுதான் பலன் தந்தது. உங்கள் இருப்பிடம் அவனுக்குத் தெரிந்து விட்டது. இனி நீங்கள் இங்கிருப்பது ஆபத்து என்பதை அறிந்தோம்.
ஆகவே வீரசிம்மனுக்கு எதிராக அரண்மனையில் புரட்சியை உருவாக்கினோம். அவன் வீழ்ச்சியில் மக்களும் களிப்படைந்திருந்தார்கள். ஆகவே எங்கள் புரட்சி வெற்றியடைந்தது.



தன் பிடியிலிருந்து இளவரசர் தப்பிவிட்டார் என்பதே அவனுக்கும் அவன் சகாக்களுக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. ஆகவே ரத்தம் சிந்தாமல் வெளியேறிவிட்டார்கள்.
உங்கள் உடைமையான இந்த ராஜ்யத்தை இனி நீங்களே ஆட்சி செலுத்த வேண்டும்.
மோகனை அரண்மனைக்குள் அழைத்துப் போய் நீராட்டி, மன்னருக்கு உரிய உடைகளணிவித்துச் சபைக்கு அழைத்து வருகிறார்கள்
ராஜா ஜெயசிம்மர் வாழ்க!
எத்தனை பெரிய கட்டிடம்! இத்தனை அழகான இடத்தில் என்னோடு என் நண்பர்களும் இருந்தால்....?
இவ்வளவு பெரிய அரண்மனையில் நான் மட்டும் தனியாக இருப்பது எத்தனை வெறுப்பாக இருக்கிறது. நண்பர்கள் இருந்தால் பச்சைக் குதிரை தாண்டலாம் பலிஞ்சடுகுடு ஆடலாம்....ம்..
நண்பர்களின் பிரிவைத் தாங்க முடியாத மோகன் அவர்களைச் சந்திக்கத் தனியே கிளம்பி விடுகிறான்.
அதோ, அது.. அந்த உருவம்..? சோமுவைப் போலல்லவா இருக்கிறது.
சோமுவே தான். மோகனைத் தேடியே அவன் வந்து கொண்டிருக்கிறான்.
சோமு, இனி என் பெயர் ஜயசிம்மன். இந்தப் பெயரைக் கூறினால்தான் என்னைச் சந்திக்க அரண்மனைக்கு வரலாம். நம் நண்பர்களுக்கும் இதைக் கூறிவிடு.


இதே சமயத்தில் இளவரசன் மோகனைத் தேடிக் கொண்டு....
யார், பிரபாகரனா? சோமு இவர்தான் என் மெய்காப்பாளர்.
இளவரசே, இனிமேல் இப்படித் தகவல் இல்லாமல் தனியாகத் தாங்கள் வெளியே வரக் கூடாது. அரசாங்க விதிகளுக்குப் புறம்பானதும் கூட.
சட்டம், விதி, அரசு இதெல்லாம்! எனக்குப் பிடிக்கவே இல்லை. நான் என் விருப்பப் படிதான் வெளியே வருவேன்.
இளவரசே! நீங்கள் தனி மனிதர் அல்ல. நாட்டின் சொத்து. தங்களை அபாயம் சூழ்ந்துள்ளது. உடனே அரண்மனைக்குத் திரும்புங்கள்.
விரோதி வீரசிம்மன் பெரும் படையுடன் போர் தொடுக்க வருகிறான் என்ற செய்தியைப் பிரபாகரன் கூறவே...
சோமு, நீ இந்தக் குதிரையில் ஏறிக் கொள். என்னுடன் அரண்மனைக்கு வா.

தொடரும்

பிரிட்டன் மீது ஜெர்மானிய விமானத் தாக்குதல் தீவிரக் கட்டத்தை அடைந்திருந்த காலம். செப்டம்பர், 7, 1940. இரவு நேரம். திடீரென்று அபாய அறிவிப்பு அலறியது லண்டன்மாநகரில். ஜெர்மானிய விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. காக்பாஸ்டர் பகுதியில் பிரிட்டிஷ் விமானப் படைத் தளபதிகளுள் ஒருவரான ஹாக்ஸ், வான் வெர்ரா என்ற ஜெர்மானியக் கைதியுடன் தாம் நடத்திக் கொண்டிருந்த சொற்போரைச் சற்று நேரத்துக்கு நிறுத்தி வைத்துவிட்டு விளக்குகளை அணைத்தார்.

ஸைரன் ஓசை அடங்கும்வரை காத்திருந்த ஹாக்ஸ், விளக்கைப் பொருத்திவிட்டு மீண்டும் தமது வாதத்தை ஆரம்பித்தார். தம் முன் கைதியாக நிற்கும் ஜெர்மானிய விமானியை நோக்கி அவர் ஏளனம் தொனிக்கும் குரலில் பேசினுர்:

"ஆகாயத்திலேயே பதின்மூன்று பிரிட்டிஷ் விமானங்களைச் சுட்டுத் தள்ளியிருக்கிருய். தரையில் நின்றிருந்த அரை டஜன் பிரிட்டிஷ் விமானங்களைக் குண்டுவீச்சிலே தவிடுபொடியாக்கி யிருக்கிருய்! மிக அரிய சாதனை தான்!"




வான் வெர்ரா தான் கைதான தருணத்திலிருந்து இந்த விநாடிவரை தன்னைப் பல கேள்விகள் கேட்டுக் குடைந்த பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் தன் பெயர், விமானப் படையில் தனது எண், தன் பதவி ஆகிய விவரங்களைத் தவிர, வேறு எதைப் பற்றியுமே வாய் திறக்கவில்லை. இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் அவன் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட போது அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினுன் அவன். தன்னைப் பிரிட்டிஷ் துருப்பினர் கைதாக்கு முன்னர் வான் வெர்ரா முன் ஜாக்கிரதையாகத் தன்னிடமிருந்த ரகசிய தஸ்தாவேஜிக் காகிதங்களை யெல்லாம் கொளுத்திச் சாம்பராக்கி விட்டான். அவனிடமிருந்து ஜெர்மானிய விமானப்படை பலத்தைப் பற்றி அறிந்து கொள்ள பிரிட்டிஷார் செய்த முயற்சிகளெல்லாம் இதுவரை பயனற்றுப் போயின. கடைசியாக ஒரே ஒரு அஸ்திரத்தைப் பாக்கி வைத்திருந்தார் தளபதி ஹாக்ஸ். அதை இப்போது பிரயோகிக்க எண்ணினுர்.


தான் எவ்வளவோ சாமர்த்தியமாக நடந்துகொண்டிருந்த போதிலும் கூட பிரிட்டிஷ் விமானப் படை அதிகாரி ஹாக்ஸுக்குத் தன்னைப் பற்றிய பல அந்தரங்க விஷயங்கள் தெரிந்திருப்பது கண்டு அதிசயப்பட்டான் வான் வெர்ரா. தன் வீட்டில் தான் ஒரு சிங்கக் குட்டியை அருமையாக வளர்த்து வருவது முதற்கொண்டு, 'பிரிட்டிஷ் விமானப் படையைக் கதிகலங்க அடிக்கும் சிவப்புச் சைத்தான்' என்று தனக்கு நண்பர்களால் பட்டப் பெயர் சூட்டப்பட்டிருப்பது வரையில் ஹாக்ஸுக்கு எத்தனையோ தகவல்கள் எப்படியோ கிடைத்திருந்தன.

வான் வெர்ராவைப் பற்றித் தமக்குக் கிடைத்திருந்த உண்மைகளை வெளியிட்டு விட்டுத் தொடர்ந்து ஹாக்ஸ் சொன்னுர்: "உன்னுடைய அதிவீர தீர பராக்கிரமச் செயல்களைப் பற்றிப் பெருமை அடித்துக் கொண்டிருக்கிருய், உன் பெயர் பிரபல

மடைந்து நாடு உன்னைப் போற்றிப் புகழ வேண்டும் என்பதற்காக. அவை அத்தனையும் கட்டுக் கதைகள், நீ ஒரு கதைப்புளுகன் என்பதை நான் இப்போது வெளியிட்டால் என்ன ஆகும்? பத்தொன்பது பிரிட்டிஷ் விமானங்களை நீ தனியாகவே அழித்திருந்தால் அது எங்களுக்குத் தெரியாமல் நடந்திருக்க முடியாதல்லவா? கைதிகள் முகாமில், உன் ஜெர்மானியத் தோழர்களிடையே இந்தச் செய்தி பரவினால் உன் நிலை என்ன?''







அமைதியாகப் பதில் கூறினன் வான் வெர்ரா:

''அவர்களுடைய ஏளனத்துக்கு உள்ளாவேன். அவர்களுடன் சேர்ந்து ஒரே கைதிகள் முகாமில் வாழ்வது வேதனையாகத்தான் இருக்கும். ஆனால் என்னைப் பொய்யனென்று நீங்கள் பறைசாற்றாமல் இருக்க வேண்டுமானால் அதற்குப் பிரதியாக நான் ஜெர்மானிய ராணுவ ரகசியங்களை வெளியிடவேண்டும் என்று கோருகிறீர்கள். அதற்கு நான் சம்மதிக்க முடியாது. நான் பொய்யன் என்பது நிரூபிக்கப்பட்டால் நண்பர்களுடன் சேர்ந்து கைதிகள் முகாமில் வாழ்வதுதான் கஷ்டமாக இருக்கும். ஆனால் நான் தேசத்துரோகியாக மாறினலோ என் மனச்சாட்சியுடனேயே சேர்ந்து வாழ இயலாமல் சித்திரவதைக்குள்ளாவேன்.''

ஹாக்ஸின் கடைசி அஸ்திரமும் பிசுபிசுத்து விட்டது. வான் வெர்ரா வெற்றி பெற்றுவிட்டான். கைதிகள் முகாமுக்குத் திரும்பி அழைத்துச் செல்லப்படு முன்னர் அந்த ஜெர்மானிய வீரன், ''மேஜர் ஹாக்ஸ்! இன்னும் ஆறே மாதங்களுக்குள் நான் கைதிகள் முகாமிலிருந்து தப்பி ஓடிவிடுவேன், பந்தயம் கட்டுகிறீர்களா?'' என்று கேட்டான்.

ஹாக்ஸ் அவன் சவாலை ஏற்றுக்கொள்ளாதது நல்லதாயிற்று; இல்லையேல் அவர் மறுமுறையும் வான் வெர்ராவிடம் தோற்றிருப்பார்!

ராணுவக் கைதிகள் முகாமில் அன்றாட நடவடிக்கைகளை நன்ருக ஆராய்ந்தான் வான் வெர்ரா. இருபத்தி நான்கு கைதிகளை ஒரு நாள் விட்டு ஒரு நாள் காலையோடு அழைத்துப் போவார்கள் தேகப்பயிற்சிக்காக. மூன்று கிலோ மீட்டர் தூரம் அவர்கள் விறுவிறுப்பாக நடப்பார்கள். பத்து நிமிஷ ஓய்வுக்குப் பிறகு திரும்பவும் கைதிகள் முகாமுக்கு அழைத்து வரப் படுவார்கள். ஓய்வு எடுத்துக் கொள்ளு மிடத்தின் அருகில் ஒரு மதில் சுவர் இருந்தது. தன் தோழர்களில் சிலர் காவலர்களின் கவனத்தைக் கவர, அதே சமயத்தில் மற்றவர்கள் தன்னை மறைத்துக் கொள்ள முடியுமானல் தான் அந்த மதில் சுவர் மீது ஏறி மறுபுறம் குதித்துக் குனிந்தபடியே ஓடிச் சென்று அப்பால் உள்ள அடர்ந்த கானகத்துக்குள் புகுந்து மறைந்துவிடுவது சாத்தியமாகலாம். இவ்வாறு சுதந்திரம் பெற்றதும் நிதானமாகக் கடற்கரைப் பகுதிக்குச் சென்று நடுநிலைமை வகிக்கும் ஏதேனும் ஒரு தேசத்தைச் சேர்ந்த ஒரு கலத்தில் ஏறிக்கொண்டு தாய்நாடு திரும்பி விடலாம்.

திட்டத்தின் முதற் பகுதி இரண்டு நாட்களுக்குப் பிற்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

தப்பிச் சென்ற கைதியைத் தேடும் பணியில் ஆயிரக்கணக்கானேர் ஈடுபட்டும், அடுத்த சில நாட்களுக்கு வான் வெர்ராவைக் காணவே முடியவில்லை. லாரிகள், கார்கள், பீரங்கி சுமக்கும் மோட்டார்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற பல வாகனங்கள் இங்குமங்கும் பறந்தன. ராணுவத்தினர் மட்டுமின்றிப் போலீஸாரும் ஹோம் கார்டுகளும் வேறு சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்தனர்.

ஆருவது நாள் சில இடையர்கள் மூலமாக அவனிருக்கும் இடத்தை அறிந்து கொண்ட போலீஸார் பெரும் படையுடன் சென்று அவனுக்கு விலங்கிட்டனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஸான்விக் என்ற இடத்திலிருந்த கைதிகள் முகாமுக்கு மாற்றப்பட்டான் வான்வெர்ரா. இங்கும் அவன் தப்பும் முயற்சியைக் கைவிடவில்லை. அவனிருந்த கட்டிடத்தின் ஒரு மூலையில் யாராலும் பயன்படுத்தப்படாத ஒரு சிறிய அறை இருந்தது. அங்கிருந்து பதினைந்து கெஜ தூரத்துக்குச் சுரங்கப் பாதை தோண்டத் தீர்மானித்தான் வான் வெர்ரா. அப்பாதை அவனை உள் வேலி, வெளி வேலிகளைத் தாண்டி

அப்பால் கொண்டு விட்டுவிடும். இரு வேலிகளுக்கும் இடையில் உள்ள சிறு பாதையில் காவலர்கள் சதா வளைய வந்து கொண்டே இருப்பார்கள். வெளி வேலிக்குப் பக்கத்தில் ஐம்பது கெஜ தூரத்துக்கு ஒன்றாகப் பல உயரமான காவல் பீடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மீது மிஷின்கன்கள், ஸர்ச் லைட்கள் சகிதம் காவலர்கள் சுற்று வட்டாரத்தை நோட்டம் விட்டபடியே இருப்பார்கள். வான்வெர்ரா அஞ்சா நெஞ்சத்துடன் செயலாற்றினான். ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் சுரங்கத்தில் உழைத்தான். காவலர்கள் யாரேனும் வருகிறார்களா என்பதைக் கவனிப்பதிலும் அப்படி வந்தால் வான்வெர்ராவுக்கு எச்சரிக்கை செய்வதிலும் மற்றக் கைதிகள் ஒத்துழைத்தார்கள். ஒரு மாதத்தில் ஒரே ஒரு மனிதன் மட்டுமே ஊர்ந்து செல்லக்கூடிய அந்தக் குறுகலான சுரங்கப் பாதை பூர்த்தியடைந்தது.

ஒரு டச்சு விமான ஓட்டியாக உருமாறத் தீர்மானித்தான் வான் வெர்ரா. செக்கோஸ்லாவாகியா, ஹாலந்து, நார்வே, போலந்து போன்ற நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குத் தப்பி ஓடி வந்த அகதிகள் பலர் அன்று பிரிட்டிஷ் விமானப் படையில் பணியாற்றி வந்தார்கள். ஆகவே, 'டச்சுப் பைலட்'டான தனக்குச் சரிவர ஆங்கிலம் பேசத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை என்று உணர்ந்தான். வெவ்வேறு சக கைதிகளிடமிருந்து விமான பைலட்டுக்குத் தேவையான கோட்டு, பூட்ஸ்கள், கையுறைகள் முதலியவற்றைச் சேகரித்தான்.

மறுநாள் சுரங்கப் பாதை வழியாகத் தப்பிச் சென்ற வான்வெர்ரா காலை 5-30 மணிக்குக் காட்நர் பார்க் ரயில் நிலையத்தில் இருந்தான். அருகிலிருந்த விமானப் படைத் தளத்துடன்ஸ்டேஷனிலிருந்தேடெலிபோனில் பேசினான். டென்மார்க் மீது விமானத் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கையில் தன் விமானம் சேதம் அடைந்ததாகவும் உடனே திரும்பியபோதிலும் வெலிங்டனுக்குப் பக்கத்தில் பழுதடைந்த விமானத்தை இறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதாயும் சொன்னான். மறு புறத்தில் அவன் கூறியதைக் கேட்டுக் கொண்ட அதிகாரி உடனடியாக விமானத் தளத்துக்கு அவன் வந்து சேரக் கார் அனுப்பி வைப்பதாய் வாக்களித்தார்!

விமானத் தளத்தை அடைந்ததும் அங்கிருந்த அதிகாரியிடம் அபர்டீனிலிருந்து தனக்கு அங்கு வெகு சீக்கிரமே வேறு விமானம் வந்து சேருமென்றும் தான் அபர்டீனுக்கு டெலிபோன் செய்து விமானம் கிளம்பிவிட்டதா என்பதைக் கேட்டறிந்து கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தான். அதன்படியே அந்த அதிகாரியும் அபர்டீன் விமான தளத்துக்கு டெலிபோன் செய்தார். போனில் அவர் பேசிக் கொண்டிருக்கும்போது கைகழுவிக் கொண்டு வருவதாய்க் கூறிவிட்டு அறையிலிருந்து வெளியேறினான் வான்வெர்ரா. ஆனால் அவன் குளியலறைப் பக்கம் போகவில்லை. நேராக விமானங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் ஷெட்டுகள் இருந்த திசையில் நடந்தான். அந்த அதிகாலை நேரத்தில் அங்கே ஒரே ஒரு மெக்கானிக்தான் நின்று கொண்டிருந்தான்.

அவனிடத்திலும் இப்போது தன் சாமர்த்தியம் மிகுந்த பேச்சுத் திறனைக் காட்டத் தொடங்கிவிட்டான் வான் வெர்ரா. அதிகாரம் செய்தும், நயமாகக் கேட்டும், அடாபிடித்தனமாக நடந்து கொண்டும் பத்து நிமிஷங்களுக்குள் ஒரு விமானத்தில் ஏறியும் விட்டான். ஆயிற்று; இன்னும் ஒரே ஒரு நிமிஷந்தான். அப்புறம் விமானம் வேகமாகத் தரையில் ஓடிப் பின்னர் 'ஜில்'லென்று மேலே கிளம்பி ஜெர்மனியை நோக்கிப் பறக்கத் தொடங்கிவிடும். ஆனால் அந்த ஒரு நிமிஷம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அதற்குள் அபர்டீன் விமான தளத்துடன் போனில் பேசிக் கொண்டிருந்த அதிகாரி, வான்வெர்ரா ஒரு போலி ஆசாமியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறியதைக் கேட்டதும் ஒரே ஓட்டமாக ஓடிவந்து விட்டான். விமானத்தினுள்ளிருந்த வான்வெர்ராவின் சிரத்தை நோக்கித் தன் கைத்துப்பாக்கி குறி பார்க்க, நின்றான்.

இரண்டு முறை தப்பி ஓடும் தன் முயற்சிகள் முறியடிக்கப்பட்டும் கூட வான்வெர்ரா மனம் தளரவில்லை. மீண்டும் ஒரு தடவை முயன்று பார்க்கவும் தவறவில்லை. 1941 ஜனவரியில், 1050 யுத்தக் கைதிகள் கனடாவுக்குக் கப்பலில் அனுப்பப்பட்டனர். ஹாலிபாக்ஸ் துறைமுகத்தை அடைந்ததும் அவர்களை ஒரு ரயிலில் ஏற்றி ஒன்டாரியோவுக்கு அழைத்துப் போனார்கள். வான் வெர்ரா ஏறியிருந்த பெட்டியில் முப்பத்தைந்து கைதிகளும், பன்னிரண்டு காவலர்களும் இருந்தனர். அப்போது நல்ல குளிர் காலம். வெளியே எங்கு பார்த்தாலும் ஒரே வெண் பனிக்காடு. அதை வரவேற்றான் வான்வெர்ரா. ரயிலின் கண்ணாடி ஜன்னல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வெண் பனியில் குதித்துவிடத் தீர்மானித்தான். அதிகமாகத் தனக்கு அடிபடாமல் மென்மையான பஞ்சு போன்ற வெண்பனி தன்னைக் காப்பாற்றும் எனினும், மிக வேகமாக ரயில் போகும்போது குதிப்பது உயிருக்கு ஆபத்துத்தான். ஸ்டேஷனில் ரயில் நிற்கும் போது குதிப்பதும் அசாத்தியம். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் காவலர்கள் துப்பாக்கி சகிதம் வரிசையாகக் கைதிகள் ஏறியுள்ள ரயிலின் இருபுறமும் நிற்பார்கள். ஆகவே ரயில் ஒரு ஸ்டேஷனில் நின்றுவிட்டுப் பிறகு கிளம்பும் சமயத்தில் — அது அதிக வேகத்தை எட்டிப் பிடிக்கு முன்னால், ஆனால் ரயில் நிலையத்தை விட்டுச் சற்றுத் தூரம் சென்ற பிறகு — தான் ஜன்னல் வழியாக வெளியே குதித்துவிட வேண்டும் என்று திட்டம் போட்டான் வான்வெர்ரா. அவன் யோசனைப்படியே எல்லாம் சரியாக நடந்தன. மற்றக் கைதிகளும் அவனுடன் முழு மனத்துடனும் திறமையாகவும் ஒத்துழைத்ததால் அவன் குதித்த இடத்திலிருந்து பல நூறு மைல்கள்வரை ரயில் சென்ற பிறகுதான் அவன் ரயிலில் இல்லை என்பது காவலர்களின் கவனத்துக்கு வந்தது.

ஜனவரி மாதம் 24ந் தேதி வான் வெர்ரா படகு ஒன்றைத் திருடிக் கொண்டு கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் எல்லே வகுத்த ஸெயின்ட் லாரன்ஸ் நதியைக் கடந்து அமெரிக்காவை அடைந்து விட்டான்.

பிரிட்டிஷாரிடமிருந்து தப்பி ஓடி வந்து விட்ட ஜெர்மானியக் கைதி அவன் என்று அறிந்ததும் நியூயார்க் மாகாணத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. எல்லாப் பத்திரிகை நிருபர்களிடமும் அவன் தான் தப்பி வந்த கதையை வழக்கம்போல் பிரமாதமாக வர்ணித்தான். மறுநாள் அதிகாலேயில் வான் வெர்ராவின் பெயரும் அவன் சாகசச் செயல்களும் உலகின் மூலே முடுக்குகளிலெல்லாம் பரவி விட்டன. ஜெர்மனியில் அவன் இப்போது ஒரு மாவீரனுகப் போற்றப்பட்டான். பாஸ்போர்ட் ஏதுமின்றிச் சட்ட விரோதமாக அமெரிக்காவில் நுழைந்ததற்காக வான் வெர்ரா போலீஸாரால் கைது செய்யப்பட்டபோதிலும் அவனே அமெரிக்காவிலிருந்த ஜெர்மானிய தூதராலயத்தினர் ஜாமீனில் விடுவித்து அழைத்துப் போயினர். பிரிட்டிஷ், கனடிய அரசாங்கங்கள் அவனேத் திரும்பப் பெற அமெரிக்க சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தத் தொடங்கின. அமெரிக்கா அப்போது உலகப் போரில் குதித்திருக்கவில்லேயாயினும் எப்படியும் தன்னேக் கனடியப் போலீஸாரிடம் அமெரிக்க அரசாங்கம் ஒப்படைத்துவிடும் என்று சந்தேகித்தான் வான் வெர்ரா. மெக்ஸிகோவிலிருந்த ஜெர்மானிய தூதராலயத்தின் உதவியுடன் பாஸ்போர்ட் ஒன்று தயாரித்துக் கொண்டு ஜெர்மனிக்கு விமான டிக்கெட் வாங்கினுன். அமெரிக்கத் துப்பறியும் வீரர்களின் கண்களில் மண்ணேத் தூவி விட்டு விமானம் ஏறிய அவன் 1941 ஏப்ரல் 18-ந் தேதி பெர்லினிலிருந்தான். அங்கு அவனுக்கு நைட்ஸ் கிராஸ் (Knight's cross) என்ற உயரிய வீரப் பதக்கம் அளித்து ஜெர்மனி கௌரவித்தது.

வான் வெர்ரா தப்பி விட்டதால் பிரிட்டனுக்கு ஏற்பட்ட அவமானம் ஒருபுறமிருக்க, அவன் ஜெர்மானிய ராணுவக் கைதிகளேப் பிரிட்டிஷ் அதிகாரிகள் எப்படியெல்லாம் கேள்விகள் கேட்டுக் குடைந்து தங்களுக்குத் தேவையான தகவல்களேச் சாமர்த்தியமாகக் கிரஹித்துக் கொள்கிறுர்கள் என்பதைத் தான் கைதியாக இருந்த நாட்களில் நன்கு ஆராய்ந்து அறிந்து கொண்டிருந்தான். பிரிட்டிஷாரின் அந்த யுக்திகளே ஜெர்மனியிலிருந்த பிரிட்டிஷ் ராணுவக் கைதிகள் முகாம்களில் அமுலுக்குக் கொண்டு வர உதவினுன். ராணுவக் கைதிகள் எந்த எந்த விதங்களிலெல்லாம் தப்பி ஓட முயலுவார்கள் என்பதையும் விவரித்துத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அரிய யோசனேகள் கூறினுன்.

இத்தனே துணிச்சலும் சாமர்த்தியமும் கொண்ட வான் வெர்ரா தன் இயல்புக்கேற்பக் கவனக் குறைவாகவும் அலட்சியமாகவும் தன் விமானத்தை ஓட்டியதன் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்தில் அக்டோபர் 25ந் தேதி மாண்டு போனுன்.

The one that got away என்ற பெயர் கொண்ட இந்நூலின் ஆசிரியர்கள் கெண்டல் பர்ட்-ஜேம்ஸ் லீஸர் - பிரசுரம்: வில்லியம் காலின்ஸ் ஸன்ஸ் அண்டு கம்பெனி - மைக்கேல் ஜோஸப் லிமிடெட் - லண்டன்.


இவரைத் தெரியுமா ?

நேருஜியை அறியாதவர் யார்? ஆனுல் எந்த அளவுக்கு அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியும்? எங்கே, கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளியுங்கள் பார்க்கலாம்:

(1) அவர் பிறந்த தேதி என்ன? (2) இந்தியாவில் அவர் எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தார்? (3) மேல் நாட்டில் அவர் படித்த பாடங்கள் பெற்ற பட்டங்கள் என்னென்ன? (4) 1947 ஆகஸ்ட் 14-ந் தேதி இரவு, சுதந்திரத் திருநாளே வரவேற்று நேருஜி கூறிய பிரசித்தி பெற்ற ஆரம்ப வாக்கியம் என்ன? (5) ஒரு நாளில் நேருஜி ஓய்வெடுத்துக்கொண்ட நேரம் எவ்வளவு? (6) ''நம் வாழ்க்கையிலிருந்து ஒளி மறைந்து விட்டது; எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது'' என்று தமது தந்தை இறந்த போது நேருஜி கூறி வருந்தினுர் என்பது உண்மையா?

விடைகள்: (1) 1889 நவம்பர் 14ந் தேதி. (2) இந்தியாவில் அவர் எந்தப் பள்ளியிலும் படிக்கவில்லே. வீட்டிலேயே ஆங்கிலேயர்களால் கல்வி போதிக்கப் பட்டார். (3) இங்கிலாந்தில் ஹாரோ பள்ளிக்கூடத்தில் படிப்பு முடிந்ததும் கேம்பிரிட்ஜ் ட்ரினிடி கல்லூரியில் சேர்ந்து ரசாயனம், பூமி சாஸ்திரம், தாவர சாஸ்திரம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்து ஹானர்ஸ் பட்டம் பெற்ருர். பிறகு லண்டனில் சட்டப் பரீட்சைகள் எழுதி வெற்றி பெற்ருர். (4) ''சரியாக நள்ளிரவைக் குறிக்கக் கடிகாரம் மணி அடிக்கும்போது, உலகமே தூங்கிக்கொண்டிருக்கையில், இந்தியா உயிர் பெற்று, விடுதலே அடைந்து, விழித்தெழப் போகிறது!'' (5) இரவில் அவர் படுத்துறங்கும் ஐந்து மணி நேரம்தான் அவருக்கு ஓய்வு. (6) தவறு. காந்திஜி இறந்ததும் நேருஜி செய்த ரேடியோப் பிரசங்கத்தின் ஆரம்ப வாக்கியம் இது.







மகிழ்ந்து விளையாடும் நேரம்— உட்வர்ட்ஸுக்கு நன்றி

மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும் பல்முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெற உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

பிரபல விஞ்ஞானி ஹம்ப்ரி டேவியிடம் அவரது நண்பர் கேட்டார்: ''உங்களுடைய அற்புதமான கண்டுபிடிப்புக்களில் எவை சிறந்தவை?''

டேவி நண்பரை ஒரு முறை நோக்கி விட்டு, ''எனது ரஸாயன ஆராய்ச்சிகள், பாதுகாப்பு விளக்கு ஆகியவை. இவை யெல்லாவற்றை யும்விட அதி உன்னதமானது நான் மைக்கேல் பாரடேயைக் கண்டு பிடித்ததுதான்!'' என்று பெருமையுடன் கூறினார்.

மைக்கேல் பாரடேதான் மின்சாரத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார். இவரது பொறுமையான ஆராய்ச்சி, இடைவிடாத ஊக்கம், பல அபூர்வ கண்டுபிடிப்புக்கள் இன்றைய மின்சார அற்புதங்களுக்குக் காரண மாகும். இவற்றில் டேப் ரிகார்டர் அரிய விஞ்ஞான சாதனையாகும்.

சென்னையில் கிண்டி தொழிற்பேட்டையில் டெலிடேப் ரிகார்டிங் இண்டஸ்டிரிஸ் இந்த அபூர்வக் கருவியைத் தயாரித்து அளித்து வருகிறது. இந்தத் தொழிற்சாலையில்தான் இன்ஜினீயர் நஸைருல்லா பணியாற்றி வருகிறார். தொழிலதிபர்கள் திரு என். அருணசலமும், அவரது புதல்வர் ஜகதீசனும் நிறுவியுள்ள இந்த டேப் ரிகார்டர் தொழிற்சாலை **1961**ம் வருஷத்திலிருந்து இயங்கி வருகிறது. லண்டனில் உள்ள பிஷர் எலெக்டிரானிக்ஸ் கம்பெனியின் தொழில் கூட்டுறவோடு நடைபெறும் இந்த டேப் ரிகார்டர் தயாரிப்புக்கு அயல்நாட்டிலிருந்து கருவிகள் அறுபது சதவிகிதம் இறக்குமதியாக வேண்டியிருக்கிறது.

சென்னை திருவல்லிக்கேணியில் வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் ஒரு முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவர் நஸைருல்லா. அவர் தந்தை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாலும் தனயனுக்கு இளம் வயதிலிருந்தே இன்ஜினீயரிங் கலையில் ஆர்வம் மிகுந்திருந்தது. சென்னை சர்க்கார் கலைக் கல்லூரியில் பயின்ற நஸைருல்லா நேஷனல் ரேடியோ அண்டு டெலிவிஷன் இன்ஸ்டிட்யூட்டில் தொழிற் கல்வி பயின்றார். பிறகு அவர் மேல்படிப்பை பம்பாய்ஸெயின்ட் ஸெவியர் கல்லூரியில் தொடர்ந்து, எலெக்ட்ரானிக்ஸ் துறையில் தேர்ந்தார். தொழில் துறையில் வல்லவரான இவருக்கு வேலை கிடைப்பது கஷ்டமா யில்லை. சென்னை முகம்மது இப்ராஹிம் கம்பெனியில் ரேடியோப் பிரிவில் சில காலம் பணி புரிந்தார். **1961**ம் வருஷம் டேப் ரிகார்டர் தொழிற்சாலை தொடங்கியதும் அதில் சேர்ந்துகொண்டார் நஸைருல்லா.

இளைஞர் நஸைருல்லாவுக்குச் சின்னஞ்சிறு வயதிலிருந்தே டென்னிஸ், ஹாக்கி முதலிய ஆட்டங்களில் ஈடுபாடு அதிகம். இவர் கல்லூரியில் பயின்ற காலத்து என். ஸி. ஸி. படையில் சேர்ந்து 'கல்லூரியில் தலைசிறந்த என். ஸி. ஸி. வீரர்' என்ற பரிசைப் பெற்றார். புகைப்படக் கலையிலும் இவருக்குத் தேர்ச்சி உண்டு. படகோட்டுதல் இவருக்குப் பிடித்தமான பொழுது போக்கு. படகோட்டும் கிளப்பில் சில வருஷங்கள் இவர் அங்கத்தினராக இருந்திருக்கிறார்.

''உங்கள் டேப் ரிகார்டர் தொழிற்சாலையைப் பார்வையிட்டேன். உங்களிடமிருந்து அதன் விசேஷங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்தது!''

''அப்படியா? பஹுத் அச்சா! எங்கள் தொழிற்சாலையில் இணைப்புப் பிரிவில் மெக்கானிக்குகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து செயலாற்றுகின்றனர். ஆனால் எல்லா மெக்கானிக்குகளுக்கும் எல்லா வேலைகளும் நன்றாகத் தெரியும். ஆகவே ஒரு சிலர் விடுமுறையில் போய் விட்டால்கூட வேலை நின்று விடாது!''

''உங்கள் தயாரிப்பான டேப் ரிகார்டரில் ஏதாவது தனி விசேஷமிருக்கிறதா?''

''எங்கள் டேப் ரிகார்டரில் என்னென்ன தவறுகள் நேர்ந்து விடலாம் என்பதை முன் கூட்டியே தெரிந்து, அவை வராமல் தடுத்து உருவாக்கி யிருப்பதால் சிறிது மின்சார ஞானம் உள்ளவர்களும் இந்த டேப் ரிகார்டரைக் கையாளலாம். எங்கள் டேப் ரிகார்டர் ஆயிரம் ரூபாய்க்குள் அடங்கி விடுகிறது.''

''சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் பல புதுத் தொழில்கள் வளருகின்றன. பல புதிய மெக்கானிக்குகள் இந்தத் தொழில்களில் ஈடுபடலாம் அல்லவா?''

இளைய பாரதத்தினர்




"ஆமாம். நம் மெக்கானிக்குகளிடம் பொதுவாக ஒரு குறை காணப்படுகிறது. ஏதாவது புது மாதிரியாகக் கருவியைத் தயாரிக்கச் சொன்னால் எடுத்தவுடனேயே 'முடியாது' என்று சொல்லி விடுகிறார்கள். அந்தக் கருவியைச் செய்து காட்டினால் பிறகு 'பார்க்கலாம்' என்று இழுக்கிறார்கள். எதையும் செய்ய அவர்கள் முன்வந்தாலல்லவா முன்னேற முடியும்?"

"டேப் ரிகார்டர் தயாரிப்புக்கு அயல் நாட்டை நாம் எதிர்பார்க்காமல் இருக்க முடியாதா ?"

"சில நுணுக்கமான இயந்திரங்கள் எங்களுக்குத் தேவைப்படுகின்றன. அவை வந்து இறங்கி விட்டால் தொண்ணூற்றைந்து சதவிகிதம் டேப் ரிகார்டருக்கு வேண்டியவற்றை இங்கேயே தயாரித்து விடலாம். இப்பொழுது அன்னிய நாட்டிலிருந்துதான் டேப் வருகிறது. லண்டனிலுள்ள ஒரு ரிகார்டிங் கம்பனியின் தொழில் ஒத்துழைப்போடு இங்கே தயார் செய்யப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. மேலும் பிஸிக்ஸ், எலெக்டிரானிக்ஸ், மெஷின் டிராயிங் ஆகிய மூன்று துறை விற்பன்னர்களும் சேர்ந்து செயலாற்றத் தொடங்கினால் ஆகாதது ஒன்றுமில்லை!"

தம்மை விடத் தம் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நஸருல்லாவின் துருதுருவென்ற பார்வையும், சரளமான பேச்சும், அடக்கமான சுபாவமும், தொழில் திறமையும் விரைவில் அவரை உன்னத நிலைக்குக் கொணர்ந்துவிடும். —குண்டுமணி



சிரிக்கவும் சிந்திக்கவும்

"மூளை ஒரு விந்தையான அவயவம். காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருந்த மாத்திரத்தில் வேலை செய்ய ஆரம்பித்துப் பிறகு காரியாலயத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் வரை நிற்பதே இல்லை."

—ராபர்ட் பிராஸ்ட்

ஃ ஃ ஃ

இந்த மாதம் 12, 13, 14ந் தேதிகளில் தினசரிப் பத்திரிகைகளின் விளம்பர இலாகா அதிகாரிகள் சர்வகலாசாலைப் பரீட்சைகளைச் சபித்துக் கொண்டிருந்திருப்பார்கள். ஏனென்றால், அந்தத் தினங்களில் பரீட்சைகளில் தேறியவர்களின் எண்களை, பத்தி பத்தியாகப் பிரசுரிக்க வேண்டியிருந்தது — விளம்பரங்களைப் பலி கொடுத்து விட்டு.

இந்த வருடம், குறிப்பிட்ட ஏழு எழுத்துக்களை அதிகம் உபயோகித்தாக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. "முதல் வகுப்பு" என்பதில் உள்ள எழுத்துக்களைத்தான். பத்தாயிரத்துக்குத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது மாணவர்கள் அந்த இரண்டு வார்த்தைகளையும் பகிஷ்காரம் செய்வதில் ஈடுபட்டு அதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தமிழ், சம்ஸ்கிருதம், பிரெஞ்சு ஆகிய மொழிப் பரீட்சை எழுதியவர்கள் சிலர் இதற்கு விதிவிலக்கு.

இது மாணவர்களின் ஜனநாயக உணர்ச்சியை எடுத்துக் காட்டுகிறதென்று நினைக்கிறேன். சிலர் முதல் வகுப்பிலும், பலர் இரண்டாவது வகுப்பிலும் பெரும்பான்மையினர் மூன்றாவது வகுப்பிலும் பரீட்சையில் தேர்ச்சியடைவது மனிதனிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பகிரங்கப்படுத்துவதாகும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். ரயிலில் ஜனதா வண்டி இருக்கிறது. செருப்புக்களில் ஜனதாச் செருப்பு என்று இருக்கிறது. அதேபோல் எல்லோருமே ஜனதா வகுப்பிலேயே பரீட்சையில் தேர்ச்சி பெற மும்முரமாக உழைத்து வரத் திட்டமிட்டிருக்கக் கூடும். அது விஷயத்தில் தங்களாலான உதவியைச் செய்யப் பேராசிரியர்கள்தான் காத்துக்கொண்டிருக்கிறார்களே!

ஃ ஃ ஃ

பரீட்சையில் தேர்வு பெற்றவர்கள், அதாவது தேர்ச்சியடைந்தவர்களின் எண்களைப் பிரசுரிப்பதில் தவறுகள் ஏற்படுவதுண்டு. இந்தத் தவற்றைச் செய்யும் உரிமை மாணவர்கள் விஷயத்தில் சர்வ வல்லமையுள்ள சர்வகலாசாலைக்கே உண்டு.

பி.ஏ. பரீட்சையில் பிரெஞ்சுப் பாடத்தில் தேறியவர்களின் ஜாபிதாவில் 2569 என்ற எண் இருந்தது. ஆனால் அது தவறு என்றும், 2659 என்ற எண்ணுள்ளவர்தான் தேறியவர் என்றும் பிழைதிருத்தம் வெளியிட்டார்கள்' மாணவன் தன் விடைகளை இப்படித் தப்பாக எழுதி விட்டுப் பிறகு பிழை திருத்தம் அனுப்பினால் அதை ஒப்புக் கொள்வார்களா?

இந்தத் தவறு, பிழை திருத்தங்களுக்கு இடையே என்னென்ன நிகழ்ந்திருக்கக் கூடும். 2569 என்ற எண்ணுள்ள மாணவர் தாம் இரண்டாவது' வகுப்பில் தேறி விட்ட ஒரு மகத்தான காரியத்தைச் சாதித்து விட்டதற்காக ஒரு ஹோட்டலில் தன் சக மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் விருந்தளிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கக் கூடும். 2659 என்ற எண்ணுள்ளவரோ, பாவம், பிரெஞ்சுப் பாடத்தில் தேர்வு பெறாத உயிர் இருந்தென்ன, போய் என்ன என்று எண்ணி ரயில் தண்டவாளம், சமுத்திரம், இவற்றைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கக் கூடும்.

ஃ ஃ ஃ

அமிர்தபஜார் பத்திரிகையின் பழைய பிரதி ஒன்றைத் தற்செயலாகப் பார்த்தேன். அதில் கல்கத்தா சர்வகலாசாலையின் பரீட்சை முடிவுகளை வெளியிட்டிருந்தார்கள். அவர்கள் முன் ஜாக்கிரதையாக முதலிலேயே கொட்டை எழுத்துக்களில் பின்வரும் எச்சரிக்கையை விடுத்திருந்தார்கள்.

'கல்கத்தா சர்வகலாசாலையின் பி. ஏ., பி. எஸ்ஸி. பரீட்சைகளின் முடிவுகள் ஸிண்டிகேட்—தெரிவித்த விவரப்படி கீழே வெளியிடப்பட்டிருக்கின்றன. முடிவுகளைச் சரியானபடி பிரசுரிக்க மிக்க கவலை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதையும் மீறி அங்கும் இங்குமாகத் தவறுகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆகையால் இது சகஜமென்று எண்ணும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.'

வங்கப் பத்திரிகைகளில் இப்படி முன் கூட்டியே பிரசுரித்து விடுவதற்குக் காரணம், தவறுகளால், பாதிக்கப்பட்ட மாணவர்கள் பத்திரிகைக் காரியாலயத்துக்குத் தீ வைக்காமலிருப்பதற்காக இருக்கலாம்.

கல்கத்தா சர்வகலாசாலைப் பரீட்சைகளில் தேறியவர்களின் எண்களை அமைத்திருந்த விதமும் எனக்குப் பிடித்திருந்தது. அவர்கள் முதல், இரண்டாவது, மூன்றாவது வகுப்பு என்று பிரித்துப் போட்டுக் கொண்டிருக்கவில்லை. எண்களை ஆரம்பத்திலிருந்து 4, 7, 8, 10 என்று வரிசையாகப் போட்டிருந்தார்கள். ஒவ்வொரு எண்ணுக்கும் பக்கத்தில் F. S. D. P. R. W. R. A. Inc. என்ற எழுத்துக்களைச் சேர்த்திருந்தார்கள். முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, சாதாரணமாகத் தேறியவர்கள், முடிவு வெளிப்படுத்தப்படவில்லை, மாணவன் ஒழுங்காக நடந்துகொள்ளாததற்காக அவன் மீது புகார் செய்யப் பட்டிருக்கிறது, முடிவு பூர்த்தியாகவில்லை என்று இந்த எழுத்துக்களுக்கு அர்த்தம்.

புகழ் பெற்ற பீவர் புரூக்

1940ல் பிரிட்டனுக்கு நேரவிருந்த மகத்தான ஆபத்திலிருந்து அவமானத்திலிருந்து காப்பாற்றினர் ஒருவர். இதே சமயத்தில் அமெரிக்கர்கள் தங்களைக் காத்துக் கொள்ள அவகாசத்தையும் வழி வகைகளையும் உண்டாக்கிக் கொடுத்தார் இவர். இவர் பிறந்தது கானடாவின் அடர்ந்த கானகத்தில். முப்பத்தெட்டு வயதுவரை உலகம் இவரை 'மாக்ஸ் அட்கென்' என்றே அழைத்தது. அதன் பிறகே இவர் லார்டு பீவர் புரூக்கானர்! கடந்த ஜூன் ஒன்பதாம் தேதி தமது எண்பத்தைந்தாவது வயதில் லண்டனில் காலமான அதே லார்டு பீவர் புரூக்தான் இவர்!

1940ல் இவர் இங்கிலாந்தை எப்படிக் காப்பாற்றினர்? பிரிட்டன் இரண்டாவது உலகப் போரின் ஆரம்பத்தில் தோல்வி மேல் தோல்வியாக அடைந்து வந்ததையும், பின் வாங்குவதிலும் 'வெற்றிகரமான வாபஸ்' என்று சொல்லிக் கொண்டதையும் 'டன்கர்க்' என்ற கேலிச் சொல்லுக்கு ஆளானதையும் யாராலும் மறந்திருக்க முடியாது. லண்டன், லிவர்பூல் ஆகிய பிரதான நகரங்கள் ஜெர்மானியக் குண்டுகளால் தகர்க்கப்பட்டு எரிந்து கொண்டிருந்த வேளை அது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சரிந்து மண்ணோடு மண்ணாகி விடுமோ என்ற நிலையில் இருந்த வேளை அது.

'டன் கர்க்' செய்யப்பட்ட அந்தத் தருணத்தில் வின்ஸ்டன் சர்ச்சில், இங்கிலாந்தின் விமான பலத்தைச் சில மாதங்களில் இரட்டிப்பாக்கினால்தான் நாட்டைக் காக்க முடியும்; இல்லாவிடில் அழிவுதான் என்பதை உணர்ந்தார். ஒரு சாம்ராஜ்யத்தின் விமானப் படையைத் தொண்ணூறேநாட்களில் இரண்டு மடங்காக்குவதென்பது சாதாரண விஷயமா? அற்புதங்கள் நிகழ்த்தும் யாராவது ஒருவரால்தான் சாத்தியம் என்பதைச் சர்ச்சில் உணர்ந்தார். ஆகவே அத்தகைய ஒருவரை அவர் தேர்ந்தெடுத்தார். அவர்தான் லார்டு பீவர் புரூக்! விமான உற்பத்தியில் குதித்தார் புரூக். 1940 மே மாதத்தில் பிரிட்டனின் விமான உற்பத்தி மாதத்துக்குத் தொள்ளாயிரம். அனால் பீவர்புரூக் கையில் அது வந்த பிறகு ஆகஸ்டில் மாதம் ஒன்றுக்கு 1800 விமானங்களைப் பிரிட்டன் உற்பத்தி செய்து குவிக்கலாயிற்று. இத்தகைய அற்புதத்தை பீவர் புரூக் நிகழ்த்தினரோ, ஜெர்மானியர்கள் பிரிட்டனைக் கபளீகரம் செய்ய முடியாமல் திரும்பினர்களோ! சரித்திரத்தை மாற்றியமைத்த நிகழ்ச்சியல்லவா இது!



லார்டு பீவர் புரூக்

லார்டு பீவர் புரூக் அதிகம் படித்தவரல்ல. மிகச் சொற்பமான கல்வியே கற்றுளும் நீண்ட நாட்கள் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கவில்லை. சென்ற சில நாட்களிலும் மற்றப் பையன்களோடு சண்டையிட்டாரே தவிரப் படிப்பில் கவனம் செலுத்தவில்லை. பள்ளியில் அடங்காப் பிடாரி என்ற பெயர் எடுத்த இவரை உபாத்தியாயர் தினமும் செம்மையாகச் சவுக்கினுல் விளாசுவார். இப்படிப்பட்ட ஒரு பிள்ளை வாலிபரான போது அவரது வாழ்க்கை எப்படி இருக்கும்? எடுத்த காரியத்திலெல்லாம் தோல்விதான். இன்ஷியூரன்ஸ் ஏஜண்டாகப் பணியாற்றினர். தோல்வியே கண்டார். தையல் மிஷின்களை விற்கும் வியாபாரியானர். தோல்வி! செய்திப் பத்திரிகை நடத்தினர். தோல்வி! சட்டப் படிப்புக்கான நுழைவுப் பரீட்சை எழுதினர். அதிலும் தோல்விதான்!

இருபது வயதில் பீவர் புரூக் ஒரு செண்ட் கூடச் சம்பாதிக்க லாயக்கற்றவராக இருந்தார். முப்பதாவது வயதிலோ ஒரு மிலியன் பவுன்களுக்கு அதிபராக விளங்கினர். இது எப்படி? முதலில் இவர் கானடாவில் உள்ள ஹாலிபாக்ஸ் நகரில் ஒரு முதலீடு செய்யும் பாங்கியில் காரியதரிசியாக வேலைக்கு அமர்ந்தார். தம்முடைய உற்சாகத்தினுலும், உழைப்பினுலும் இவர் பாங்குகளை ஒன்றோடொன்று இணைக்கலானர். இதே போல இரும்பு, மின்சாரக் கம்பெனிகளையெல்லாம் ஒன்றாக இணைக்கும் வேலையில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். பத்தே ஆண்டுகளில், அந்தக் காலத்தில் யாராலும் நினைக்க முடியாத அளவுக்குச் செல்வத்தை அள்ளிக் குவித்தார். இருந்தபோதிலும் பீவர் புரூக் திருப்தி அடைந்து விடவில்லை.

கானடாவை விட்டு வெளியேறினர். இங்கிலாந்துக்கு வந்தார். அரசியலில் குதித்தார். மகத்தான தேர்தல் சாகஸங்கள் புரிந்து தம்மைப் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கும்படி செய்தார். பலமுள்ள அரசியல்வாதியாக விளங்க லண்டன் தினசரியான 'டெய்லி எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகையையே விலைக்கு வாங்கினர். முதல் வருஷத்தில் அது 2,00,000 பவுன்களை நஷ்டமாக்கியது. இரண்டாவது ஆண்டு கொஞ்சம் சுமார். பத்திரிகை சூடு பிடித்தது. முதல் வருஷ நஷ்டத்தில் மூன்றில் ஒரு பங்குதான் இரண்டாவது வருஷம். பத்திரிகையில் சுடச்சுட எழுதும்படி தம் ஆசிரியர்களை ஊக்கினர் பீவர் புரூக். திகைப்பூட்டும் செய்திகளையும் கவர்ச்சிகரமான தலையங்கங்களையும் தீட்டி அரசாங்கத்


தைத் தாக்கினர். சந்தாதாரர்களுக்கு பரிசுகள் வழங்கினர். வாசகர்களிடையே போட்டி வைத்து இலவசமான இன்ஷ்யூரன்ஸ் பாலிசிகளை வாரி வழங்கினர். குதிரைப் பந்தயத்தின் ரேஹஸ்யங்களை வெளியிட்டார். இதனல் பலர் பந்தயங்களில் வென்றூர்கள். இப்படிப் பல விதங்களில் டெய்லி எக்ஸ்பிரஸின் விற்பனையை 800 சத விகிதம் உயர்த்தினர். 3,00,000 பிரதிகளிலிருந்து 25,00,000 பிரதிகள் வரை உயர்ந்தது. தமது பத்திரிகையை உலகிலேயே மிக அதிகமான விற்பனை உடைய ஒரு தினசரியாக்கினர். அது மட்டுமா? 'ஈவினிங் ஸ்டாண்டார்டு' என்ற மற்றொரு பத்திரிகையை வாங்கினர். மூன்றாவதாக, 'சண்டே எக்ஸ்பிரஸ்' என்ற புதுப் பத்திரிகையை ஆரம்பித்தார். இந்த நிலையில் பிரிட்டிஷ் காபினெட்டை உருவாக்க உதவும் முக்கியமான புள்ளிகளில் ஒருவரானர் பீவர் புருக். லாயிட் ஜார்ஜ் பிரதமராவதற்குக் காரணமாக விளங்கியவர் இந்தப் பீவர் புருக்தான்.

இத்தனை சாகஸங்களைப் புரிந்த இவரால் தமது உள்ளம் ஏங்கிய ஒரு காரியத்தை மட்டும் சாதிக்க முடியவில்லை. இங்கிலாந்தின் பிரதமராகத் தாம் ஆகிவிட வேண்டுமென்பது இவரது தணியாத ஆவல். தம்மைப் பிறர் குறை கூறித் தாக்கிப் பேசினலும் பேசட்டும், ஆனல் அசட்டை செய்து ஒதுக்கி விடக் கூடாது என்று நினைப்பவர் பீவர் புருக். தம் பத்திரிகையில் வேலை பார்ப்போரிடையே இதற்காக ஒரு பரிசை ஏற்படுத்தினர். தம்மைத் தாக்கித் தம் குண விசேஷங்களை அலசி ஆராய்ந்து, கண்டனம் செய்து எழுதப்படும் சிறந்த கட்டுரைக்கு ஒரு பெருந்தொகையைப் பரிசாகத் தர முன் வந்தார்.

இங்கிலாந்தின் தலைசிறந்த கேலிச் சித்திரக்காரரான காலஞ் சென்ற 'லோ' வேறு பத்திரிகையில் இருந்தபடி பீவர் புருக்கைத் தாக்கிப் படங்கள் வரைந்து கொண்டிருந்தார். புருக் லோவை அழைத்து, "என் பத்திரிகைக்கு வந்து என்னையே பரிகசித்துப் படங்கள் போடு. உனக்கு வருஷத்துக்கு 10,000 பவுன்கள் தருகிறேன்" என்றூர். லோவும் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு பீவர் புருக்கின் பத்திரிகையில், அடிக்கடி தமது எஜமானரையே புழுவாகவும், அரக்கனகவும் பலவாறூகப் பரிகசித்துப் படங்கள் வரையலானர்.

இப்படிப் பத்திரிகை உலகில் பிறர் கண்டு அதிசயிக்கும் செயல்கள் பல புரிந்து 'பத்திரிகை உலகில் மன்னன்' என்ற பாராட்டையும் பெற்றவர் பீவர் புருக்.

1943ல் சர்ச்சில் மந்திரி சபையில் இடம் பெற்ற போது, மூன்றரை வருடத்தில் அது அவர் வகித்த ஐந்தாவது பதவி. விமான உற்பத்தி மந்திரியாகப் புகுந்த அவர், மினிஸ்டர் ஆப் ஸ்டேட், மினிஸ்டர் ஆப் ஸப்ளை, மினிஸ்டர் ஆப் புரொடக்ஷன் ஆகிய பதவிகளை அடுத்தடுத்து வகித்தார். கடைசியாக அவர் ஏற்ற பதவி லார்டு பிரீவி ஸீல் **(Lord Privy Seal)** இங்கிலாந்தில் இவரைச் செல்லமாகப் பீவர் என்றுதான் அழைப்



கணக்குப் பேராசிரியர் தம் மனைவிக்கு வெட்டித் தந்த காய்கறிகள்.

பார்கள். பீவர் புருக் என்ற பெயர் எப்படி வந்தது இவருக்கு? கானடாவின் காட்டில் பிறந்த இவர் பீவர் புருக் என்ற ஓடையில் அடிக்கடி மீன் பிடித்துக் கொண்டிருப்பாராம். இதனல் இவரை மக்கள் பீவர் புருக்காகவே ஆக்கி விட்டார்கள். தினமும் குதிரைச் சவாரி செய்வதிலும், அப்படிப் போகும் போது நீக்ரோக்களின் உல்லாசப் பாடல்களைப் பாடிக் கொண்டே குதிரையை மரங்களிடையிலே வேகமாக விரட்டிச் செல்வதிலும் இவருக்கு விருப்பம் அதிகம்.

இவரது எஸ்டேட்டில் ஒரு பிரத்தியேகமான சொந்த சினிமாத் தியேட்டர் உள்ளது. இவர் அடிக்கடி திரையிட்டுப் பார்க்கும் சினிமாப் படம் 'டெஸ்ட்ரி ரைட்ஸ் எகைன்' **(Destry rides again)** என்பது.

லார்டு பீவர் புருக் இரண்டு சிகையலங்காரிப்பாளர்களை ஒரே சமயத்தில் வேலை வாங்குவார். ஒருவர் முக க்ஷவரம் செய்யும் போது மற்றவர் அவரது முடியை வெட்டிக் கொண்டிருக்க வேண்டும். இதனலும் காலம் வீணகிறதென்று இவர் 'எலெக்ட்ரிக் ஹேர் கட்டர்' ஒன்றை வாங்கித் தாமே தமது சிகையைக் கத்திரித்து ஒழுங்குபடுத்திக் கொள்ளலானர்.

பீவர் புருக் மிக மிகச் சிறிய ரேடியோ ஒன்றை வாங்கி அதை ஒரு கயிற்றில் கட்டித் தம் கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு அதன் சங்கீதத்துக்கு ஏற்ப நடனமாடுவார். தமது கிராமத்து பங்களாவின் எல்லா அறைகளுக்கும் டெலிபோன் அமைத்திருந்தார் புருக். குளியல் அறையிலும்கூட டெலிபோன் உண்டு.

எட்டுப் பவுன் விலையுள்ள பூட்ஸ்களை வாங்கும் இவர் அதே சமயம் அதில் பாதி விலையுள்ள ஆடைகளையும் வாங்குவார். விலையுயர்ந்த சட்டைகளைத் தைக்க ஆர்டர் கொடுப்பார். ஆனல் அந்தச் சட்டையில் கைப் பொத்தான்கள் விழுந்து விட்டால் அதை 'சேப்டி' பின் கொண்டு இணைத்துக் கொண்டு நிற்பார்.

தம் வீட்டின் அருகில் உள்ள மைதானத்தில், கல்லறைகளின் மீது புதைக்கப்படும் சிலுவைக் குறியுடைய ஒரு கல்லை நாட்டி வைத்திருந்தார். இரவு வேளைகளில் இதன் மீது மின்விளக்குகளைக் கொண்டு ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சும்படி செய்திருந்தார்.

"வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு விநாடியையும் நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் மரணம் அதோ அங்கே எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது" என்பதைத் தமக்கு நினைவுபடுத்தவே பீவர் புருக் அந்தக் கல்லை அப்படி அங்கே நிறுவியிருந்தாராம். — **கௌசிகன்**



அறிவுக் கனலே, அருட்புனலே!

ரா. கணபதி 73



அமெரிக்காவை அடைந்த ஸ்வாமிஜி அமைதியை நாடினார். நகரங்களின் வெறிக் கூச்சலை ஒதுக்கினார். நியூயார்க்கிலிருந்து நூற்றைம்பது மைலிலிருந்த ஸ்டோன்ரிட்ஜ் கிராமத்தில் சென்று வசித்தார். நண்பர்கள் விருப்பத்துக்கிணங்கி, உடலைப் பிடித்துவிட்டும் தேய்த்தும் நோவைக் குணமாக்கும் 'ஆஸ்டியோபதி' சிகிச்சை பெற்று வந்தார். ஒரு மாதத்துக்குப் பின் சகோதரி நிவேதிதையும் ஸ்டோன்ரிட்ஜுக்கு வந்து சேர்ந்தாள். தான் துவராடை பூணப்போவதாகத்தெரிவித்தாள். மகள் மகாராணியாவதாகச் சொன்னால் தந்தை எப்படி மகிழ்வாரோ அப்படி மகிழ்ந்தார் ஸ்வாமிஜி. அந்த மகிழ்ச்சியில் முகிழ்த்த கவிதையை நிவேதிதைக்குப் பரிசளித்தார்.

சாந்தி

இருளில் இழையும் இன்னொளியாயும்
ஒளியில் இணையும் நிமலதாயும்
சக்தி யெனவொரு சக்தியாய் நின்றது
வல்லமையோடிங்கு வருகுது காணீர்

வார்த்தையில் வாரா இன்பம் அதுவே
உணர்வில் வாராத இன்னலும் அதுவே
வாழ்வில் வந்திடா அமரவாழ்வதுதான்
சோகம் கண்டிரா சாசுவத சாவது !

ஆனந்தம் அல்ல ; அல்லலும் அல்ல ;
இரண்டின் இடையில் இசையும்பொருளது
காலையும் அல்ல ; கங்குலும் அல்ல ;
இரண்டையும் இணைக்கும் இடைவெளியே அது

இசையிடைத் தோன்றும் மதுரமோனம்அது
சுந்தரக் கலையின் அந்தரம் அதுவே
பேச்சினூடேபுகு பேசாமை அது
உணர்வுகள் ஓங்கி உலுக்கிடும்போது
இதயத் தமைதியாய் இலங்குவததுவே

அன்புசெய் யப்படா அழகுகள் அதுதான்
ஏகாங்கியாய் வாழ் அன்பும் அதுவே
கானம் செய்திராகீதம் அதுதான்
அறியவொண்ணாத அறிவாவதும் அது

இருபிறப்புக்கிடை இறப்பாவதுஅது
இருபுயலுக்கிடை அமைதியும் அதுவே
உயிர்கள் உதிக்கும் பரவெளி அதுதான்
உயிர்கள் லயிக்கும் பரவெளியும் அது ;

சோகத்துளி தன் சுந்தரச் சிரிப்பை
மலர்த்திக்கொள்ளும் மறைவிடம்அதுதான்;
வாழ்வுத் தத்துவ விளிம்பு அதுவே
சாந்திவெள்ளம் அதன் சொந்தஇல்லம்

ஃ ஃ ஃ

1899-ம் ஆண்டு டிஸம்பரிலும், திகழும் நூற்றாண்டைப் பிறப்பித்த 1900ம் ஆண்டின் ஜனவரி மாதத்திலும் கலிஃபோர்னியாவின் பல பகுதிகளில் ஸ்வாமிஜி பிரசங்கங்கள் புரிந்தார். பாஸடேனாவில் இயேசுநாதரைப்பற்றி ஸ்வாமிஜி ஓர் உரை நிகழ்த்துகையில் அவரைச் சுற்றி ஜோதி ப்ரபை தெரிந்ததைத் தன் கண்ணால் கண்டதாகக் குமாரி மக்லியாட் கூறுகிறாள்.

இந்தப் பிரசங்கம் முடிந்து அவர் இருக்கைக்குத் திரும்புகையில் ஏதோ தீர்க்கமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார். திடீரென்று ''நான் கண்டுபிடித்துவிட்டேன்'' என்று கூவினார். ''என்ன கண்டுபிடித்தீர்கள்?'' எனக் கேட்டாள் குமாரி மக்லியாட். அவர் இயேசுநாதரைப் பற்றி ஏதோ புதிய உண்மையினை ஆராய்ந்து அறிந்திருக்க வேண்டும் என ஆவலோடு எதிர்பார்த்தாள் அவள். ஆனால் ஸ்வாமிஜியோ, ''மினாருத் தண்ணீர் எப்படிச் செய்கிறார்கள் என்று கண்டுபிடித்து விட்டேன்'' என்றார். அதைப் பற்றித்தான் அவ்வளவு ஆழ்ந்த யோசனை!

நதிக் கரையில் அமைந்த ஓர் ஊர். கோழிமுட்டை ஓடுகளைக் கோத்து நதித் தண்ணீரில் மிதக்கவிட்டு அவற்றைச் சுடுவதற்குத் துப்பாக்கிப் பயிற்சி செய்துகொண்டிருந்தனர் சில வாலிபர்கள். அவர்களுடைய

முயற்சிகள் பலிதமாகவில்லை. ஸ்வாமிஜி சிரித்தார்.

''பார்த்தால் சுலபமாகத் தோன்றும். ஆனால் இது எளிதில் முடிகிற காரியமில்லை. நீங்கள்தான் கொஞ்சம் முயன்று பாருங்களேன்!'' என்று கூறித் துப்பாக்கியை ஸ்வாமிஜியிடம் கொடுத்தனர் அந்த இளைஞர்கள்.

என்ன ஆச்சரியம்! ஸ்வாமிஜி குறிதப்பாமல் அடுத்தடுத்து ஆறு முட்டைகளைச் சுட்டார்.

''சுடுவதில் நீங்கள் மிகவும் தேர்ச்சி பெற்றவர் போலிருக்கிறதே!'' என்றனர் வாலிபர்கள்.

''அல்ல, தம்பிமார்களே! இன்றுதான் நான் முதன் முறையாகத் துப்பாக்கியைத் தொடுகிறேன். எல்லாம் மனத்தின் ஒருமைப் பாட்டில்தான் இருக்கிறது'' என்றார் ஸ்வாமிஜி.

ஸ்வாமிஜி கலிபோர்னியாவிலிருந்து புறப்படுமுன்னர் குமாரி மின்னி ஸி. பூக் என்பவள் ஸாண்டா கிளாரா என்ற மாவட்டத்தில் வனமும் மலையும் சூழ்ந்த 'கன்னி நாட்டில்' நூற்றறுபது ஏக்கர் நிலத்தை ஸ்வாமிஜிக்குக் காணிக்கையாக அளித்தாள். ஏர் முனையையும் மாந்தரையும் கண்டிராத அந்தப் பூமியில் சாந்தி ஆசிரமம் பூத்தது.

இத் தருணத்தில் ஸ்வாமிஜியின் இதய ஹம்ஸம் எவ்வளவு உச்சத்தில் சிறகடிக்காமலே நீந்திக்கொண்டிருந்தது என்பதை அவர் குமாரி மக்லியாடுக்கு எழுதிய கடிதம் தெளிவாக்குகிறது. இந்த உலகில் சாந்த நிலைவு வாழ்வதற்கு இந்த ஒரு கடிதமே போதும்.

எழுதுகிறார் ஸ்வாமிஜி:

''கர்மம் புரிவது எப்போதுமே ரொம்பக் கடினமானது. எனக்காக வேண்டிக் கொள்: என் வேலைகள் நிரந்தரமாக ஓயவேண்டும் என்று வேண்டிக் கொள். அம்பிகை என் ஆத்மாவைப் பூரணமாகத் தன்னுள் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்துக்கொள். எல்லாம் அவளுடைய வேலை; அவள் அறிவாள்...

நான் சௌக்கியமாக இருக்கிறேன்; உள்ளத்தில் பரம சௌக்கியமாக இருக்கிறேன். உடம்பின் ஓய்வை விட உள்ளத்தின் ஓய்வை அதிகமாக உணர்கிறேன். எத்தனையோ போராடித் தோல்வியும் கண்டாச்சு; வெற்றியும் கண்டாச்சு! என் பொருட்களையெல்லாம் திரட்டி மூட்டை முடிச்சு கட்டி வைத்துக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றையும் பட்டுவாடா செய்கிற மகா பெரியவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். சிவா, பரம சிவா! என் படகை அக்கறைக்கு ஓட்டிப் போடா அப்பனே!....

''பார்க்கப் போனால் நான் யார்? தக்ஷிணேச்வரத்திலே, ஆல மரத்தடியிலே ராமகிருஷ்ணர் கூறிய அற்புத வாக்குகளை அதிசயத்தோடு மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்த இளம் பிள்ளையாகத்தான் நான் இன்றும் இருக்கிறேன். அதுவே என் உண்மையான இயல்பு. வேலைகளும், செய்கைகளும் — நல்லது செய்வதென்பது கூடத்தான் — இதெல்லாம் என் உண்மை இயல்பின் மேல் சுமத்திய போர்வைகளே.

''இப்போது அவருடைய குரல் மீண்டும் கேட்கிறது. அதே பழைய குரல். அதே போல் என் ஆத்மாவைப் புல்லரிக்கச் செய்கிறது. தளைகள் தகர்கின்றன. பாசம் சாகிறது. வேலை சப்பிட்டுவிட்டது. வாழ்க்கை என்பது வசீகரங்களிலிருந்து விடுபட்டுவிட்டது. இனி குருநாதன் கூப்பிடும் குரல் ஒன்றுதான்! 'வருகிறேன், பிரபு! வருகிறேன்.'

''ஆம். நான் குருநாதனிடம் வந்துவிட்டேன்! முக்தி நிலை இதோ, எனக்கு முன்னே நிற்கிறது. அதனை அநேக சமயங்களில் அநுபவித்திருக்கிறேன். அதே அனந்தமான சாந்த சாகரமாக — ஒரு சிற்றலைகூட இல்லாத, ஒரு சிறு சுவாசம் கூட விடாத சாகரமாகத்தான் — அது இருக்கிறது.

''நான் பிறந்தேனே என்று மகிழ்கிறேன். எவ்வளவோ துன்புற்றேனே என்று மகிழ்கிறேன். மகத்தான தவறுகள் செய்தேனே என்று மகிழ்கிறேன். சாந்தியில் புகப் போகிறேனே என்று மகிழ்கிறேன். நான் யாரையும் பந்தத்துக்கு ஆளாக்கவில்லை. நான் எந்த பந்தத்தையும் என்னுடன் எடுத்துச் செல்லவில்லை. இந்த உடல் விழுந்து என்னை விடுவிக்குமோ, அல்லது உடலிலேயே நான் வீட்டை அடைவேனோ — அந்தப் பழைய விவேகாநந்தர் போயாச்சு; மறுபடியும் அவர் வரவே மாட்டார்.

''வழிகாட்டியாகவும், குருவாகவும், தலைவராகவும், போதகராகவும், இருந்தவர் போய்விட்டார். பையனாகவும், மாணவனாகவும், பணியாளாகவும் இருந்தவர்தான் இப்போது பின்தங்கியிருக்கிறார்.... தலைவன் என்ற என் ஹோதாவை நான் எப்போதோ விட்டுவிட்டேன். என் குரலை எழுப்ப எனக்கு உரிமை இல்லை என்று உணர்கிறேன். இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து இந்தியாவில் நான் யாருக்கும் எந்த உத்தரவும் போடவில்லை.

''நான் இப்போது மிதந்துகொண்டு இருக்கிறேன். எனக்கு மேலே பிரகாசமான சூரியன். என்னைச் சுற்றிலும் நெருக்கமான பயிர் பச்சைகள். இள வெப்பத்தில் எல்லாமே அமைதியாக, சாந்தமாக இருக்கின்றன.... நதியின் மிதவெப்பமான இதயத்தில் மந்தமாக மிதந்து கொண்டிருக்கிறேன்! என் கையாலோ காலாலோ தண்ணீரை வாரியடிக்க நான் துணிய மாட்டேன்...

''என்னுடைய வேலைகளுக்குப் பின்னால் பேராசை இருந்தது. என்னுடைய அன்புக்குப் பின்னால் அகம்பாவம் இருந்தது; என்னுடைய தூய்மைக்குப் பின்னால் பயம் இருந்தது; என்னுடைய தலைமைக்குப் பின்னால் அதிகார வேட்கை இருந்தது! இப்போது அவையெல்லாம் மறைந்து விட்டன; வெறுமே மிதக்கிறேன். நான் வருகிறேன் அம்பிகே! குளிரடக்கமான உன் கதகதக்கும் மார்பகத்துக்கு வருகிறேன். மொழியில்லாத, பழக்கமில்லாத, அற்புதமான உலகில் நீ எங்கெல்லாம் செலுத்துகிறாயோ அங்கெல்லாம் மிதந்துகொண்டு உன்னிடம் வருகிறேன். பார்வையாளனாக வருகிறேன், நடிப்பவனாக அல்ல!...

''ஆஹா! எப்பேர்ப்பட்ட சாந்தம்! என் இதய அந்தரங்கத்திலிருந்து வரும் எண்ணங்

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

கார் சவாரியில்
ஒரு புது அனுபவம்



கீழ்க்கண்ட போற்றத்தக்க வசதிகளுடன் கூடியது

- 25 அடி வட்டத்திற்குள் திருப்ப முடியும்
- ஒவ்வொரு சக்கரத்திற்கும் தனித்தனி சஸ்பென்ஷன் (Suspension இணைப்பு இருக்கிறது (சுலபமாக அபாயமின்றி திருப்பலாம். ரஸ்தாவில் நல்ல பிடிப்பு உண்டு. முன் சக்கரத்திற்கு ஏற்படும் அதிர்ச்சி முன் சக்கரத்தின் ஸ்ப்ரிங்குகளிலேயே தாங்கிக்கொள்ளப்படுவதால், வண்டியின் பின்புறம் அதிர்ச்சியோ, ஆட்டமோ அடையாது.)
- எஃகு கர்டரினாலான சாஸிஸ் (Chassis) (மிக உறுதியான கார் அமைப்பு)
- 93% வெளிப்பார்வை வசதி

STANDARD herald

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

உறுதியான, *எழில் மிகுந்த* கார்

தயாரிப்பாளர்கள்,
ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்
சென்னை-2

விநியோகஸ்தர்கள்
யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சென்னை உதகை
யுனிகான் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட் பெங்களூர்

FDS/SM/4-TM

தலைவலியிலிருந்து

நல்ல, நிச்சயமான நிவாரணம்



அனாஸின் இவ்வளவு சக்திவாய்ந்ததாக இருப்பதற்குக் காரணம் அது ஒரு டாக்டரின் குறிப்பைப்போன்று மருந்துகளின் சேர்க்கையாகும்—துரிதமாகவும் நிவாரணமளிக்கிறது.

1. வலியிலிருந்து துரித நிவாரணம் அளிப்பதற்கென அனாஸினில் ஒரு பிரத்தியேகமான முறையில் பொருள்கள் சேர்க்கப் பட்டுள்ளன.
2. அனாஸின் சாதாரணமாகத் தலைவலிக்குக் காரணமான நரம்புகளின் படபடப்பைப் போக்குகிறது.
3. அனாஸின் ஜுரத்தைத் தணிக்க உதவுகிறது.
4. அனாஸின் உபயோகிப்பதால் வலி மற்றும் ஜுரத்தினால் ஏற்படும் சோர்வு நீங்குகிறது.

Registered Users: GEOFFREY MANNERS & CO: LTD.

அனாஸின்

சிறந்தது எனெனில் அது
4 வழிகளில்
வேலை செய்கிறது

2 வில்லைகளுக்கு 13 ந. பைசேதான்

TAM RR

களே எங்கிருந்தோ தொலை தூரத்திலிருந்து வருவது போல் தோன்றுகின்றன. தூரத்தி லிருந்து மெலிந்த ரகசியங்களாக அவை வருகின்றன. சாந்தி, இனிய சாந்தி, தித்திக்கும் சாந்தி, தூங்குவதற்கு முதல் விநாடிகளில் எல்லாவற்றையும் பயமோ, அன்போ, வேறெந்த உணர்ச்சியோ இல்லாமல் நிழலாகப் பார்ப்போமே, அநுபவிப்போமே—அதைப் போல் எல்லாம் சாந்தமாக இருக்கிறது. சிலைகளும் சித்திரங்களும் நிறைந்த இடத்தில் தனியொருவனாக நிற்பவனின் சாந்தியைக் காண்கிறேன். 'நான் வந்தேன் பிரபு, வந்தேன்!'

''உலகம் இருக்கவே செய்கிறது; ஆனால் ஆனால் அது அழகாகவும் இல்லை; கோரமாகவும் இல்லை. ஒருவிதக் கிளர்ச்சியும் ஏற்படுத்தாத உணர்வுகளாகவே உலகம் தெரிகிறது. ஆஹா! எல்லாம் எவ்வளவு மங்களமாயிருக்கிறது! எல்லாம் நல்லனவாக, எல்லாம் எழில்களாக இருக்கின்றன. பொருள்களின் நானுவிதமான அளவைகள் எல்லாம் என்னைப் பொறுத்தமட்டில் மாய்ந்து விட்டன. இவற்றில் முதலில் என் உடம்பு என்கிற பொருளைச் சொல்ல வேண்டும். ஓம் தத் ஸத்!''

மே மாதக் கடைசியில் நியூயார்க்குக்குப் புறப்பட்டார் ஸ்வாமிஜி. வழியில் லொகோவில் தமது பிறந்த வீட்டுக்குச் சமமான ஹேல் இல்லத்துக்குச் சென்றார். பழைய நினைவுகளை அந்தக் குடும்பத்து அன்பு அங்கத்தினரோடு கொட்டி அளந்தார்.

ஸ்வாமிஜி அங்கிருந்து கிளம்ப வேண்டிய நாள் காலை.

அவரது அறைக்குள் சோகமாக வந்தாள் மேரி. அவளிடைச் சோகமாக ஸ்வாமிஜி வீற்றிருந்தார்.

அவருக்காகப் போடப்பட்டிருந்த மெத்தையின் விரிப்பில் ஒரு மடிப்புக்கூடக் கலையாமல் இருந்ததைக் கண்டாள் மேரி.

''ஸ்வாமிஜி, ராத்திரி நீங்கள் படுத்துக் கொள்ளவே இல்லையா?'' என்றாள்.

''இல்லை. படுக்கவே தோன்றவில்லை. உட்கார்ந்துகொண்டும், உலவிக்கொண்டுமே இரா முழுவதையும் கழித்தேன்'' என்று கூறிய ஸ்வாமிஜியின் குரல் கம்மிற்று. ''ஆகா! மனிதத் தன்மை நிரம்பிய பந்தங்களை விலக்குவது எவ்வளவு சிரமம்!'' என்றார்.

ஹேல் குடும்பத்தினரின் விருந்தினராகத் தாம் தங்குவது இதுவே கடைசி முறை என்பதை அவர் அறிந்திருப்பார் அல்லவா?

ஸ்வாமிஜி எவ்வளவு அன்புருவாயிருந்தார் என்பதற்கு இக்காலத்தில் அவர் நிவேதிதைக்கு எழுதிய ஒரு கடிதமும் சான்று பகர்கிறது. ''அன்பு செய்து துன்புறவே சிலர் படைக்கப்பட்டிருக்கின்றனர். நான் யாரிடையே பிறந்தேனே அந்த மக்களுக்காக என் இதயத்தை நொறுக்கிக் கொண்டிராவிடில், வேறு யாருக்கேனும் என் இதயத்தை நொறுக்கிக் கொண்டுதான் இருப்பேன். சிலர் துன்பமுறுவதிலேயேதான் இன்பம் காண்கிறார்கள் — வேடிக்கையாய் இல்லை?'' என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டார்.

கலிபோர்னியாவில் நிறுவப்பட்ட சாந்தி ஆசிரமத்தை நிர்வகிப்பதற்காக அங்கு செல்லுமாறு துரீயானந்தரைப் பணித்தார்

ஏட்டிக்குப் போட்டி

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பதினேழாவது திருத்தத்தை ஆட்சேபித்து ஸுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கலாகியிருக்கிறது. —**பத்திரிகைச் செய்தி**

திருத்தம் என்ற வார்த்தை சரிதானா? ஒரு விஷயம் தவறாக இருந்தால் அதைத் திருத்தலாம். சரியாக இருப்பதை மாற்றித் தவறு செய்தால் அதைத் திருத்தம் என்பதா?

ஃ ஃ ஃ

நூறு ரூபாய் ஐம்பது ரூபாய் நோட்டுக்களுக்குச் சில்லறை மாற்ற இலங்கையில் பாங்குகள் முன்பு ஏகக் கூட்டம். —**கொழும்பில் கலவரம்**

இந்தியாவில் இதற்கு நேர் மாறாக நடந்தால் அதிசயிப்பதற்கில்லை. பணவீக்கம் காரணமாய் ஒருரூபாய் இரண்டு ரூபாய் நோட்டுக்களெல்லாம் வருங் காலத்தில் மதிப்பிழந்து அவற்றுக்கு எந்தப் பொருளையும் வாங்கக் கூடிய சக்தி இல்லாமல் போய்விடும். சில்லறை நோட்டுக்களைச் சுமப்பதற்குப் பதில் **அவற்றைக் கொடுத்து அதே பெறுமான**முள்ள பெரிய ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுக்களைப் பெற பாங்குகளில் கூட்டம் சேரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

—**பொருளாதார நிபுணர் ஜோஸ்யம்**

ஃ ஃ ஃ

கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று கலெக்டர் காரியாலயத்தின் முன் உண்ணாவிரதம்.

—**தியாகராஜனின் திடீர் முடிவு**

மனைவியாக வரவிருந்தவளின் சமையலை ஏற்கனவே ருசி பார்த்தவராக இருப்பாரோ?

ஃ ஃ ஃ

ஷெனாய் நகர் பஸ் நிலைய தகராறு

—**தலைப்பு**

சென்னையில் சர்க்கார் பஸ்களெல்லாம்தான் மக்கள் செய்கின்றனவென்றால் இப்போது பஸ் நிலையங்களும் தகராறுசெய்ய ஆரம்பித்துவிட்டனவா என்று பயந்து அலறுகிறார் தினசரி பஸ் **பிரயாணி ஒருவர்.**

ஸ்வாமிஜி. "இது அம்பாளின் சங்கல்பம். நீதான் இந்த வேலையை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார் ஸ்வாமிஜி.

துரியானந்தர் சிரித்தபடியே, "உங்கள் சங்கல்பம் என்று சொன்னாலே போதுமே! அம்பாளின் பேச்சை நாம் எங்கே கேட்க முடியும்?" என்றார்.

ஸ்வாமிஜியின் உணர்ச்சி கரை புரண்டு விட்டது.

"தம்பி! **நீயுமா** இப்படிச் சொல்கிறாய்! அம்பிகையின் வார்த்தைகளை நாம் ஏன் கேட்க முடியாது? இப்போது நம்மில் ஒருவர் பேசுவதை இன்னொருவர் கேட்பது போல் அவள் பேசியும் கேட்க முடியும். தேவியின் திருவாக்கைக் கேட்கத் தனி நரம்பு ஒன்று தேவை. அவ்வளவுதான்" என்றார்.

சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு இதே விவேகானந்த ஸ்வாமி நரேந்திரராயிருந்ததும், அப்போது சந்தேகமயமாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரை அடைந்து, 'மஹாசய, கடவுளைக் காண முடியுமா?' என்று கேட்டதும், அதற்கு பகவான், 'காண முடியும் குழந்தாய். நாம் ஒருவரை ஒருவர் எப்படிக் காண்கிறோமோ அதேபோல் —இல்லை, அதைவிட அடர்ந்த உணர்வுடன்— கடவுளைக் காண முடியும், கடவுளோடு பேச முடியும்' என்று மொழிந்ததும் நினைவு வருகின்றன அல்லவா?

ஸ்வாமிஜியின் உடல் நிலையிலும் விசேஷமான மாறுதல் எதுவும் இல்லை. ஆஸ்டியோபதி வைத்தியத்திலோ, காந்த சிகித்சையிலோ நோய் கட்டுப்படவில்லை.

'யாரோ எப்போதோ எய்த அம்பு, பழைய விசையின் பேரில் சென்று கொண்டிருப்பது போலவே ஸ்வாமிஜியின் வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. அம்பு தரையில் விழ வேண்டிய தருணம் வந்துவிட்டது' என அம்பு பொத்திய நெஞ்சுடன் அன்போடு கூறுகிறார் நிகிலாநந்தர்.

யாரோ செலுத்திய அம்பா? அம்பாளே உலக காரியத்துக்காக எய்த அம்பல்லவா அவர்? ஸ்ரீ ராமகிருஷ்ணராகி அவளே அல்லவா அவரை இயக்கினாள்?

அமீ யந்த்ர; துமீ யந்த்ரீ என்று இதைத்தான் பரமஹம்ஸர் கூறுவார்.

அம்பிகையின் திருவிளையாடல்தான் உலகம் என ஸ்வாமிஜியும் கூறினார்:

"நமக்கெல்லாம் இது விளையாட்டு என்று தெரிந்து விட்டால் இந்த விளையாட்டுப் பொம்மையான உலகம் இங்கு இராது. இந்த விளையாட்டும் நடைபெறாது. நாம் கண்ணைக் கட்டிக்கொண்டுதான் விளையாட வேண்டும். விளையாட்டில் சிலர் துஷ்டராக நடிக்கிறோம். சிலர் கதாநாயகர்களாக நடிக்கிறோம். இதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம். எல்லாம் விளையாட்டுத்தானே?" என்றார்.

1900ம் ஆண்டு ஜூலை இருபதாம் தேதி பாரிஸுக்குக் கப்பலேறிய ஸ்வாமிஜி தம்மைக் குன்றேற்றிய அமெரிக்காவிடம் நிரந்தரமாக விடைபெற்றுக் கொண்டார்!

பாரிஸில் நடைபெற்ற உலக மகா நாட்டின் அங்கமாக சமய சரித்திர மகா சபை ஒன்றும் கூட்டப்பட்டது. சமயத் தலைவர்கள் என்பதை விடச் சரித்திர நிபுணர்கள் என்ற முறையிலேயே முக்கியமாகக் குறிப்பிடத் தக்க பிரதிநிதிகள் மகா சபையில் கலந்து கொண்டனர். சமயத்தலைவராகவும், சரித்திர நிபுணராகவும் ஒருசேர விளங்கிய ஸ்வாமிஜி ஹிந்து மதத்தின் பிரதிநிதியானார்.

இரண்டே மாத காலத்தில் பிரஞ்சு மொழியைக் கசடறக் கற்று, சூக்ஷ்மமான தத்துவங்களைக் கூட அம்மொழியிலேயே விளக்குமளவுக்கு ஆற்றல் பெற்றார் ஸ்வாமிஜி. பல ஆண்டுகளுக்கு முன்பே போர்பந்தர் திவானின் உள்ளுணர்ச்சி கூறியபடி அவர் பிரெஞ்சு கற்றது இப்போது பேருதவிபுரிந்தது.

ஸ்வாமிஜி மகா சபையில் இரண்டு முறை பேசினார். பல அரிய கருத்துக்களை அள்ளித் தெளித்தார்.

லிங்க வழிபாடு, சாளக்ராம வழிபாடு இவை பால் உணர்ச்சியின்மீது தோன்றியவை என்ற மேல் நாட்டினரின் கருத்தை வன்மையாகக் கண்டித்தார் ஸ்வாமிஜி. யாகத்தில் நாட்டப்படும் யூபஸ்தம்பமே லிங்கமாகப் பரிணமித்தது என்று கூறினார். 'வேள்வித் தீ சிவபெருமானின் பொன் ஆர் மேனி ஆயிற்று. சாம்பல் அவனது கருத்த கண்டமாயிற்று. யக்ஞ சாமக்கிரிகளைக் கொண்டு வரும் பசு அவனுடைய வாகனமாயிற்று. இதேபோல யூபஸ்தம்பம் சிவலிங்கமாயிற்று' என்றார்.

வேதங்களே ஹிந்து மதம், பௌத்த மதம் இவற்றுக்கு ஆதாரமென்றும் கண்ணபெருமான் புத்தருக்கு முற்காலத்தவரென்றும் ஆணித்தரமாக வாதம் புரிந்தார்.

இந்திய இலக்கியம், சிற்ப - சித்திரம், ஜோதிஷம், வான சாஸ்திரம், கணிதம் எல்லாவற்றுக்குமே கிரேக்க சாஸ்திரங்கள்தான் ஆதாரம் என்பதை ஸ்வாமிஜி ஆட்சேபித்தார். மொழி இயல் வல்லுநர்கள் எல்லா வேர்ச் சொற்களையும் சுற்றி வளைத்துக் கொண்டாவது கிரேக்க மொழியுடன் தொடர்புறுத்துகிறார்களென்றும், நேரடியாகப் புலனாகிற சம்ஸ்கிருத தாதுக்களைக்கூடப் புறக்கணிக்கிறார்கள் என்றும் ஸ்வாமிஜி தைரியமாக எடுத்தியம்பினார்.

வங்காளம் உலகுக்குத் தந்த ஒப்பற்ற புதல்வர்களில் ஸ்வாமிஜியின் சம காலத்தவரான இன்னொருவர் தாவர விஞ்ஞானி ஜகதீச சந்திர போஸ். தாவரங்களின் உயிர்த் துடிப்பைக் கண்டுபிடித்து உலகுக்கு ஓதியவர் அவர். இவரும் பாரிஸ் மகாநாட்டில் விஞ்ஞானப் பகுதியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார். ஸ்வாமிஜியும் அவரும் ஒருவரை மற்றவர் கண்டு அளப்பரும் பெருமிதம் கொண்டனர். ஒரு நாள் பெருமக்கள் பலர் கூடியிருந்தபோது, ஆங்கில விஞ்ஞானி ஒருவரின் மாணவி, "எங்கள் ஆசிரியர் வளர்ச்சி குன்றிய லில்லிக்கு உயிர் தரச் சோதனை செய்து கொண்டிருக்கிறார்" என்றாள். ஸ்வாமிஜி பெருமைச் சிரிப்புடன், "எங்கள் போஸ் லில்லி வளருகிற சட்டிக்கே உயிர் தருவாரே!" என்றார்.



சிறந்த தரத்துடன் சிக்கனமும்
குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கிறது
எத்தனை சிக்கனமானது! எத்தனை புத்துணர்ச்சி தருவது! இந்தப் பெரிய சைஸ் டால்க்கில் உங்களுக்கு பெயர் பெற்ற கால்கேட்டின் சீரிய தரம் கிட்டுகிறது.
எத்தனை நறுமணமுடையது! எத்தனை நீடித்திருப்பது! ஸ்நானத்திற்கு பின்- வெளியே செல்லுமுன்- தாராளமாக உங்கள் உடலில் தூவிக்கொண்டு நளினமாய் விளங்குங்கள்.
எத்தனை சேர்த்தியானது! எத்தனை மிருதுவானது! கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்க்கை குழந்தை விரும்புகிறது. இளஞ்சருமத்திற்கு அது மிகவும் ஏற்றது.
COLGATE
All Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
அபூர்வ மலர்களின் நீடித்திருக்கும் நறுமணங்கொண்டது



பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்
மதராஸ்-17

முன்பு அமெரிக்காவில் ஸ்வாமிஜியைக் கண்டு, கொதிக்கும் தனது மனத்தைக் குளிர்வித்துக்கொண்ட பிரசித்தி பெற்ற நடிகை கால்வி பாரிஸில் ஸ்வாமிஜியிடம் தன் பக்தியை மறுபடி மலர்த்திக் கொண்டாள்.

கால்வி எகிப்தில் ஓய்வு கொள்ள உத்தேசித்திருந்தாள். அவளுடைய விருந்தினராக ஸ்வாமிஜியும் அங்கு சென்றூர்.

போகும் மார்க்கத்தில் பற்பல ஐரோப்பிய நாடுகளைக் கண்டு மகிழ்ந்தார் ஸ்வாமிஜி.

முதல் உலக மகா யுத்தம் மூள இன்னும் பதினைாண்டுகள் இருந்தன. ஆனால் ஸ்வாமிஜி அப்போதே போரின் நெடியை உணரத் தொடங்கிவிட்டார். ''ஐரோப்பா பெரிய ராணுவ முகாமாகிவிட்டது'' என்று கூறினூர்.

எகிப்து நாட்டை அடைந்தார் ஸ்வாமிஜி.

கெய்ரோவில் ஒரு நாள் ஸ்வாமிஜியும், அவரது சிஷ்யைகளும் வழி தவறி வேசியர் வீதி யொன்றுக்குள் நுழைந்து விட்டனர். 'இன்ன இடம்' என்று புரிந்தவுடன் ஸ்வாமிஜியின் சிஷ்யைகள் அவரை விரைவுபடுத்தினர். ஸ்வாமிஜியோ அவ்விடத்தை விட்டு நகர மறுத்துவிட்டார். சிஷ்யைகள் பரக்கப் பரக்க அங்கிருந்து அகன்றனர். தூரத்திலிருந்து அவர்கள் கண்ட காட்சி அவர்களைக் கண்ணீர் மல்கச் செய்தது. ஸ்வாமிஜியைச் சுற்றி அந்த விலைமாதர்கள் மண்டியிட்டு வணங்கி, அவரது அங்கியின் நுனியைப் பக்தியுடன் முத்தமிட்டுக் கொண்டிருந்தனர்.

தாஸியிலும் தேவியைக் கண்ட மகாத்மாவின் சிஷ்யரல்லவா அவர் ?

ஹிமாலயத்தில் அத்வைத ஆசிரமம் அமைத்து அங்கு வானப் பிரஸ்தர்களாக வாழ்ந்த ஸேவியர் தம்பதிக்கு ஸ்வாமிஜியின் மேல்நாட்டுச் சீடர்களில் தனி இடம் உண்டு. தமது தாளுக்கே தலைபட்ட ஸேவியர் இவ்வுலகை விட்டுப் புறப்பட்டுவிட்டார் என்பது எகிப்திலிருந்த போது ஸ்வாமிஜியின் உள்ளுணர்ச்சிக்குத் தெரிந்து விட்டது. ஸ்ரீமதி ஸேவியரைக் கண்டு தேற்றுவதற்காகத் தாம் இந்தியாவுக்குப் புறப்பட வேண்டியதுதான் என்று தவித்தார்.


1900ம் ஆண்டு டிஸம்பர் 9-ந் தேதி இரவு. பேலூர் மடத்தில் சாதுக்களும், பிரம்மசாரிகளும் உணவு உண்டுகொண்டிருந்தார்கள். தோட்டக்காரன் உள்ளே வந்து ''யாரோ சீமைக்கார ஐயா வந்திருக்காரு!'' என்றான்.

இந்த நேரத்தில் தங்களைத் தேடி வரக்கூடிய 'சீமைக்கார ஐயா' யாராயிருக்குமோ என்று அவர்கள் யோசித்துக்கொண்டிருக்கும்போதே ஸ்வாமிஜி அவர்களிடையே பிரஸன்னமானூர்.

அப்புறம் என்ன? ஒரே ஆரவாரம்தான்.

தாலம் நிறையப் பரிமாறியிருந்த கிச்சடியை ரசித்து உண்டபடி ஐரோப்பிய அநுபவங்களை குருபாயிக்களுக்கும் பிரம்மசாரிகளுக்கும் பரிமாறினூர் ஸ்வாமிஜி.

ஸேவியரின் மறைவு பற்றி எகிப்திலிருந்த போது அவர் உள்ளுணர்ச்சியால் அறிந்தது உண்மையே. சமீபத்தில்தான் அவர் பரமபதம் சென்று விட்டிருந்தார்.



'' ஆபீசில் அவர் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கிறாராம். . . !

ஸ்ரீமதி ஸேவியரைக் காண மாயாவதிக்கு விரைந்தார் ஸ்வாமிஜி. ஸ்ரீமதி ஸேவியரை அவர் துக்கம் விசாரிப்பதா, அவரை ஸ்ரீமதி ஸேவியர் துக்கம் விசாரிப்பதா என்பது போன்ற நிலைமை நிலவிற்று.

மாயாவதியிலிருந்த அத்வைத ஆசிரமத்தில் உருவ வழிபாடு இருக்கக் கூடாதென ஸ்வாமிஜி விரும்பினூர் அல்லவா? ஆனால் இப்போது அங்கேயும் சிலர் பூஜாகிருகம் அமைத்து ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருஉருவத்துக்கு சாஸ்திரோக்தமாகப் பூஜை செய்து வந்தனர். ஸ்வாமிஜி பேலூருக்குத் திரும்பியபின் ஒரு நாள், ''ஒரு கேந்திரத்திலாவது புறச் சடங்கு இல்லாதிருக்க வேண்டும் என்று நினைத்தேன். அங்கே சென்று பார்த்தால் இந்தக் கிழவர் அங்கும் தம்மை நன்றாக நிலைநாட்டிக் கொண்டிருக்கிறூர்!'' என்றூர்.

இச்சமயத்தில், ராமகிருஷ்ண தர்மத்துக்கு ஒரு கல்பக விருட்சமாக இருந்த கேத்ரி மன்னர் இவ்வுலகிலிருந்து மறைந்து விட்டார். ஆக்ராவில் அக்பர் பாதுஷாவின் கல்லறை ஸ்தூபியைத் தமது செலவில் பழுது பார்த்து வந்த கேத்ரி மன்னர் ஒரு நாள் வேலைகளைப் பார்வையிடும் போது கால்சறுக்கி உச்சியிலிருந்து பல நூறு அடிகள் கீழே விழுந்து பயங்கரமான முறையில் உயிரிழந்தார்.

பழம் பொருள்களில் கேத்ரி மன்னருக்கு இருந்த உற்சாகம் எப்படி அவரது உயிருக்கே உலை வைத்து விட்டது என்பதை மேரி ஹேலுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டார் ஸ்வாமிஜி. ''நீயும் இப்படித்தான் பாரதத்தின் ஒரு பழம் பொருளிடம் ரொம்பவும் உற்சாகமாயிருக்கிறுய். ஜாக்கிரதையாய் இருந்து கொள்'' என்று எழுதினூர்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே !

பேலூர் மடத்துக்கு உயிர் ஊட்டலானூர் ஸ்வாமிஜி. தமது உயிர் போகும் வரை அம்மடத்துக்கு அவர் உயிரூட்டித்தான் வந்தார். அந்த உயிர் எவ்வளவு விரைவில் நீங்கப் போகி

றது என்பதைக் கடைசி மட்டும் தெரிந்து கொள்ளாதவர்களாக மடத்துவாசிகள் அவருடன் கோலாகலமாக வாழ்ந்து வந்தனர். அவரும் முடிவை அறியாதவர் போலவே அவர்களோடு ஆடிப் பாடி அவர்களை ஆபத்துத் தெரியாதவர்களாக வாழ வைத்தார்.

மகான் என்பதைவிட, மனிதனாகவே வாழ்ந்ததுதான் பரமஹம்ஸர் விவேகாநந்தர் இவர்களின் பெருமை. இப்போது மனித மனத்தோடு மகனாக வாழ விரும்பினார் மகான். ஆதிசங்கரர் தமது அன்னையின் இறுதிக் காலத்தில் அவளுக்குப் பணிவிடை புரிந்ததை நினைத்துப் பார்த்தார். தமது விஷயத்திலோ இறுதிக் காலம் அன்னையை நெருங்க வில்லை, தம்மையே நெருங்குகிறது என்று கண்டார். எனவே விரைவில் அவளுக்குத் தம்மால் இயன்ற சௌக்கியத்தை அளிக்க விழைந்தார்.

பாரத தர்மத்தில் பிறந்து வளர்ந்து பழுத்துப் போன ஒரு மூதாட்டிக்கு எதில் சௌக்கியமிருக்கும்? க்ஷேத்திராடனம் செய்வதில் தானே? அன்னையைக் கிழக்கு வங்காளத்திலும், அஸ்ஸாமிலும்உள்ள புண்ணியஸ்தலங்களுக்கு அழைத்துச் சென்றார் ஸ்வாமிஜி. புவனேசுவரி தன் அருமை சந்நியாசிப் பிள்ளையுடன் கழித்த அந்த ஆனந்த தினங்களில் வரப் போகும் மகத்தான பிரிவுத் துயரை எண்ணியேனும் பார்த்திருப்பாளா?

மருந்துகளால் ஸ்வாமிஜி தேறுகிற வழியாக இல்லை. ஆஸ்துமாவோடு நீரிழிவும் சேர்ந்து கொண்டதால் அவரது திருமேனி தாங்கொணாத துன்பம் அநுபவித்தது. ஆஸ்துமா மிகவும் பயங்கரமாகி விட்ட தருணத்தில் ஒரு நாள் ஸ்வாமிஜி, தம்மையறியாமலே முணு முணுத்துக் கொண்டார்: ''இதனால் என்ன? அவர்களுக்குப் பதினைந்து நூற்றாண்டுகளுக்குப் போதுமான அளவுக்குக் கொடுத்து விட்டேன்!''

பதினைந்து நூற்றாண்டுகள் தாமா? என்றுமே அழியாத நிரந்தரச் செல்வத்தை அல்லவா வழங்கி விட்டார்! ஸ்வாமிஜிக்கே தம் பணியில் திருப்தி ஏற்பட்டு விட்டது. அப்புறம்...? அப்புறமுமா உடலைக் கட்டிக் கொண்டு அவஸ்தைப்பட வேண்டும்?

''ஸ்வாமி! தாங்கள் இப்படி உடலை அலட்டிக் கொள்ளக் கூடாது. பூரண ஓய்வுடன், மருந்துகளைச் சாப்பிட்டுக் கொண்டு இங்கேயேதான் இருக்க வேண்டும்'' என்று அழ மாட்டாக் குறையாகப் பிரார்த்தித்துக் கொண்டனர் பேலூர் மடவாசிகள்.

ஸ்வாமிஜியால் அந்த அன்புக் கட்டளையை மீற முடியவில்லை. 'எல்லாம் அம்பாள் செயல். இனி நான் திட்டமேதும் வகுக்கப் போவதில்லை' என்று கருதித் தம் திட்டங்களையெல்லாம் பரிபூரணமாக விட்டு விட்டார். ஓயாத, ஒழியாத கர்மமெல்லாம் முடிந்தது! ஓய்வு வாழ்வு தொடங்கிற்று!

அப்படி அவர் சிறிது காலம்கூட வாழாமல் உழைத்துக் களைத்தே உயிர் துறந்திருப்பாரானால் இந்திய மக்கள் தங்களை மன்னித்துக் கொள்ளவே முடியாது.

ஸ்வாமிஜி மிகவும் சுயேச்சையாக வாழ்ந்த காலம் இது. ஒரு போதில் ஸ்வாமிஜி நீண்ட காஷாய அங்கியணிந்து சந்நியாசியாகத் திகழ்வார். இன்னொரு போதில் கௌபீனதாரியாக மடத்துத் தோட்டங்களில் மெல்ல மெல்லச் சுற்றி வருவார். அப்படியே சிந்தனை வசமாகி அருகிலுள்ள கிராமங்களுக்கும் சென்று திரும்புவார். கங்கா நதிக் கரையில் ஏதேனும் ஒரு மரத்தடியில் அமர்ந்து தியானம் புரிவார். அப்படி அவர் விரும்பித் தியானம் செய்த மரங்களில் ஒன்று பேலூர்மடத்திலுள்ள ஒரு வில்வ மரம். சிவாம்சமாகிய ஸ்வாமிஜி அந்த விருட்சத்தினடியே தவம் இருக்கும் போது வில்வ பத்திரங்கள் தாமாகவே கழன்று அவரை அர்ச்சிக்கும். அவை உடம்பில் குறுகுறுக்கும் போது ஸ்வாமிஜி, இந்த உடல் என்ற இலை ஆத்ம விருட்சத்திலிருந்து என்றைக்குக் கழலுமோ என்று ஆசை ஆசையாக எண்ணிப் பார்த்துக் கொள்வார்.

மடத்தின் இரண்டாவது அடுக்கில் தென் கிழக்கு மூலையிலுள்ள தமது அபிமான அறையிலேயே அவர் புத்தகங்களைப் படித்துக்கொண்டு பொழுதைப் போக்கியதும் உண்டு.

எல்லாவற்றையும்விட ஸ்வாமிஜிக்குமிகவும் இதமளித்தது இசைதான். கூண்டிலிருந்து வெளியேற விரும்பும் பட்சியின் தீனக்குரலில், தீங்குரலில், தேன் குரலில் கானம் செய்வார். விழாக் காலங்களில் சங்கீத வாத்தியங்கள் பலவற்றை அவர் வாசித்துப் பாட, மற்றவர்களும் கலந்து கொள்வார்கள். கானத்திறல் ஞானத்தைத் தொடுகிற அற்புதமாகவே அந்தக் காலங்கள் விளங்கும்.

ஸ்வாமிஜி அவ்வப்போது அற்பமான காரியங்களில் ஈடுபட்டுக் கொம்மாளமடித்தார். உணவு வகைகளுக்குப் 'பணிக்கு'ச் சொல்லிக்கொண்டு, அவர் ருசிக்க ருசிக்கச் சமைக்கக் காணும்போது, வேதாந்த வேந்தர் என்பதைவிட, சிறந்த சமையல்காரராகவே அவரைச் சொல்லத் தோன்றும். எப்பேர்ப்பட்ட வியாதியுடன் போராடுபவர் எப்படியெல்லாம் சிறிய விஷயங்களில் சந்தோஷப்படுகிறார் என்பதை எண்ணி அழுகையே சிரிப்பாகவும், சிரிப்பே அழுகையாகவும் உணர்ச்சி வசப்படுவர் அவரது பக்தர்கள். இப்படிச் சிறிய விஷயங்களில் சிரத்தை காட்டுபவர் திடீரென யோகத்தில் மூழ்கி விடுவார். குருபாயிக்கள் அச்சமயங்களில் குருமஹராஜின் வார்த்தைகளை நினைந்து அஞ்சுவார்கள். ''நரேன் தன்னை இன்னாரென்று அறிந்து விட்டால் அதன்பின் அவனால் இந்த உடம்பில் அடைபட்டுக் கிடக்க முடியாது!'' என்றல்லவா ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியிருந்தார். யோகத்து இருக்கையில் ஸ்வாமிஜி தம்மைத் தெரிந்து கொண்டு விடுவாரோ? தாம் சிவத்தின் சாயல் என்று ஸ்வாமிஜி அறிந்து விடுவாரானால்? அப்புறம், உபநிஷதம் கூறுவது போல் மாயை விலகி, நிழலும் ஒளியும் ஒன்றாகி விட வேண்டியது தானே? அப்படியும் நேர்ந்து விடுமோ? மடத்தினர் கதிகலங்குவார்கள்.

ஸ்வாமிஜி இதனையே எண்ணி ஹாஸ்யம் செய்தார். ''நல்ல வேளையாக இந்த உலக வாழ்க்கை சாசுவதமாக இல்லையே. அந்த மட்டும் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்று கூறிச் சிரித்தார். (தொடரும்)


அந்தத் தெருவுக்குக் கருப்பண்ணன் தெரு என்று பெயர். அதை மாற்றி 'ராம ராஜ்யத் தெரு' என்று வைக்க வேண்டுமென்று அந்தத் தெரு வாசிகள் ஆசைப்பட்டனர். அதற்குக் காரணம் அந்தத் தெரு அமைதிக்கும், பண்புக்கும், ஆசாரத்துக்கும் உறைவிடமாக மிளிர்ந்தது தான்.

கடந்த பதினேழு வருட காலமாக மற்றத் தெருக்களில் 'சதக் சதக்' என்று கத்திக் குத்துகள், தீ வைப்பு, திருட்டுப் புரட்டுகள், பெண்டாட்டி கைச் சமையலைப் புறக்கணித்து ஹோட்டலில் சாப்பிடுதல் ஆகிய அராஜகச் செயல்கள் நடந்திருக்க தம் கருப்பண்ணன் தெருவில் மட்டும் அமைதி நாற்காலி போட்டுக் கொண்டு கொலு விருந்தது! மொத்தம் இருபத்தைந்து வீடுகளே கொண்ட சின்னத் தெருதான் அது. ஆனல் உலக மக்களுக்கே ஓர் உதாரணமாக அதாவது 'மாடல்' வாழ்க்கை வாழ்ந்துகாட்டுபவர்கள் அவர்கள். இவ்வளவு பொருத்தம் போதாதா 'ராம ராஜ்யத் தெரு' என்று பெயர் வைக்க?

கௌன்சிலர் பொன்னையா அடுத்த நகர சபைத் தேர்தலிலும் அந்தத் தெருவாசிகளின் பெருவாரியான வோட்டுக்களை எதிர் பார்த்ததால் எப்படியும் பெயரை மாற்றி விடுவதாக அவர்களுக்கு வாக்களித்து விட்டார். அதன்படி சக கௌன்சிலர்களை அணுகி ஆதரவும் தேடலானுர். ஒரு நண்பரிடம் அவர் இந்தப் பெயர் மாற்றத் தீர்மானத்தைப் பற்றிச் சற்று உரக்கப் பேசவே, அது தற்சமயம் ஆவி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பவரும் ஏற்கனவே அந்தத் தெருவுக்குத் தம் பெயரை வழங்கிய வள்ளலுமான கருப்பண்ணனின் செவிகளுக்கு எட்டி விட்டது. அவ்வளவுதான்; உடனே அவர் சீறி எழுந்து, ''ஆஹா — இந்தத் தெரு ஜனங்கள் அமைதியாகவும், யோக்கியமாகவும் இருப்பதால்தானே பெயர் மாற்றத்துக்கு ஆதரவு கிடைக்கிறது. விட்டேனு பார், அவர்களை!' என்று ஒரு குட்டிச்சாத்தானை ஏவி விட்டார்.

ஆமாம்! அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லா விட்டால் பதினைந்து வருட காலமாக அந்தத் தெருவை விட்டு அசையாமல் வாசம் செய்த பார்த்தசாரதிக்குத் திடீரென்று மாற்றல் உத்தரவு வருவானேன்? அவர் கிரகப் பெயர்ச்சியான இடத்தில்— பல்லாயிரக்கணக்கான கரப்புகளும், மூட்டைப் பூச்சிகளும் இருக்கின்றன என்று தெரிந்தும்—அவசரம் அவசரமாக ஆறுமுகம் என்பவர் குடி வருவானேன்?

இந்த இடத்தில் திருவாளர் ஆறுமுகத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் வர்ணனையாகக் கூறுவது அவசியம்.



ஆறுமுகத்தை ஒரு தடவை சந்தித்து விட்டால் போதும். ஆயுசுக்கும் அவரை நம் நினைவிலிருந்து நெட்டித் தள்ள முடியாது. அப்படிப்பட்ட முக பாவம் அவருடையது. நெடிதுயர்ந்த உருவம். கனமான சரீரம் — அதைவிடக் கனமான சாரீரம் — உறிமட்டை நாரில் டோபா செய்து வைத்த மாதிரி தலை முடி; கனத்துத் தொங்கும் இமைகளிடையே சிரமத்துடன் எட்டிப் பார்க்கும் அரை விழிகள்; பல்லைக் காட்டாமலேயே சிரிக்கும் யோக சாதகம் எல்லாம் சேர்ந்து ஒருவித பயபக்தியுடன் பார்க்கும் வஸ்துவாக அவரை மாற்றியிருந்தன. அவருடைய அதட்டலுக்கும், மிரட்டலுக்கும் இயற்கை செய்து கொடுத்த ஆயுதங்களோ இவை என்றுகூட நினைக்கத் தோன்றும். பயில்வான் பாணி மீசையும், இரண்டு கர்லாக் கட்டைகளும் அவரிடமிருந்த இதர ஆஸ்திகள். தினசரி காலையில் அவர் தேகப்பயிற்சி செய்வது ஒரு தனி அழகு. உடற்பயிற்சியில் தேர்ந்தவர்கள் யாராவது பார்த்தால், 'அட கத்துக்குட்டி.' என்பார்கள். அது வேறு விஷயம்! ஒரு நாளில் எப்பொழுதாவது இரண்டாவது தடவை அவர் கர்லாக்கட்டை சுழற்றுகிறர் என்றுல் வந்தது ஆபத்து. அடுத்த இரண்டு நிமிஷங்களில் அவர் யாரிடமோ சண்டைக்குப் போக (வாய்ச் சண்டைக்குத் தான்!) தயாராகிறர் என்று அர்த்தம்!

ஆறுமுகம் குடி வந்த வேளை அந்தத் தெருவாசிகளுக்கு சுப சகுனமாகப் படவில்லை. ஏதோ பூகம்பத்தில் சிக்கிக் கொண்டவர்கள் மாதிரி ஒருவித மிரட்சியுடன் அவரைக் கண்டு ஒதுங்கினுர்கள். அவர்கள் பயந்ததற்குத் தருந்த மாதிரியே ஆறுமுகம் வந்த இரண்டாவது நாளே தம் சொரூபத்தை ரிலீஸ் பண்ணலானுர். அவருக்குக் கிடைத்த முதல் ஆகாரம் ஸ்ரீமான் கனகசபை — பக்கத்து வீட்டுக்காரர்.

கனகசபையைச் சாதாரணமாக அப்பாவி என்று சொன்னல் போதாது. இரண்டு 'வி'கள் போட்டு அழுத்தமாகச் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட சாதுத்தனமான மனிதரைப் போட்டுத் தாயக்கட்டையாக உருட்டு உருட்டு என்று உருட்டி விட்டார் ஆறுமுகம். இத்தனைக்கும் கனகசபை சிவனே என்றோ விஷ்ணுவே என்றோ தம் வீட்டில் அமர்ந்திருந்தவர். கறிகாய்க்காரன் வந்திருக்கிறுன். அவனிடம் பேப்பர் விலைக்கு வெண்டைக்காய் கேட்டிருக்கிறர். அவன் பேப்பர் விலையாவது பிட்நோட்டீஸ் விலையாவது என்று தர மறுத்திருக்கிறுன். அவனுடைய பத்தாயிரம் கிலோவாட் குரலைக் கேட்டே சப்தநாடியும் ஒடுங்கப் பின்வாங்கி

விட்டார் கனகசபை. அதுதான் உண்மை. ஆனால் கறிகாய்க்காரனைக் கனகசபை ஏதோ மிரட்டியது மாதிரியும், அவனைக் காப்பாற்றி நீதியை நிலைநாட்ட பகவான் தன்னை விசேஷ அம்பாஸிடராக நியமித்து அனுப்பியது மாதிரியும் அங்கே வந்து குதித்தார் ஆறுமுகம். 'பேப்பர்க்காரனுக்கு என்னய்யா தெரியும்?' என்று ஆரம்பித்து விலைவாசிகளின் உயர்வை ஆதரித்து அரை மணி நேரம் பொழியோ பொழி என்று பொழிந்து தள்ளினார். பிறகு வெண்டைக்காயில் பொதிந்து கிடக்கும் வைடமின்கள், சத்துப்பொருள்கள் ஆகியவற்றுக்கு அவராகவே ஒரு பட்டியல் தயாரித்துக் காட்டி உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் வெண்டைக்காய் மிகவும் அவசியமானது என்றும் அதை விற்பனை செய்வதன் மூலம் கறிகாய்க்காரன் மனித குலத்துக்கே மாபெரும் தொண்டு செய்வதாகவும் இதுவரை அவனுக்கு ஒரு பொன்னாடை கூடப் போர்த்திக் கௌரவிக்காதது மனிதர்களிடையே நன்றியுணர்ச்சி என்பது மிக மட்டமாகப் போய் விட்டது என்பதைக் காட்டுவதாகும் என்றும் விளாசினார். கறிகாய்க்காரன் ஜில்லாகிப் போய் எல்லா வெண்டைக் காய்களையும் பாதி விலைக்கும் குறைவாக அவருடைய துண்டில் கொட்டி விட்டு நடந்தான். கனகசபைக்கு ஒரே ஆத்திரம். ஆனாலும் வாயைத் திறக்க முடியுமா? பேசாமல் குடையை எடுத்துக் கொண்டு மார்க்கெட்டுக்குக் கிளம்பி விட்டார். குடையா அது? இல்லை. அந்த நேரத்துக்குக் கனகசபை தன் வெறுப்பையும் எதிர்ப்பையும் காட்டுவதற்காகப் பிடித்த கறுப்புக் கொடி அது!



இப்படியாக அடுத்தவரின் வாழ்க்கையில் தலையிட ஆரம்பித்த ஆறுமுகம் தம் வாயையும், வாயைவிட நீளமான மீசையையும் வைத்துக் கொண்டு நாளொரு சண்டையாக விலைக்கோ அல்லது இனமாகவோ வாங்கத் தொடங்கினார்.

அதன் பயனாக ஒரு திவ்வியமான நாளில் 'அடாவடி ஆறுமுகம்' என்ற சிறப்புப் பெயர் அவருக்கு அளிக்கப்பட்டது. அ. ஆ என்பது அந்தப் பட்டப் பெயரின் சுருக்கமும் தெரு ஜனங்களிடையே நிலவும் சங்கேத ஒலியுமாகும்!

அப்பிறகு, நகரசபைக் கூட்டம் போடவும், அதெல் பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டுவரவும் இன்னும் ஒரு வாரமே இருந்தது. அதற்கிடையில் ஏதேனும் சச்சரவுகள் ஏற்பட்டுத் தெருப் பெயருக்குக் களங்கம் உண்டாகி விடக் கூடாது என்றும், அதற்காக அடாவடி ஆறுமுகத்தைக் காண்போர் குறைந்தது மூன்று மீட்டர் தூரமாவது விலகியே செல்லும்படியும் தெரு ஜனங்கள் ஒருவருக்கொருவர் எச்சரிக்கை செய்து கொண்டனர். ஆனாலும் என்ன பயன்? ஒரு விரும்பத் தகாத சம்பவம் நடந்தே விட்டது.

அன்று காலை எட்டு மணியிருக்கும். அடாவடி ஆறுமுகத்தின் வீட்டுக்குள்ளிருந்து திடீரென்று ஒரு கர்ண கடூரமான சத்தம் எழுந்தது. என்ன இது? போயிங் ஜெட் விமானம் வழி தவறி ஆறுமுகத்தின் வீட்டுக்குள் புகுந்து விட்டதோ என்று தெரு ஜனங்கள் ஒரு கணம் திகைத்தனர். பின்னர் அந்தச் சத்தமானது அ. ஆ.வின் அழுகை ஒலி என்று தெரிந்ததும் பரபரப்புடன் அவர் வீட்டுக்குள் நுழைந்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி: ஆறுமுகத்தின் மனைவியும் மூன்று குழந்தைகளும் அலங்கோலமாகப் படுத்துக் கிடந்தனர். கண்கள் செருகி முகம் பரம விகாரமாக மாறியிருந்தது. ஆறுமுகம் அழுது கொண்டே சொன்னார் :

''காலையில் கனகசபையின் வீட்டிலிருந்து ஒரு கரண்டி காப்பிப்பொடி வாங்கி வந்து காப்பி வைத்துக் குடித்தார்கள். அந்தச் சண்டாளப் பாவி காப்பிப் பொடியில் என்ன கலந்தானோ காப்பிகுடித்த ஐந்துநிமிஷங்களுக்கெல்லாம் இப்படிச் சாய்ந்து விட்டார்கள். ''ஐயோ...சீக்கிரம் ஆம்புலன்ஸை வரவழையுங்கள், போலீஸைக் கூப்பிடுங்கள்......''

அவர் சொன்ன இரண்டு இடங்களுக்கும் தகவல் பறந்தது. அடுத்த கால்மணி நேரத்தில் அ. ஆ.வின் குடும்பத்தினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள்; கனகசபையும் அவர் மனைவியும் 'லாக் – அப்'பில் அடைக்கப்பட்டார்கள்.

கருப்பண்ணன் தெருவே திமிலோகப்பட்டது. தெரு ஜனங்கள் அப்படியே இடிந்து போய் விட்டார்கள். கனகசபை இப்படி ஒரு கொடூரமான செயலைச் செய்திருப்பார் என்று யாருமே நம்பத் தயாராயில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் ஆஸ்பத்திரிக்குப் போன ஓர் ஆள் ஓடி வந்து ஆறுமுகத்தின் மனைவியும், குழந்தைகளும் எமனுக்கு 'டோஸ்' கொடுத்து அனுப்பி விட்டதாகச் சொன்னான். உடனே எல்லாருக்கும் சற்றுத் தைரியம் வந்தது. கனகசபைக்காக வக்கீலை அமர்த்தச் சிலர் அவசரம் அவசரமாகப் போனார்கள்.

கனகசபைக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது. அவர் மீதும் அவருடைய மனைவி மீதும் சதி செய்து கொலை செய்ய முயற்சி செய்ததாகப் போலீஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர். சீக்கிரத்திலேயே வழக்கு விசாரணைக்கு வந்து விட்டது. கருப்பண்ணன் தெருவாசிகள் அத்தனை பேரும் குழந்தைகுட்டிகள் கட்டுச் சோறு சகிதம் விசாரணையைக் காணக் கோர்ட்டில் குழுமி விட்டார்கள்.

சர்க்கார்தரப்பு வக்கில் குற்றப் பத்திரிகையைப் படித்து விட்டு அமர்ந்ததும் பிரபல வக்கில் குண்டப்பா சிற்றலைக்குட்டி மாதிரி அசைந்து கொண்டு எழுந்தார். கனகசபையின் சார்பில் அமர்த்தப்பட்டிருப்பவர் அவர். நீதிபதியிடம் அனுமதிவாங்கிக்கொண்டு வாதி

ஆறுமுகத்தைச் சாட்சிக் கூண்டில் ஏற்றிக் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினர்.

''உமது பெயர்?''

''ஆறுமுகம்.''

''எங்கே குடியிருக்கிறீர்?''

''கருப்பண்ணன் தெருவில் ஏழாம் நம்பர் வீடு.''

''வீட்டுக்கு நீங்கள் எவ்வளவு வாடகை கொடுக்கிறீர் ?''

''நாற்பது ரூபாய்.''

''ஓ.... மைகாட்! இந்த ஊரில் நாற்பது ரூபாய்க்குக் கூட வீடு கிடைக்கிறதா? சரிதான் ஒரு போர்ஷனுக இருக்கும்!''

''இல்லீங்க. நாலு அறைகள், நடுவாசல் கொண்ட பெரிய வீடு.''

''உம், தண்ணீர் வசதியெல்லாம் எப்படி?''

''கவலேயே இல்லீங்க. காக்கூடயே வீட்டுக்குள்ளே வந்துவிட்ட மாதிரி குழாயிலேயிருந்து கொட்டும்.''

''தேவலேயே. அது மாதிரிதான் ஒரு வீடு வேண்டும். என் மைத்துனன் ஒருவனுக்குப் பார்க்கிறேன். உன் வாடகைக்கு விடுவீரா?''

கோர்ட்டில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

''யுவர் ஆனர்! நண்பர் வழக்கு விசாரணை செய்யாமல் குடிக்கூலிக்கு வீடு பார்க்கிறூர்'' என்று சர்க்கார் வக்கில் எழுந்து ஆட்சேபித்தார்.



''ஆர்டர்! ஆர்டர்! வழக்குக்குச் சம்பந்த மில்லாத கேள்விகளைக்கேட்க வேண்டாம்'' என்று நீதிபதி எச்சரிக்கவே் குண்டப்பா தம் நினைவு வந்தவராய் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். அவர் எப்பொழுதுமே இப்படித்தான். வரன் பார்ப்பது, காரை விற்பது, நிலம் வாங்குவது, சமையலுக்கு ஆள் பிடிப்பது என்று சகல காரியங்களையும் கேஸ் நடத்திக் கொண்டிருக்கும்போதே முடித்துக் கொள்வது அவர் வழக்கம். இந்தத் தடவை பப்ளிக் பிராசிக்கூட்டர் குறுக்கிட்டு விட்டார். அதனுல் என்ன? ஆறுமுகம் அவரிடமிருந்து தப்பிவிட முடியுமா?

''எஸ் யுவர் ஆனர்!'' என்று பவ்வியமாகத் தலையை ஆட்டிவிட்டு வழக்குக்கு வந்தார் குண்டப்பா. ''ஐயா ஆறுமுகம்! சம்பவ தினத்தன்று உமது மனைவியும், குழந்தைகளும் கனகசபையின் வீட்டுக்குப் போய்க் காப்பி குடித்து விட்டு வந்தார்களா?''

''இல்லே. காப்பிப் பொடிதான் கடனுக வாங்கி வந்தார்கள்.''

''அப்படியானுல் காப்பி கலந்தது உங்கள் மனைவிதான் இல்லையா?''

''ஆமாம்.''

''உமக்கும், உமது மனைவிக்கும் நாலு நாளைக்கு முன்பு ரசாபாசமாகச் சண்டை ஏற்பட்டது அல்லவா?''

''ஆமாம். ஆனுல் நாலு நாளைக்கு முன்பு அல்ல. ஒரு வாரத்துக்கு முன்பு.''

'' சரி. அந்தக் கோபத்தை வைத்துக்கொண்டு உமது மனைவியே காப்பிப் பொடியில் விஷம் கலந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாள் என்கிறேன். என்ன சொல்கிறீர் ?''

ஆறுமுகம் விழித்தார். 'ஒழிஞ்சு போ, சனியனே' என்று அவர் ஓங்கி இரைந்தது தெரு முழுதுக்கும் கேட்டிருக்குமே. அத்தனை பேரும் சாட்சி சொல்ல வந்து விட்டால்?

''சரி போகட்டும். காப்பி குடிப்பதற்கு முன் உமது மனைவியும், குழந்தைகளும் வேறு என்ன சாப்பிட்டார்கள்?''

''இட்டிலி சாம்பார் சாப்பிட்டார்கள்.''

''வெங்காய சாம்பாரா தக்காளி சாம்பாரா?'' என்று அங்கேயே வாசனை பிடிக்க முற்பட்ட வக்கீல் நீதிபதியின் கோபத்துக்குப் பயந்து அடுத்த கேள்வியைக் கேட்டார்: 'வீட்டில் செய்ததா? ஹோட்டல் பலகாரமா?'

''உம்.... வந்து..... பூபேந்திரா ஹோட்டலில் வாங்கியது.''

அதைக் கேட்டதும் குண்டப்பா ஒரு துள்ளுத் துள்ளினர். வழக்குக் கட்டுகளுடன் வைத்திருந்த ஒரு பத்திரிகைத் துணுக்கை நீதிபதியிடம் கொடுத்தார்.

''கனம் கோர்ட்டார் அவர்களே! சம்பவ தினத்தன்று மேற்படி பூபேந்திரா ஹோட்டலில் சாப்பிட்ட முப்பது பேர் வாதியின் குடும்பத்தினரைப் போலவே மயங்கி விழுந்திருக்கிறூர்கள். சாம்பாரில் பல்லி, பாம்பு ஏதேதோ மிதந்தனவாம். ஆகவே விஷம் சாம்பாரில்தான் இருந்திருக்கிறது; காப்பிப் பொடியில் விஷம் இருந்ததாக நிரூபிக்க எந்த ஆதாரமுமில்லை. எனவே நிரபராதியான எனது கட்சிக்காரருக்கு நியாயம் வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.''

குண்டப்பா வெற்றிப் புன்னகை ஒன்றை வீசிவிட்டு அமர்ந்தார். கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டது.

தெரு ஜனங்கள் கனகசபையையும், அவர் மனைவியையும் மேளதாளம், வாணவேடிக்கைகளுடன் ஊர்வலமாக வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். நிரபராதிக்கு வெற்றி! ஆறுமுக ராவணனுக்கு அவமானம்! அடாவடித்தனத்தை எதிர்ப்போம்!' என்றெல்லாம் ஊர்வலத்தில் கோஷங்கள் எழுந்தன. 'ஆறுமுகத்தைக் கண்டு யாரும் அஞ்சத் தேவையில்லை. அவர் மேலே இடித்துக் கொண்டே இனி நடக்கலாம்' என்றூர் ஒரு பிரசங்கி. ஆமாம்! இப்பொழுது அவர்கள் அன்பு, சாந்தம், நீதியோடு வீரமும் ஊட்டப் பெற்றவர்கள்!

காரியங்கள் வேகமாக நடந்தன. நகரசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு ஒரு சுபயோக நாளில் 'ராமராஜ்யத் தெரு' என்ற பெயர்ப் பலகையை ஸ்ரீமான் ஆறுமுகனூர் திறந்து வைத்தார். நிகைக்காதீர்கள். (வேறு வழியில்லாததால்) இப்பொழுது ஆறுமுகனூர் ராமராஜ்யத் தெருவின் விசுவாசமுள்ள ஒரு பிரஜை !

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

ஜகந்நாதன் கோட்டைக் கழற்றியதைக் கண்டதும் வசந்தி தன் தலைக்குத் தலையணையாகவோ கூந்தலுக்குத் தன் உடம்பில் போர்த்திக் கொள்ளப் போர்வையாகவோ கொடுக்கப் போகிறார் என்று நினைத்து, "உங்கள் கோட் ஒன்றும் எனக்கு வேண்டாம், ஸார்!" என்றாள்.

"இது உன் தலைக்கல்ல! நீ உன் கையையே தலையணையாக்கிக்கொள். என் கோட்டை விட உன் கைதான் மிருதுவாக இருக்கும்! ஆனால் நான் அணிவித்த கண்ணாடி வளையல்கள் நொறுங்காமல் பார்த்துக் கொள்!" என்று ஜகந்நாதன் தமாஷாகச் சொல்லி விட்டுத் தம் கைக் கடிகாரத்தை ஒரு தடவை பார்த்துக் கொண்டு, "ஓ! ஓ! நான் தூங்க வேண்டிய டயம் ஆகி விட்டது!" என்றார்.

"நீங்கள் எங்கே...?" என்று வசந்தி கரகரக்கும் குரலில் கேட்டாள்.

"கவலைப்படாதே! முன் ஸீட்டில் முடங்கி அடங்கிக் கிடந்தால் எனக்குத் தூக்கம் வராது. மேலே மின்சார விசிறி இல்லாவிட்டால் திறந்தவெளிக் காற்றில் படுப்பதுதான் எனக்குப் பிடிக்கும்!" என்றார் ஜகந்நாதன்.

அப்படியென்றால் அவர் ரஸ்தாவில் படுத்துறங்கப் போகிறாரா, அல்லது தெரு ஓரத்தில் ஏதாவது சரளைக் கல் குவியலைத் தேடப் போகிறாரா என்பது வசந்திக்குப் புரியவில்லை.

"நான் கார் 'டாப்' மீது ஏறிப் படுத்துக்கொள்ளப் போகிறேன்! பூமிக்கு மேலேயிருந்து ஆகாசத்தில் உள்ள நிலாவைப் பார்த்துக் கொண்டிருந்தால் எத்தனை வருஷங்களை வீணாக்கியிருக்கிறோமென்று கணக்கிட்டுக் கொண்டிருக்கலாம்!" என்று ஜகந்நாதன் சொல்லிவிட்டு அமைதியாகவே தம் புத்தம் புது மோட்டார் காரின் 'மட்காடு' மீது காலை மிதித்து ஏறி, 'பானட்டின்'மீது மற்றொரு காலை வைத்து எம்பி, டாப் மீது தொத்தி ஏறி, தம் கோட்டையே தமக்குத் தலையணையாக வைத்துக் கொண்டு படுத்துவிட்டார்.

வசந்தி வேறு வழியின்றிக் காரின் கதவை மெல்லத் திறந்து பின் ஸீட்டில் ஏறி உட்கார்ந்தாள். பிறகு தன் கைவளையல்கள், தன் கூந்தலில் சூட்டியிருந்த மல்லிகைப் பூ முதலானவற்றை எடுத்துக் காருக்குள்ளேயே ஓரிடத்தில் பத்திரமாக வைத்தாள். பிறகு அவள் சீட்டில் சாய்ந்து அப்படியே மெல்லச் சரிந்து படுத்தாள்.

அப்போது காரின் மேலே ஜகந்நாதன் ஒரு சிரிப்புடன் புரண்டு படுக்கும் சத்தம் கேட்டது.

வசந்திக்கு வெட்கம் சூழ்ந்துகொண்டது. ஆனாலும் அவளால் ஜகந்நாதன் மீது கோபப்பட முடியவில்லை!

அந்த இரவில் அவரோடு தன்னந்தனியாக விசித்திரமான சூழ்நிலையில் இருக்கிறோமென்ற நினைவு அவள் இதயத்தில் ஓர் இன்பக் கிளுகிளுப்பையும் அதே சமயம் ஒரு கலவரத்தையும் உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. இது அவளுக்குப் புது அநுபவம்! வசந்தி ஏதோ யோசித்தாள். அன்றிரவு முழுவதும் தன் கண்ணிமைகளைத் தூக்கம் என்னதான் வந்து அழுத்தினாலும் தூங்கவே கூடாதென்று தீர்மானித்துக் கொண்டாள்.

பத்து நிமிஷம் ஆயிற்று! அரை மணியும் ஆயிற்று! ஒரு மணியும் ஆகிவிட்டது!

ஜகந்நாதனிடமிருந்து பேச்சு மூச்சே இல்லை!

இந்நேரம் இன்னொர் ஆடவனாக இருந்தால்...? 'ம், ஜகந்நாதன் எவ்வளவு நல்லவர்!' என்று வசந்தி எண்ணமிட்டாள்.

ஜகந்நாதனின் கொள்கைகளும், அவர் பேசுவதும், எழுதுவதும் மற்றவர்களுக்குக் குதர்க்கமாகப் படலாம்! ஆனால் வசந்திக்கோ அவருடைய விஷமப் பார்வைகள் கூட விகல்பமாகப் படவில்லை. அவர் எவ்வளவு வெளிப்படையாக எந்த விஷயத்தையும் எவ்வளவு மோசமாகச் சொன்னாலும் கல்மிஷமில்லாத குழந்தை சொல்வது போலவே வசந்திக்குத் தோன்றியது.





அவர் அனுபவப்பட்டவராகவும் பல பெண்களோடு பழகியவராகவும் இருக்கலாம். ஆனால் அவற்றையெல்லாம் தாண்டித் தாமரை இலைத் தண்ணீர் போல எதிலும் ஒட்டாதவராகவும் எதனாலும் கறைபடாத நல்முத்துப் போலவுமே வசந்தியின் கருத்தில் அவர் ஒளி வீசினார்! அவரிடமுள்ள ஏதோ ஒன்று காந்த சக்தி போல் சதா அவளை அவரிடம் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தது. ஆனால் அவருடைய புத்திசாலித்தனத்தாலோ, மேதையைப் போன்ற தோற்றத்தாலோ, வேறு எந்த நல்ல அம்சங்களைக் கண்டோ வசந்தி மயங்கி விடவில்லை! அவருடைய குணக் கோளாறுகளைக் கண்டே உள்ளம் லயித்து, அவருடைய கருத்துக்களையும் பலஹீனங்களையும் கூட அவள் புரிந்து கொள்ளவும், பகிர்ந்துகொள்ளவும் விரும்பினாள். அவருடைய குரல், அவருடைய ஸ்பரிசம், அவருடைய பார்வை அனைத்தையுமே அவள் காதலித்தாள். இனி அவருடைய கண்களாலும் அறிவாலுமே இந்த உலகத்தில் எதையும் பார்க்க வேண்டும்போலவும், அதில் ஒரு புது ரசனையும், ஒரு புத்துணர்ச்சியும் பெருகும் என்பது போலவும் அவளுக்குத் தோன்றியது. அவரைப் பற்றிய நினைப்பே தன் பெண்ணுள்ளத்தின் அந்தராத்மாவையெல்லாம் கவர்ந்திழுத்து அவர் மயமாகி விடுவது போன்ற உணர்ச்சி கொண்டதும் 'நான் அவரை எவ்வளவு காதலிக்கிறேன்' என்று வசந்தி தன் மனத்துக்குள்ளே சொல்லிக் கொண்டாள். ஆனால் அது போல் அவரும் தன்னைக் காதலிப்பாரா? அவர் உள்ளத்தில் தனக்கு இடமிருக்குமா...? அவரிடமே இதை உடனே கேட்டுவிட வேண்டுமென்று அவள் மனம் பரபரத்தது.



''ஸார்!......'' என்று வசந்தி மெல்லக் குரல் கொடுத்தாள்.

''என்ன வசந்தி! இன்னும் நீ தூங்கவில்லையா?'' என்று மேலேயிருந்து ஜகந்நாதனின் குரல் வந்தது.

"எனக்குத் தூக்கம் வரவில்லை ஸார்...."

"ஏன்?"

"எனக்கு இங்கே பயமாக இருக்கிறது...."

"என்ன பயம்? பேசாமல் தூங்கு!"

"தூக்கம்தான் வரவில்லையே..."

"ராம, ராம என்று ஜபித்துக்கொண்டிரு! பயமும் போய்விடும்! தூக்கமும் உன் கண்ணிமைகளைத் தழுவிக்கொள்ளும்!"

வசந்தி ஒரு புன்சிரிப்புடன் மௌனமானாள்.

இருபது நிமிஷங்கள் கழிந்தன.

ஸீட்டில் வசந்தி புரண்டு படுத்து "ஸார்...." என்று மறுபடியும் கூப்பிட்டாள்.

ஜகந்நாதனிடமிருந்து பதில் வரவில்லை! அவர் தூங்கிவிட்டார் போலும்!

அதன் பிறகு வசந்தி சிறிது நேரம் என்னென்னவெல்லாமோ நினைத்து விட்டுத் தன் கையிலேயே தன் கன்னத்தை வைத்தபடி தன்னை மறந்து அயர்ந்து தூங்கி விட்டாள்.

மறுபடியும் அவள் கண் விழித்த போது பொழுது விடிந்தும் விடியாமலும் இருந்தது. சோம்பல் முறித்துக்கொண்டு வசந்தி ஒரு புன்முறுவலுடன் ஸீட்டில் எழுந்து உட்கார்ந்தாள். அவளுடைய அந்தப் புன்முறுவலில் ஜகந்நாதனைப் பற்றிய நினைவுதான் இன்னும் உறைந்திருந்தது.

கார் கதவின் ஜன்னலுக்கு வெளியே விடியற்சாம இருளும், அருணோதயத்தின் புத்தொளியும் கலந்து மருவிப் புது மணக் காதல் ஜோடிகள் போல் வயல் வரப்புக்களில் விளையாடிக்கொண்டிருக்கும் காட்சி தென்பட்டது. காகங்கள் கரைய, பறவைகளெல்லாம் நானாவித சப்த ஜாலங்களுடன் கிளம்பிப் பறந்து கொண்டிருந்தன. இயற்கை நெடுகிலும் ஒரு புத்துணர்ச்சி பொங்கிப் படர்வது போலிருந்தது.

வசந்தி காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே இறங்கி நின்றாள்.

காலைப் பனி கொட்டியது!

இந்தப் பனியிலா பாவம் ஜகந்நாதன் இன்னும் கார் 'டாப்'மீது தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று வசந்தி நினைத்தாள்.

உடனே அவள் கார் கதவின் ஜன்னல் மீது ஏறி நின்று கார் 'டாப்'மீது பார்த்தாள். அங்கே ஜகந்நாதன் இன்னும் தூங்கிக்கொண்டுதான் இருந்தார்.

வசந்தி தன்னை மறந்த நிலையில் ஜகந்நாதனின் முகத்தருகில் குனிந்து அந்த முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அமைதியும் அறிவின் ஒளியும் வீசும் அந்த முகத்தைக் காலமெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் போலிருந்தது.

ஆனால் ஜகந்நாதன் சட்டென்று கண் விழித்துக் கொண்டு தன் முகம் அவள் முகத்தில் படாத குறையாய் நிமிர்ந்து அவளை நோக்கி, "என்ன வசந்தி! நான் தூங்குகிறேன் என்று நினைத்தாயா? நான் வெறுமனே கண்ணை மூடிக்கொண்டுதான் படுத்திருந்தேன்!" என்று சிரித்தார்.

உடனே வசந்தி கீழே இறங்கி நின்றுவிட்டாளே தவிர, அவள் வெட்கப்படவில்லை. முன்பெல்லாம் போல் அவள் நாணத்தால் தன் முகத்தை இரு கைகளாலும் பொத்திக்கொள்ளவுமில்லை. வெட்கப்படுவதற்கோ, கூச்சப்படுவதற்கோ இப்போது ஜகந்நாதன் அன்னியராகவும் அவளுக்குப் படவில்லை. அவரோடு ஹோட்டலில் கணவன் மனைவி போல் நடித்தது. அவரோடு தங்கியிருந்த ஒரு நாள் பொழுது—இந்த இரண்டுமே அவரோடு பல வருஷங்கள் வாழ்ந்து பழகி விட்டதைப் போன்ற உணர்வையும், உள்ளப் பூரிப்பையும் அவளிடம் நிறைவித்திருந்தன.


ஜகந்நாதன் கீழே இறங்கி வந்து வசந்தியின் முன்னால் நின்று, அவளுடைய கருவிழிகளின் புன்முறுவலை நன்றாக ஊடுருவிப் பார்த்தபடியே, "என்ன வசந்தி! இரவு முழுதும் என்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று நீ தவித்தாய் இல்லையா?" என்று கேட்டார்.

"ம்!" என்று வசந்தி புன்சிரிப்புடன் தலையாட்டினாள்.

"என்னை நீ காதலிக்கிறாய்! அதை என்னிடம் சொல்ல வேண்டுமென்று தானே நீ தவித்தாய்?"

வசந்தி அவரை நிமிர்ந்து பார்த்தபடியே ஒரு கணம் மௌனமாக நின்றாள். "ஆமாம்! உங்களை நான் காதலிக்கிறேன்! காதலிக்கிறேன்!" என்று அவளுடைய உள்ளமெல்லாம் உணர்வெல்லாம் உரக்கக் கூவவேண்டும் போல் இருந்தது. ஆனால் உதடுகள் துடிதுடிக்க அவள் மெல்லத் தலையாட்டிய பாவனை ஒன்றே அத்தனையையும் கூறிவிட்டது.

"நேற்று இரவு நிலாவின் போதையில் காதலைப் பற்றி நாம் பேச வேண்டாம் என்பதற்காகத்தான் நான் தூங்கு


பிலிப்ஸ்
லாம்புகள்
வாங்குங்கள்
—அவற்றினும்
சிறந்தவை
வேறொன்றுமில்லை!
பிரகாசமிகுந்த,
கண்ணைக்கூசாத ஒளி தருவது
பிலிப்ஸ் ஆர்ஜெண்டா
PHILIPS
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
JWTP 1771


tik-20
டிக்-20
மூட்டைப்பூச்சிகளைக்
கொல்லுகிறது
டாடா-பையர் தயாரிப்பு
சோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ராலிஸ் இந்தியா லிமிடெட்

வது போல் பாவனை செய்தேன்!'' என்றார் ஜகந்நாதன் அமைதியாக.

வசந்தியின் கண்களில் நீர் துளிர்த்தது. ஆனந்தத்தால் அவள் உடலெல்லாம் புல்லரித்தது.

அதன் பிறகு அவளுடைய இளம் உதடுகள் அவரிடம் ஏதோ கேட்கத் துடித்தன.

''என்ன வசந்தி! நானும் உன்னைக் காதலிக்கிறேனா என்று கேட்கத் துடிக்கிறாய், இல்லையா?''

வசந்தி ஆவலோடு அவரை ஏறிட்டுப் பார்த்தாள். அவர் வாயிலிருந்து வரக்கூடிய ஒரு வார்த்தையிலேயே தன் உயிரையெல்லாம் பணயம் வைத்திருப்பவள் போல் பார்த்தாள்.

''வசந்தி! காதலைப் பற்றி நம் வாய்கள் பேச வேண்டாம்! இருதயங்கள்தான் பேச வேண்டும்!'' என்றார் ஜகந்நாதன்.

வசந்தி அப்படியே சரிந்து அவருடைய கழுத்தைத் தன்னிரு கைகளாலும் கட்டிக் கொண்டு அவருடைய விசாலமான தோளில் தன் பசுமையான முகத்தைப் புதைத்தபடி விம்மி விம்மி அழுதாள். அந்தக் கண்ணீரெல்லாம் ஆனந்த பரவசத்தின் மடை திறந்த வெள்ளம்.

அவளுடைய கூந்தலை வாஞ்சையுடன் மிருதுவாகத் தடவிக் கொடுத்த ஜகந்நாதன் ''வசந்தி! இனிமேல் நாம் தனியாகத் தங்கியிருக்க வேண்டாம்! வீட்டுக்குப் போய் விடலாம்!'' என்று சொல்லிவிட்டுக் காரை 'ஸ்டார்ட்' செய்தார்.

அப்படியானால் கார் உண்மையில் கோளாறு அடையவில்லையா? அது 'ரிப்பேராகி' நடுவழியில் நின்றுவிட்டது என்று ஜகந்நாதன் சொன்னதெல்லாம் வெறும் நாடகம்தானா? அதை வசந்தி கேட்கவில்லை! இனி கேட்கவும் விரும்ப மாட்டாள்!

அத்தியாயம் நாற்பத்தெட்டு

வெறும் நிழல்

உமா தன் குடையை விரித்துப் பிடித்துக்கொண்டு தன் வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டாள்.

வீதியில் அவள் இறங்கிச் சிறிது தூரம் நடந்ததுமே அவளுக்குப் பின்னால் ஒரு மோட்டார் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. உமாவின் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. பிச்சுமணியா....?

உமா மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

பிச்சுமணியின் பேபி ஆஸ்டின் கார் அல்ல அது! புத்தம் புதிய பூதாகாரமான கார்தான்!

நல்லவேளை என்று உமா பெருமூச்சு விடுவதற்குள் அந்தக் காரை ஓட்டி வந்து அவளருகில் நிறுத்திய ஜகந்நாதன் ஒரு புன்முறுவலுடன், ''உமா!'' என்று கூப்பிட்டார்.

''நீங்களா...?''

''ஆமாம். என் அண்ணியின் குழந்தைகளுக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்கத்தானே புறப்பட்டாய்? காரில் ஏறிக்கொள்!'' என்றார் ஜகந்நாதன்.

உமா தயங்கவில்லை. ஏதோ ஒரு முக்கியமான விஷயம் பற்றித் தன்னிடம் பேசுவதற்குத்தான் ஜகந்நாதன் அப்படிக் கூப்பிடுகிறார் என்று உமா நினைத்து அவருடைய காரின் பின் ஸீட்டில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

''மேஜர் ராமதுரையின் வீட்டுக்குப் போயிருந்தேன்...'' என்று டாக்டர் ஜகந்நாதன் மெல்லப் பேச்சை ஆரம்பித்தார்.

உடனே உமா பரபரப்படைந்தாள். அவரது பேரன் பிச்சுமணியைப் பற்றிய நினைவால் ஏனோ அவள் நெஞ்சு விம்மியது. அவளையும் மீறிய ஒரு வித அமைதியின்மையும், இனம் புரியாத பயமும் குடியேறிய அவளுடைய முக பாவத்தைக் காரின் சிறு கண்ணாடி தெளிவாகவே ஜகந்நாதனுக்குப் பிரதிபலித்துக் காட்டியது.

''உமா! எனக்கு மேஜர் வீட்டிலிருந்து அவசரமாக டெலிபோன் அழைப்பு வந்தது. உடனே நான் அங்கே போனேன்...'' என்று ஜகந்நாதன் கூறி நாடக பாணியில் டக்கென்று நிறுத்திவிட்டு உமாவின் முகத்தை நோக்கித் திரும்பி நேரிடையாகவே உற்றுப் பார்த்தார்.

ஒரு கணம் விசித்திர மௌனம் நிலவியது.

பிறகு, ''அங்கே பெரியவருக்கு...?'' என்று கம்மும் குரலில் கலவரத்துடன் கேட்டாள் உமா.

''மேஜருக்கு ஒன்றுமில்லை! இன்னும் எத்தனை வயதானாலும் கிழவர் பீரங்கிக் குண்டு மாதிரியே இருப்பார். நான் சிட்டு விளையாடத்தான் அவ

ருக்குத் தேவையே ஒழிய அவருடைய உடம்புக்கு எந்த டாக்டரும் தேவையே யில்லை!'' என்றார் சிரித்துக்கொண்டே.

''அப்போ அந்த வீட்டில்....?'' – உமா பதை பதைப்போடு கேட்டாள்.

''கவலைப்படாதே! பிச்சுமணிக்கும் ஒன்றுமில்லை! தலைவலி, ஜுரம் என்று அவன் எப்போதாவது படுத்தால் அது காதல் ஜுரமாகத்தான் இருக்கும்! அல்லது தன் தாத்தாவைத் தவிக்க வைக்கும் நடிப்பாக இருக்கும்!'' என்று ஜகந்நாதன் கிண்டலாகச் சிரித்தார்.

''பின்னே அந்த வீட்டில்...?''

''பட்லர் இருதயசாமிக்குத்தான் நெஞ்சு வலி! அவன் தன் நெஞ்சில் அதிகமான சுமைகளை வைத்துக்கொண் டிராமல் எல்லாவற்றையும் பிச்சுமணி யிடம் கொட்டிவிட வேண்டுமென்று நான் ஒரு பரிகாரம் சொன்னேன். அதாவது, பிச்சுமணியின் அம்மா ஒரு நாடகக்காரி என்பதையும், அவளுக் காகப் பிச்சுமணியின் அப்பா தன் சொத்து சுகங்கள் அனைத்தையும் துறந்துவிட்டு அவள் பின்னாலேயே பரா ரியாக அலைந்து, கடைசியில் அவளு டைய கைகளுக்குள்ளேயே பரிதாபமாக மாண்டுபோன காதல் கதையையெல் லாம் வெகு உருக்கமாகப் பிச்சுமணி யிடம் சொல்ல வேண்டும். அப் போதுதான் அவன் காதலுக்காகக் கட்சி கட்டிக் கொண்டு நிற்பான்!'' என்றார் ஜகந்நாதன்.

ஹோவென்ற கடலலைகள் வெகு தொலைவிலிருந்து பொங்கி வந்து உமா வின் நெஞ்சில் புரண்டு விழுவதுபோல் இருந்தன. அதில் அழுந்திய உமாவின் விழிகள் ஏதோ ஒரு கனவு மயக்கத்தில் அமிழ விரும்புபவைபோல் கிறங்கின.

''பிச்சுமணியைப் பற்றி ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். ஆனால் அது உனக் குப் பிடிக்குமோ, பிடிக்காதோ...? பிச்சுமணிக்குக் கூடிய சீக்கிரம் கல்யா ணம் நடக்கப் போகிறதாம்! இந்த விஷயத்தைப் பட்லர் இருதயசாமிதான் என்னிடம் சொன்னான்!'' என்றார்.

பெண் யாரென்று உமா கேட்க வில்லை. அந்தச் சமயம் அவள் தன் னுடைய பெருமூச்சை உள்ளூற அடக் கிக்கொள்ளவே அரும்பாடு பட்டாள்.

''பெண் யார் தெரியுமா? பிச்சு மணியின் வீர பரம்பரையைச் சேர்ந்த வளாம்! அதிலும் அவனுடைய தாத்தா வின் பட்டாளத்துச் சினேகிதருக்கு ஒரே பெண்ணாம்! பெயர் லலிதாவாம்!''

உமா ஒரு கணம் உயிரற்ற சிலைபோல் அசையாமலிருந்தாள். (தொடரும்)



ஃ பல்லைக் கிட்டும் பிப்ரவரிக் குளிரில் லண்ட னில் 1946ல் ஒரு ஐஸ்கிரீம் பார்லரில் ஒரு வாரத்தில் 700 பவுன்களுக்கு விற்பனையாயிற் றும். ஐஸ்கிரீம் அரசன் என்று புகழப்பட்ட ஜேம்ஸ் பாப்லோ என்பவர் தமது ஐஸ்கிரீம் தொழிலை 70,000 பவுனுக்கு விற்றாராம். இவர் ஒரு நாளைக்கு 3 டன் ஐஸ்கிரீம் தயாரித் தார் அந்த நாளில். – அதாவது 1946ல்.

ஃ யுத்த காலத்தில் இங்கிலாந்தில் ரேஷன் கடுமையாக இருந்தபோது ஐஸ்கிரீம் தயா ரிப்பில் 'கள்ள மார்க்கட்' வியாபாரம் கடுமை யாக இருந்தது. ஐஸ்கிரீம் தயாரிப்புக்கான பால் பவுடர்களைப் பதுக்கலானார்கள். இந்தக் குற்றத்துக்காக மான்செஸ்டரில் இரண்டு சகோதரர்கள் தண்டிக்கப்பட்டார்கள். ஒரு வருக்கு 3000 பவுன் அபராதமும் ஆறு மாதச் சிறை வாசமும், மற்றவருக்கு 2000 பவுன் அபராதமும் விதிக்கப்பட்டன. இவர்கள் 27,840 டின் ருசியற்ற பால் பவுடரையும், 24,264 டின் வீட்டு உபயோகத்துக்கான பாலையும் பதுக்கி யிருந்தார்களாம் ஐஸ்கிரீம் தயாரிக்க. இது 4,000 மக்களின் ஒரு வருஷத்திய ரேஷனாகும்.

ஃ நம் நாட்டிலும் ஒரு கெட்டிக்கார ஆனால் பேராசை பிடித்த வியாபாரி 'பிளாட்டிங் பேப்பரை'ப் பாலில் ஊற வைத்துக் குறைந்த செலவில் நிறைய ஐஸ்கிரீம் செய்து விற்றார். போலீஸார் இவரைத் தண்டித்து விட்டனர்.

ஃ ரோமானியர்களின் காலத்தில், ஆல்ப்ஸ் மலையிலிருந்து பனிக்கட்டி சாம்ராஜ்யத்துக் குக் கொண்டுவரப்பட்டது. எப்படி? உருகி விடாதா? அதற்காக வேகமாக ஓடக் கூடிய குதிரைகள் பூட்டிய ரதங்கள் ஆங்காங்கே தயாராக நிற்கும். பனிக்கட்டி, வெண்பனி இரண்டையும் இந்த ரதங்களின் மூலம் மாற்றி மாற்றி ரோமாபுரிக்குக் கொண்டு வந்து சேர்ப்பார்களாம்.

ஃ ஐஸ் போட்ட பானங்கள் மிக மிக உயர்ந்த படாடோபம் மிகுந்ததாகக் கருதப் பட்டது. 1633ல் காஸ்பார்டு டிவெனல் என்ற பிரெஞ்சுக்காரர்; ரோமானியர் காலத்தில் இருந்து மறைந்த இந்தக் குளிர் பான முறையை மறுபடி கொண்டு வந்தார். 1660ல் பாரிஸ் நகரில் ஐஸ் போடப்பட்ட பழச்சாற்றை பிரோஸ்போ காண்டாக்ஸ் என்பவர் விற்பனை செய்யலானார். லண்ட னில் முதன் முதலில் குளிர் பானங்களின் வியாபாரத்தை ஆரம்பித்தவரும் ஒரு பிரெஞ்சு அகதிதான்.

வழக்கறிஞர் வரிசை

சென்னை உயர்நீதி மன்றத்துக்குப் புகழும் பெருமையும் தேடித் தந்த சில ஆங்கிலேய வழக்கறிஞர்களில் காலஞ்சென்ற நியூஜென்ட் கிராண்ட் குறிப்பிடத் தக்கவர். சென்னையில் தொழில் நடத்திய ஆங்கிலேய பாரிஸ்டர் பரம்பரை வரிசையில் கடைசியானவரும் கூட! பல பிரசித்தி பெற்ற வழக்குகளுக்கும் நியூஜென்ட் கிராண்டுக்கும் நிறைய சம்பந்தமுண்டு.

1903ம் ஆண்டில் இங்கிலாந்தில் பாரிஸ்டர் தொழிலுக்குத் தம்மைத் தயார் செய்து கொண்ட கிராண்ட் நேராகச் சென்னைக்கே வந்துவிட்டார். காரணம் அப்போது சென்னையில் அவருக்கு மிகவும் நெருங்கிய உறவினர்களான ராபர்ட் கிராண்டும், வில்லி கிராண்டும் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞ ஜாம்பவான்களாக விளங்கிக் கொண்டிருந்தார்கள். வில்லி கிராண்ட் தெளிவான சிந்தனைக்கும் சுவையான வாதத்துக்கும் உதாரண புருஷராக இருந்தார். ராபர்ட் கிராண்ட் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்து குழப்புவதில் அசகாயசூரர். இந்த இரண்டு வகைத் திறமைகளையுமே சேர்த்துத் தமதாக்கிக் கொண்ட நியூஜென்டுக்கு எதிர்காலம் முழுக்க முழுக்க வெற்றிப் பாதையாக அமைந்ததில் ஆச்சரியமில்லை.

தமது கட்சிக்காரனின் உயிருக்கும் உடைமைக்கும்; சம்பவங்களையும், சட்டத்தையும் கொண்டு தீவிரமாகப் பாடுபடுபவர் என்ற பெயர் சீக்கிரமே அவரைச் சேர்ந்துவிட்டதால், அவர் வழக்குகள் நடந்தும் எந்தக் கோர்ட்டிலும் இதர வழக்கறிஞர்கள் கூடிவிடுவார்கள். நீதிக்காக உழைப்பது என்ற ஒரே கொள்கையைக் கடைப்பிடித்ததினால்தான் அவர் தமக்குக் கிடைத்த பப்ளிக் பிராசிக்யூட்டர் பதவியையும் ராஜிநாமா செய்துவிட்டார்.

ஒரு கொலை வழக்கில் சர்க்கார் தரப்பு அப்பீல். பப்ளிக் பிராசிக்யூட்டரான கிராண்ட் சம்பந்தப்பட்ட ரிகார்டுகளைக் கவனமாகப் படித்தார். குற்றத்தை நிரூபிக்க வலுவான ருசுக்கள் இல்லை என்பதை உணர்ந்தார்.

எதிர்த்தரப்பு வழக்கறிஞர் பேச ஆரம்பித்த உடனேயே கிராண்ட் எழுந்து, ''நீங்கள் வாதாட வேண்டிய அவசியமே இல்லை. இந்த வழக்கில் வலுவான சாட்சியங்கள் இல்லை என்று நான் நினைப்பதால் எதிரிக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று நான் வற்புறுத்தப் போவதில்லை'' என்று அறிவித்தார்.

விசாரணை நீதிபதி பிலிப்ஸின் முகம் கோபத்தால் சிவந்தது. கிராண்டை முறைத்துப் பார்த்தார். சர்க்காருக்காக வாதாடி எதிரிக்குத் தண்டனை கொடுக்க வற்புறுத்துவது பிராசிக்யூட்டரின் கடமை என்றும் அந்தக் கடமையைக் கிராண்ட் நிறைவேற்றியாக வேண்டுமென்றும், இல்லாவிடில் இது பற்றிச் சர்க்காருக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டி நேரிடுமென்றும் மிரட்டினார்.

வழக்கில் வலு இல்லாமலிருந்தால் தண்டனையை வற்புறுத்தாமலிருக்கத் தமக்கு உரிமை உண்டென்றும், பிராசிக்யூட்டர் பதவியை அந்த விதத்தில்தான் தாம் வகிப்பதாகவும் சொல்லிவிட்டு கிராண்ட் நீதி மண்டபத்தை விட்டு வெளியே போனார்! அந்தச் சூட்டோடு அந்தப் பதவிக்கு ஒரு முழுக்குப் போட்டார்.

அதோடு நிற்கவில்லை! இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நீதிபதி பிலிப்ஸ் அமரும் எந்தக் கோர்ட்டிலும் தாம் ஆஜராகாமலும் பார்த்துக்கொண்டார்! நேர்மைக்கும் தைரியத்துக்கும் இது ஓர் எடுத்துக்காட்டுத்தானே!

மற்றொரு வேடிக்கையான சம்பவம்! கொலை வழக்கு அப்பீல் ஒன்றில் எதிரியின் சார்பில் கீழ்க் கோர்ட் தண்டனையை ஆட்சேபித்து இரண்டு நாட்களாக அத்தனை சாட்சியங்களையும் அலசி அலசி வாதம் செய்து கொண்டிருந்தார் கிராண்ட். விசாரணை நீதிபதி ஆட்ஜர் என்பவர். அவர் திடீரென்று அத்தனை வாதங்களையும் கேட்டுவிட்டு ஒரு கேள்வி போட்டார்! ''மிஸ்டர் கிராண்ட்! இதெல்லாம் சரிதான்! ஆனால் ஏன் கீழ்க் கோர்ட்டில் குப்புசாமி கவுண்டனைப் பெட்டியில் ஏற்றி விசாரணை செய்யவில்லை? இது பெரிய தவறாயிற்றே?'' என்றார் ஆட்ஜர்.

கிராண்டுக்குத் தலை சுற்றியது! மேஜையைப் பிடித்துக் கொண்டார். தம் ஜூனியர் ஒருவரைத் தொடர்ந்து வாதம் செய்யும்படி சைகை செய்துவிட்டு மௌனமாகக் கோர்ட் ஹாலை விட்டுக் கிளம்பினார். குப்புசா



நியூஜெண்ட் கிராண்ட்

கவுண்டனைக் கீழ்க் கோர்ட்டில் எப்படிச் சாட்சியாக விசாரித்திருக்க முடியும்? அவன் தானே கொலை செய்யப்பட்டுப் பிராணனை விட்டவன்! தம் இரண்டு நாள் வாதத்தை நீதிபதி இவ்வளவு அழகாகக் கவனித்திருக்கிறார் என்று தெரிந்தபோது அவருக்கு ஏமாற்றம் எத்தனை பெரிதாக இருந்திருக்கும்!

தம் ஜூனியர்களிடம் தாராளமாகவும், அன்பாகவும் பழகுவதில் கிராண்ட் பிரசித்தமானவர். காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயன்கூட இவரிடம் ஒரு காலத்தில் தொழில் பழகியவர். இன்று உயர் நீதி மன்றத்தில் தொழில் புரியும் பல சீனியர்கள் இவருடன் இருந்தவர்கள். வெளியூர் வழக்குகளுக்குத் தம்முடன் ஜூனியர்களை அழைத்துச் சென்றால், தமக்குக் கிடைக்கும் சௌகரியம் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர். கட்சிக்காரர்கள் அவர்களுக்கான பீஸைக் கொடுக்காமலிருந்தால் தாமே கொடுத்துவிடும் சுபாவம் உள்ளவர்.

அந்தக் காலத்திலேயே அதாவது, ரூபாய்க்கு நிறைய மதிப்புள்ள நாட்களிலேயே அவருடைய குமாஸ்தாவுக்கு மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தாராம்! எந்த வழக்கறிஞரும் அவருடைய தாராளத்தை எட்டிப் பிடித்ததில்லை என்று விஷயமறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். கிராண்டின் மாத வருமானமே அந்த நாட்களில் பன்னிரண்டாயிரம் ரூபாய் வரையில் போகுமாம்!

'சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யுமுன் வழக்கு விவரங்களை நன்றாக ஆராய்ந்து சம்பவங்கள் இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று பூரணமான ஒரு சித்திரத்தை மனத்தில் பதித்துக் கொண்டு, அதை அஸ்திவாரமாகக் கொண்டு விசாரணையை ஆரம்பிக்க வேண்டும். இந்தக் கேள்வி கேட்டால் எதிர்பார்க்கும் பதில் வருமா? அந்தக் கேள்வி கேட்டால் எதிர்பார்க்கும் பதில் வருமா என்ற ஹேஷ்ய போரத்தில் இறங்கக் கூடாது' என்று அடிக்கடி சொல்லுவார் கிராண்ட் தம் ஜூனியர்களுக்கு. அதையே தாமும் கடைப்பிடிப்பார்.

ஒரு நாள் பிற்பகல். சோர்ந்தாற்போல் கிராண்ட் தம் ஆபீஸ் அறைக்கு வந்தார். "அடடா! நாளைக்குக் கோயம்புத்தூர் செஷன்ஸ் கோர்ட்டில் ஒரு முக்கியமான கொலை வழக்கில் ஆஜராக வேண்டும். கேஸை நான் படிக்கவேயில்லை. கோயம்புத்தூர் வக்கீலையும் நான் தயார் பண்ணச் சொல்லவில்லை. நான் எப்படி விசாரணை பண்ணப் போகிறேன்?" என்று அங்கிருந்த தம் ஜூனியரிடம் அங்கலாய்த்தார். ஜூனியரோ அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர். 'இதோ நான் விவரங்களைப் பார்த்துக் குறிப்பெடுக்கிறேன்' என்று கேஸ் கட்டைப் பிரித்தார். சீனியரின் கொள்கைப்படி சம்பவங்களை மனத்தில் சித்திரமாக்கினார். இரண்டு மூன்று சாட்சிகள் கீழ்க் கோர்ட்டில், இன்னென்ன இடங்களிலிருந்து குற்றம் நடந்ததையோ, குற்றவாளி ஓடினதையோ பார்த்ததாகச் சொல்லியிருக்கின்றனர். சம்பவம் நடந்த இடத்தின் பிளானும் இருந்தது. ஜூனியர் ஆராய்ந்தார். பிளானிலுள்ள சில கட்டிடங்களும், சாட்சிகள் இருந்ததாகச் சொல்லப்பட்ட இடங்களும் முரண்பாடாக இருந்தன. சாட்சிகள் தயாரிப்புச் சாட்சிகள் என்பது தெளிவாயிற்று! சீனியரிடம் சொன்னார்:

கிராண்ட் மன நிம்மதியுடன் போய் வாதாடி எதிரிக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். அந்த ஜூனியர் இன்று கிரிமினல் துறையில் ஒரு சீனியராக விளங்கும் திரு டி. எம். கஸ்தூரி அவர்களாம்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேலையாவாண்டையார் கொள்ளை கொலை சதிவழக்கு அந்தக் காலத்தில் பிரசித்தமானது. திருச்சி கோர்ட்டில் எதிரிக்காகத் திறமைசாலியான கணபதி ஐயர் ஆஜரானார். பிரதான எதிரி குற்றம் நடந்த இடத்தில் இல்லவே இல்லை என்று 'அலிபி'யை ஆதாரமாகக் கொண்டு வாதாடினார். நீதிபதி அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் எதிரிக்குப் பல தண்டனைகளை விதித்தார். அந்தத் தண்டனைக் காலங்களை எல்லாம் கூட்டினால் அறுநூறு ஆண்டுகளுக்கு மேலாயிற்று.

ஹைகோர்ட்டில் அப்பீல் வந்தது. கணபதி ஐயரைத் தொடர்ந்து கிராண்ட் ஆஜரானார். கீழ்க் கோர்ட் வாதத்தை ஒதுக்கி வைத்தார். அதற்கு முற்றிலும் மாறுபட்ட கோணத்திலிருந்து எதிரி தற்காப்புக்காகப் போராடினான் என்ற புது வாதத்தைத் தொடங்கினார். வெற்றியும் பெற்றார்.

அப்போதைய சென்னை ராஜ்யத்திலுள்ள அத்தனை மாவட்டத் தலைமைக் கோர்ட்டுகளில் ஆஜரானதோடு நிற்காமல் ஒரு பர்மிய தேக்கு மரக் கண்ட்ராக்டர் சார்பில் வாதாட ரங்கூன் கோர்ட்டுக்கும் போயிருந்தார் கிராண்ட். அங்கு வந்து ஆஜராகக் கூடாது என்று ரங்கூன் ஹைகோர்ட்டில் பிராக்டீஸ் செய்த வெள்ளை பாரிஸ்டர்கள் ஆட்சேபித்தார்கள். ஆனாலும் நீதிபதி பிரௌன் அந்த ஆட்சேபணையை ஏற்றுக் கொள்ளவில்லை. கிராண்ட் தம் ஜூனியர் கஸ்தூரியுடன் போய் வாதாடி வெற்றி பெற்றுத் திரும்பினார்.

நேர்மை, தைரியம், அஞ்சாமை, துணிச்சல் எல்லாமே கிராண்டுக்குத் துணையாக நின்றன. அவர் பெயர் அதிகமாகக் கிரிமினல் துறையுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர் சிவில் கூட்டுகளையும் நடத்தியிருக்கிறார். கொலை வழக்குகளில் பங்கு கொள்ள முடியாது என்ற ஒரே காரணத்துக்காக அவர் அட்வகேட் ஜெனரல் பதவியையும் உதறிவிட்டிருக்கிறார்.

கொலை வழக்குகளை, அதுவும் எதிரியின் சார்பில் நடத்துவது என்றால் அவருக்குப் பாதாம் ஹல்வா சாப்பிடுவதுபோல! பரம உற்சாக புருஷர்! 1945ல் அவர் காலமானபோது அவர் சொத்துக்கு வாரிசாகச் சொந்தக் குழந்தைகள் இல்லாது போனாலும் தொழில் வாரிசாகப் பரம்பரை பரம்பரையாக வரப் பல வழக்கறிஞர்களைத் தயார் செய்திருக்கிறோம் என்ற நிறைந்த உள்ளத்துடனே காலமானார். **—கோமதி சுவாமிநாதன்**

கருநாகப் பழம் போன்ற கண்கள். அந்தக் கண்களை அகல விழித்து, சாந்தியை ஒரு பார்வை பார்த்தாள் அஞ்சலை. அந்தப் பார்வையில் எல்லையற்றதொரு வியப்புக் கடலின் அலைகள் தெரிந்தன.

"என்னடி அப்படிப் பார்க்கிறே?" என்று கேட்டாள் சாந்தி. இடுப்பில் இறுக்கிக்கொண்டுள்ள சேலையை இழுத்து விட்டபடி.

"உங்களைப் பார்த்தா எனக்குப் பொறாமையா இருக்கும்மா!" — சிறு குழந்தையின் கள்ளங் கபடமற்ற தொனி. உண்மையிலேயே அது பொறாமையா? ஆம்! செல்வச் செழிப்பைப் பார்த்துப் பார்த்துப் பிரமித்துப் போகும் ஏழைமையின் ஏக்கம்.

"அப்புறம்...?" என்று தன் நெற்றித் திலகத்தைச் சரி செய்தபடி, ஒரு நெம்பு கோல் போட்டாள் சாந்தி. அஞ்சலையின் புகழ் மாரியில் சற்று நேரம் நனைய வேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

"அப்புறம் என்னம்மா? உங்களுடைய அழகையும் படிப்பையும் பார்த்தா என் மனசு என்னமா ஏங்குது தெரியுமா?"— இதழ்க்கடையில் ஒரு முறுவலோடு தன் இதயத்தை மெதுவாகத் திறந்து காட்டினாள் அஞ்சலை.

"நான் அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்?" என்று ஒப்புக்குக் கேட்டாள் சாந்தி. இப்போது அவளது வலது கரத்தின் பூந்தண்டு விரல்கள், இரு செவியோரங்களிலும் கூந்தலை நளினமாகச் சுருட்டி விட்டுக் கொண்டிருந்தன.

அஞ்சலை பதில் சொல்லவில்லை, சொல்ல வேண்டும் என்ற நினைப்பில்லை.

நுட்பமான உணர்வுகள் கொண்ட சாந்தி சட்டென்று பேச்சை மாற்றினாள்.

"சினிமாவுக்கு நீயும் வர்றியாடி?"

"ஐயோ! ... எங்கப்பன் கொன்னுப்புடுவாரு. இன்னும் தோட்டத்துக்குத் தண்ணி ஊத்தல்லே. நேரம் கழிச்சுத் தண்ணி ஊத்தினா செடிகள் கெட்டுப் போகுதுன்னு முதலாளி வேறே கோபிக்கிறாரு!" என்றாள் அஞ்சலை. 'முதலாளி' என்று அவள் குறிப்பிட்டது சாந்தியின் தந்தையை — ஏகதேசம் ஓர் இருபது லட்சத்துக்கு அதிபதியை.

"உங்க அப்பாகிட்டே நான் சொல்றேண்டி" என்று பரிந்து கொண்டு வந்தாள் சாந்தி. அஞ்சலையை அழைத்துப் போக அவளுக்கு உண்மையிலேயே எண்ணமில்லைதான். இருப்பினும் ஒரு பேச்சுக்காகத்தானே இந்த அழைப்பெல்லாம்...

"வேணும் சின்னம்மா...." என்று செல்லமாகக் கோணிக்கொண்ட அஞ்சலை, ஒன்றைக்கவனித்தாள். வலதுகாது ஓரமாகச் சுருட்டி விடப்பட்டிருந்த கூந்தல் நிமிர்ந்து கொண்டுவிட்டது. உடனே அதைச் சுருட்டி விடப் போனாள். அந்தச் சமயத்தில்...

வெளி வராந்தாவில் இரண்டு ஹெரால்ட் வண்டிகளின் ஹாரன் சத்தம் செவிப் பறையைக் கிழித்தது.

"எல்லாம் வந்துட்டாங்க போல் இருக்கு. காப்பி தயாராயிருக்கா பாரு..." என்றாள் சாந்தி. அதுவரையில் இருந்த அத்தியந்த தோழமைக்கு ஒரு முற்றுப்புள்ளி விழுந்தது.

சின்ன எஜமானியின் ஆணையல்லவா அது? முந்தானையை இழுத்துச் சுருட்டிக் கொண்டு சமையலறைக்குள் ஓடினாள் அஞ்சலை.

அரண்மனை போன்ற அந்த மாளிகையில் ஐந்தாறு வாலைக் குமரிகளின் அமளி தொடங்கியது. அத்தனைபேரும் சாந்தியின் தோழிகள். வயதால்மட்டுமல்ல, வாழ்க்கை வசதியாலும் ஒருவரையொருவர் ஒத்தவர்கள்தான்.

"இன்றைக்கு எந்தச் சினிமாடீ?" என்று கேட்டாள் ஒருத்தி.

"சினிமா வேண்டாம். ஜாலியாகக் கடற்கரைப் பக்கம்..." என்று திருத்தம் கொண்டு வந்தாள் மற்றொருத்தி.

"நோ... நோ... எவ்வளவு நேரமானாலும் மகாபலிபுரம் போயிட்டு வரணும்.... அதுவும் கோவளம் வழியாகப் போகணும். ஐ லைக் தட் சீனரி" என்றாள் மூன்றாமவள். ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசுவதே அவள் சுபாவம்.

உடனே, "வேண்டாம்... வேண்டாம். சினிமாத்தான்........" இப்படிச் சில குரல்கள். தொடர்ந்து, "இல்லை, இல்லை. கடற்கரைதான்" என்ற கூக்குரல். சந்தடி மிகுந்துவிட்டது.

"சைலென்ஸ்.... சைலென்ஸ்" என்று ஆணையிட்டாள் சாந்தி. எப்போதுமே அந்தக் குழுவுக்கு அவள்தான் தலைவி. "முதலில் காப்பி சாப்பிடலாம். பிறகு மற்ற யோசனைகள்" என்று கூறியவள் "அஞ்சலை!" என்று குரல் கொடுத்தாள்.

பிஸ்கெட்டுகளைக் கோபுர அடுக்காகஅடுக்கி நாலைந்து கப் சாசர்களுடன் 'ஜக்'இலிருந்து



வந்த காப்பியின் நறுமணம் நாசியைத் தீண்ட டீ டிரேயை எடுத்துக் கொண்டு வந்தாள் அஞ்சலை — வேலைக்காரி என்பதை எழுத்துக்கு எழுத்து நிரூபிக்கும் குறுகிய கோலத்தோடு.

''ஓ அஞ்சலே! ஹௌ ஆர் யூ?'' — இது ஒருத்தியிடமிருந்து வந்த முகமன்.

''தேங்க்யூ... தேங்க்யூ...'' — இது மற்றொரு பெண்ணின் நன்றி உபசாரம்.

கரங்கள் நடுங்க, சாஸர் கப்பில் காப்பியை ஊற்றிவிட்டு ஒதுங்கி நின்றாள் அஞ்சலை. கண்கள் அந்தக் கன்னியர் குழாத்தை வட்டமிட்டன.

''எனக்குப் பொறுமையா இருக்கு...'' — அவளுடைய இதயம் அவளிடமே கூறியது. வயிற்றுக்குப் பாரமாகத் தாங்கி, வாழ்க்கைக்குப் பாரமாகப் பெற்று வளர்த்து, இப்போது தந்தைக்குப் பாரமாகத் தன்னை விட்டுச் சென்றுவிட்ட தனது அன்னையின் மேல் அவளுக்குத் துளி அளவு கோபமும் பிறந்தது. ஏழைமை நிலையில் என்னைப் பெற்றெடுக்காததுதானா அவர்களுக்குக் குறையாகப் போயிற்று? இப்போது படிப்பில் உயர்ந்து பணத்தால் செழித்திருக்கும் இவர்களைப் பார்க்கக் கண்கள் மறுக்கின்றன. நெஞ்சம் பொறுமையால் சுக்கு நூறாக உடைபடுகிறது.

சாஸரில் காப்பியை ஊற்றி, சரசமாக உறிஞ்சியபடி ஒருத்தி கேட்டாள். ''சாந்தி! உங்க அப்பா அம்மா இன்னும் டில்லியிலேயிருந்து வரலையாடி?''

சாந்தி ஏதும் பதில் சொல்லாமல் பிஸ்கெட்டை மென்றாள்.

''டில்லிக்கா போயிருக்காங்க? எதுக்கு?'' என்று மற்றொருத்தி கேட்டாள்.

''டோன்ட் யூ நோ தட்? சாந்திக்கு வரன் தேடறாங்க!''

''மை குட்னஸ். இன்னுமா வரன் தேடும் படலம் முடியலே?'' என்று வியப்புக் கடலில் கூவினாள் ஒருத்தி.

''என்னடி அப்படிச் சொல்லிட்டே? இளவரசிக்கேற்ற இளவரசன் கிடைக்க வேண்டாமா? அந்தப் புண்ணியவான் எங்கே ஒளிஞ்சிண்டிருக்கானோ — சாந்தியின் அப்பாஅம்மாவை இப்படி அலைக்கழிக்கிறான்...''

சாந்தியின் முகம் இலேசாகக் கோணியது. ஆனால் அவள் தோழி கூறியது என்னவோ உண்மைதான். பள்ளியில் இறுதி வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது சாந்தி பருவப் பூங்காவில் கால் வைத்தாள். அதற்குப் பிறகு நான்கு ஆண்டுகள் பி. ஏ. வகுப்பு. அது முடிந்ததும், அவளுக்கேற்ற — இல்லை, இல்லை — தமது அந்தஸ்துக்கேற்ற — வரனைத் தேடுவதில் வரிந்து கட்டிக் கொண்டு இறங்கினார் அவளுடைய தந்தை. ஆனால் அவருடைய முயற்சி முடியாத தொடுவானம் போல், எங்கே எங்கேயோ முடிவில்லாமல் போய்க் கொண்டிருந்தது. இப்போது டில்லிக்குப் போயிருக்கிறார். அதுவும் காயோ பழமோ...?

சாந்திக்கு மட்டுமல்ல; அவளுடைய குழுவைச் சேர்ந்த குமரிகளுக்கெல்லாம் ஏறக்குறைய இந்தக் கதைதான். பெண் வீட்டார் மேட்டுக்கு இழுத்தால் பிள்ளை வீட்டார் பள்ளத்துக்கு இழுக்கிறார்கள். முடிவு? கொழுகொம்பைச் சுற்றிக் கொடியாய்ப் படர வேண்டிய பருவத்தில், காரை எடுத்துக் கொண்டு கடற்கரை, சினிமா என்று சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

அஞ்சலையின் கண்களில் அதுதான் அம்பாகக் குத்தியது. வறுமையாகட்டும் — செல்வமாகட்டும் அனுதாபமாகப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் பெண்கள் தானே?

தன்னை யொத்த வயதுடையவர்கள் உல்லாச



கோயிலுக்குள் ஒரு துணை..

டி.கே.டி.துரைராசன்

மாகத் திரியும்போது தான் மட்டும் உழைத்து உழைத்து ஓடாகிப் போவதா?

காலையில் எழுந்து அந்த மாளிகையைக் கூட்டி முடிப்பதற்குள் அஞ்சலைக்குக் கைகள் வலி கண்டு விடும். பிறகு சமையலறைக்குள் புகுந்து, பண்டம் பாத்திரங்களைத் துல்லியமாகத் தேய்த்து வைப்பதற்கு ஒரு யுகாந்திரம் பிடிக்கும். அடுத்து, துவைத்து உலர வைக்க வேண்டிய துணிமணிகள் ஒரு பொதி. அது முடிந்து, நிமிர்ந்தாளென்றால், பூச்செடிக்கு நீர் ஊற்றிக் கொண்டிருக்கும் அப்பன், "இந்தா ரெண்டு வாளி கொண்டாந்து ஊத்து" என்பான். பாபம்! வயோதிகக் கிழவன். வாழ்நாள் முழுவதையும் அந்த மாளிகைக்குத் தோட்ட வேலை செய்ய அர்ப்பணித்துவிட்ட அப்பாவி. அவனுக்குத் தன் மகளின் ஆசை, அபிலாஷைகள் தெரியப் போகிறதா? அல்லது அப்படியே தெரிந்தாலும் அவைகளை நிறைவேற்றி வைக்கக் கையாலாகுமா?

இந்த ஏழைமை அஞ்சலைக்கு ஒரே ஒரு சமயத்தில்தான் விசுவரூபமாய்த் தெரியும்—அதாவது சாந்தியைப் பார்க்கும்போது. பட்டுப் பூச்சி போன்ற சாந்தியையும், மண் புழு போன்ற தன்னையும் நிமிஷத்துக்கு நிமிஷம் எடை போட்டுக் கொள்வாள் அஞ்சலை. சில நாட்களில் வேலைகளில் கூடக் கவனமில்லாமல், சாந்தியின் அருகிலேயே அவள் குளிக்கும்பொழுது, தலை வாரிப் பூச்சூட்டிக் கொள்ளும்போது, சாப்பிடும் பொழுது, ஒய்வாகப் படிக்கும் பொழுது, ரேடியோ கேட்கும்பொழுது, வருகிற தோழியர்களோடு அரட்டை அடிக்கும் போது, ஜிலையாக நின்று, விழி இமைக்காமல் பார்த்துக்கொண்டிருப்பாள். ஏக்கத்தால் நெஞ்சு பொருமும். அந்த ஏக்கம் சில நேரங்களில் "உங்களைப் பார்த்தா எனக்குப் பொறுமையா இருக்கு" என்ற வார்த்தைகளாக உருவெடுக்கும்.

இப்போது அஞ்சலை ஒதுங்கி, ஓரமாக நிற்கிறாளென்றால், காரணம் இந்த வெறுமை தான். ஏக்கம்தான்.

ஆயிற்று. காப்பி குடித்தானதும், கன்றுக் குட்டிகள் போல் எல்லோரும் துள்ளிக் கொண்டு போய்விட்டார்கள்.

அஞ்சலை நெடியதொரு பெருமூச்சு விட்டாள். மாளிகையில் ஓர் ஏழை நெஞ்சின் பெருமூச்சு.

பின்புறம் மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்தில் அவர்கள் குடிசை இருந்தது. அஞ்சலை உள்ளே போய் மூலையாகப் பார்த்து முடங்கிக் கொண்டாள்.

பூச்செடிகளுக்குத் தண்ணீர் ? — எக்கேடாவது கெட்டுப் போகட்டும் அவை. மனமே வாடி வதங்கும்போது அந்த மலர்ச் செடிகள் என்ன? சாதாரணம்.

கிழவன் வந்து விட்டான். "என்னும்மா! செடிக்குத் தண்ணி ஊத்தல்லே?" என்ற வேலைத் தினவோடு. அஞ்சலை பதில் சொல்லவில்லை. 'அ.... அவன்னுக் கூடப் படிக்காத அப்பனுக்கு — மகளைப் பெற்று ஒரு வீட்டுக்கு வேலைக்காரியாக்கி விட்ட அப்பனுக்கு என்ன பதில் வேண்டிக் கிடக்கிறது?'

தந்தையின் மனத்தில் ஏதோ ஒரு சஞ்சலம்: "ஒடம்புக்கு என்னும்மே?"

"ஒடம்புக்கு என்ன?" என்று அஞ்சலை திருப்பிக் கேட்டாள்.

கிழவனின் விரல்கள் மோவாயைச் சொறிய மனம் எதையோ யூகித்தது. 'ஆ! மகளுக்கு அப்பன் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான கடமை... அதைப் பற்றி நாம் சிந்திக்கவே இல்லையே!' என்று மிச்சமாயிருந்த உள்ளுணர்வு இடித்தது. மறு பேச்சில்லாமல், அந்த எண்ணத்தை மட்டும் அசை போட்டபடி வெளியே வந்து விட்டான் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற.

மறு நாள் காலை.

கிழவன் வேட்டியும் சட்டையுமாகத் தன் எதிரில் வந்து நின்றதைப் பார்த்த சாந்தி, "என்ன தாத்தா?" என்று கேட்டாள்.

"கிராமத்துக்குப் போய் வரணும்மா... சாயங்காலம் வந்துடறேன். இல்லாட்டி நாளைக்குக் காலங் காத்தாலே கட்டாயம் வந்துடறேன்."

"என்ன தாத்தா அவ்வளவு அவசரம்? அப்பா — அம்மா ஊரிலே இல்லே. அவங்களும் இன்னைக்கு நாளைக்கு வந்துடுவாங்க!"

"அதுக்குள்ளே வந்துடறேம்மா! அஞ்சலைக்குச் சட்டுப்புட்டுன்னு ஏதாவது ஒண்ணு...."

'ஓ!' என்று வியப்போடு முறுவல் காட்டினாள் சாந்தி. "மாப்பிள்ளை யெல்லாம் ரெடியா இருக்கா தாத்தா?" — கலகலவென்று பற்களெல்லாம் சிந்திவிடுகிற மாதிரி, கபடில்லாமல் சிரித்தாள் அவள்.

"மாப்பிள்ளை என்னும்மா... நெட்டையோ, குட்டையோ அவளுக்குன்னு ஒருத்தனைக் கடவுள் படைக்காமேயா விட்டிருப்பான்? கிராமத்திலே சொந்தக்காரங்க இருக்காங்க. அவங்க மூலமா ஏதாவது அமையும். அவனையும் எத்தனை நாளைக்கு அடை காக்கிற மாதிரி காத்துக்கிட்டு..."

சாந்திக்குச் 'சுருக்'கென்று நெஞ்சில் எங்கேயோ தைத்தது. அதன் வலியை முகம் கோடி காட்டியது. ஆனால் சட்டென்று மறைத்துக் கொண்டு டிராயரைத் திறந்து, ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து, அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்கிக் கண்களில் ஒத்திக் கொண்ட கிழவன் தன் தொய்ந்த நடையைத் தொடங்கினான்.

ஐந்து நாட்கள் ஓடி மறைந்து விட்டன. ஆம், ஓடி மறைந்துதான் விட்டன. அதற்குள் எவ்வளவு நிகழ்ச்சிகள்!

கிழவன் கிராமத்துக்குப் போன அன்றைக்கே டில்லியிலிருந்து சாந்தியின் பெற்றோர்கள் வெறுங் கையோடு திரும்பி வந்தார்கள். பெற்றவர்களின் முகத்தைப் பார்க்க மகளுக்கும் — மகளின் முகத்தைப் பார்க்கப் பெற்றோர்களுக்கும் ஒரு கசப்பு. காரணம் வரன் விஷயம் காய்.

அலுத்துச் சலித்துப் போய் ஏமாற்றத்தோடு வந்த தந்தைக்கு வெறுப்பாக இருந்தது. இவ்வளவு பணம் — இத்தனை படிப்பு இருந்தும் மகளுக்கு ஏற்ற ஒரு வரன் அமையாத குமைச்சல். வியாபார வேலைகளைக்கூடக்

கவனிக்காமல், வீட்டு மாடியிலே புழுங்கிக் கொண்டிருந்தார்.

ஆனால் கிழவனே போன காரியம் முடித்துக் கொண்டு வந்து சேர்ந்தான். அடுத்த மூன்றும் நாள் திருப்போரூர்க் கோவிலில் அஞ்சலைக்குக் கலியாணம்.

ஒழுங்காக ஒத்திகை பார்த்த நாடகம் போல், ஒவ்வொரு நிகழ்ச்சியாக அஞ்சலையின் திருமணம் நடந்தேறிவிட்டது. கல்யாணம் முடிந்த கையோடு கிழவன், மகளையும், மருமகனையும் முதலாளியின் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். அன்று மாலை நான்கு மணிக்கு மேல் அஞ்சலை கிராமத்துக்கு, புக்ககத்துக்குப் புறப்பாடு.

அந்த வேளையும் நெருங்கிவிட்டது.

கல்யாணக் கருக்குக கலையாமல், சின்ன எஜமானியிடம் விடைபெறுவதற்கு மேலே போனான் அஞ்சலை.

மாடியில் தன் அறையில், ஜன்னல் விளிம்பில் அமர்ந்து, தொலை தூரத்துக்குப் பார்வையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த சாந்தி, கண்டங்கிச் சேலையின் சரசரப்பைக் கேட்டுத் திரும்பினாள்.

கண்களில் நீர் முத்துக் கோத்திருக்க அஞ்சலை நின்றாள். சாந்திக்கு அவள் வெறும் அஞ்சலையாகத் தெரியவில்லை. குறைவற்ற ஒரு வாழ்வு அஞ்சலையின் உருக் கொண்டு பொலிகிறதோ?

ஆதுரமாக அவளை அணைத்துக் கொண்டாள் சாந்தி. ஒத்த வயதுடைய இரு பெண் மனங்கள் ஒன்றோடொன்று இறுகின.

''போய்ட்டு வரேன் சின்னம்மா!''—மருகலாய் மருகியது அஞ்சலையின் குரல்.

சாந்தியின் வெளுத்த முகத்தில் ஒரு குறும்பான புன்னகை மொட்டுப்போல் அரும்பியது.

''எங்கேடி போறே?''

பதில் இல்லை.

''சொல்லேண்டி!'' குரலில் ஒரு சொட்டு விஷமத்தைக் கலந்தாள் சாந்தி. ''புருஷன் வீட்டுக்குத்தானே...? சொல்லேண்டி...''

'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை நளினமாக ஆட்டினாள் அஞ்சலை.

''அஞ்சலை! உன்னைப் பார்த்தால் எனக்குப் பொறாமையா யிருக்குடி!''

விக்கித்துப் போய்ப் பார்த்தாள் அஞ்சலை. சின்ன எஜமானியின் கண்களில் ஏன் அந்த நீர்க் கசிவு?

''ஆமாடீ, அஞ்சலை! உன்னைப் பார்த்தா எனக்கு...'' கம்முகிற குரலை ஒரு விநாடியில் சரி செய்து கொண்டாள் சாந்தி. ''ஏன் பொறாமையா யிருக்கு தெரியுமா? நீ கோவிலுக்குள்ளே போறே. நான் இன்னும் குகைக்குள்ளேயே இருக்கேன். நீ துணையோடு இருக்கே. நான் தனியா இருக்கேன். கண் மூடித் திறக்கும் நேரத்திலே உனக்குக் கல்யாணம் நடந்திடிச்சு. ஆனால் உனக்குக் கிடைச்ச பாக்கியம் எனக்கு அவ்வளவு சுலபத்திலே கிடைக்காது போலேயிருக்கு...''

அவ்வளவுதான்.

,'சின்னம்மா'' என்று கதறிய அஞ்சலை, சாந்தியின் கால்களைப் பற்றிக்கொண்டாள். ஒரு வேளை அவள் பாவ மன்னிப்புக் கோருகிறாள் போலும்!

குட்டிக்கதை



''கா.... கா.... கா....!''

வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார்கள் அனைவரும். வீட்டுக் கூரை மேல் காக்கைகள் பள்ளிக்கூடம் வைத்திருந்தன. ஒவ்வொரு வீட்டின் மீதும்....! மின்சாரக் கம்பிகள் மீதும்.... லக்ஷக்கணக்கான காக்கைகள் !

ஜான்ஜிபாரிலிருந்து லக்ஷக்கணக்கில் காக்கைகள் இடம் பெயர்ந்து மத்திய ஆப்பிரிக்காவில் குடியேறி விட்டன. காக்கைகள் உணவுக்காக அல்லாடின. காலனி அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தை, காக்கைகளுக்கு உணவு அளிப்பதற்காக மானியம் கேட்டதாம். ''ஏதோ தருமமாக இருந்து விட்டுப் போகட்டும்'' என்று எண்ணி ஒரு காக்கை முட்டையைப் பாதுகாக்கப் பத்து ஸெண்டும், ஒரு காக்கைக்கு ஐம்பது ஸெண்டும் அளிப்பதாக ஒப்புக் கொண்டது. இந்த விஷயத்தைக் காலனியில் பிரகடனம் செய்தனர். மறுநாள் காலனி அரசாங்கக் காரியாலயத்தின் முன் ஒரு கூடை நிறைய காக்கை முட்டைகளைக் கொண்டு வந்து இறக்கினான் ஒரு நீக்ரோச் சிறுவன். ஒவ்வொரு முட்டைக்கும் பத்து ஸெண்டு வீதம் கொடுக்கும்படி கேட்டான்.

''ஐயோ! நாங்கள் லண்டனுக்குத் தெரிவித்து அங்கிருந்து பணம் வந்த பிறகுதான் கொடுக்க முடியும். முட்டைகளைக் கணக்கிட்டு வைத்து விட்டுப் போய் நாளைக்கு வா!'' என்றார்கள்.

அச்சிறுவனும் அப்படியே முட்டைகளைக் கணக்கெண்ணிக் கொண்டு காலனி காரியாலயத்திலேயே வைத்து விட்டுச் சென்றான்.

மறு நாள் வந்தான். லண்டனிலேயிருந்து பதிலே வரவில்லை. பத்து நாட்கள் ஆகி விட்டன. காக்கை முட்டைகள் சூரிய வெப்பத்தினால் வெடித்துக் குஞ்சுகளாக வெளி வந்து விட்டன. பதினோராம் நாள் அச்சிறுவன், காரியாலயத் தலைவரைப் பார்த்து, ''ஐயா! இனி நீங்கள் பத்து ஸெண்டுகள் கொடுத்தால் வாங்க மாட்டேன். அவை காக்கைகளாகிவிட்டன. ஐம்பது ஸெண்டுகள் வீதம் கொடுக்க வேண்டும்'' என்றான்.

உடனே அதிர்ச்சியடைந்து அவர் லண்டனுக்கு டிரங்க் கால் செய்தார். இதையறிந்த நிதி இலாகா காரியதரிசி இனி மேலும் நீடித்தால் நிலைமை மோசமாகிவிடும் என்று கருதி, உடனே பத்து ஸெண்டு வீதம் பணத்தை அனுப்பி விட்டுக் கூடவே, ''இறக்கை முளைத்தால்தான் காக்கை என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். ஆகையால் முட்டைக்குரிய மொத்தத் தொகையை அனுப்பியிருக்கிறோம். பையனுக்குக் கொடுத்து விடவும்'' என்று கடிதமும் அனுப்பி வைத்தார்.

அரை மனதுடன் சிறுவன் பணத்தை வாங்கிக் கொள்வதற்கும் காக்கைகள் பறந்து போவதற்கும் சரியாயிருந்தது. —தீதா

துக்கடா

சிலர் கடன் வாங்கியே பாதி ஆயுளைக் கழிக்கிறார்கள். மற்றொரு பாதியைக் கடனைத் திருப்பிக் கொடுக்காமலே கழிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஓர் உபாத்தியாயர் மொழிந்தார்:
''எந்த விஷயமும் மூன்று நாளைக்கு மேல் உன் தலையில் நிற்பதில்லை. உன் ஜலதோஷம் உள்பட!''

ஃ ஃ ஃ

''குதுப்மீனாரில் நின்று கொண்டு பார்த்தால் அங்கிருந்து ஆக்ரா தெரியும் அல்லவா?'' என்று ஒருவன் தன் நண்பனிடம் கேட்டான்.

''ஆக்ரா என்ன? அதைக் காட்டிலும் தொலைவில் உள்ள நட்சத்திரங்கள்கூட இரவு வேளைகளில் பளிச்சென்று தெரியுமே!'' என்றான் நண்பன்.

ஃ ஃ ஃ

உபாத்தியாயர்: தமிழ் நாட்டில் ஓடும் ஆறுகளின் பெயர்களைக் கூறு:

மாணவன்: எம். ஜி. ஆர்; எஸ். எஸ். ஆர். கே. ஆர். ஆர். முதலியவையாகும்.

ஃ ஃ ஃ

''ஏன் ராமு! நீ வாட்டமாய் இருக்கிறாய்?'' என்று கேட்டான் சோமு.

''நானும் வேணுவும் இன்று பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தபோது ஒரு ரூபாய் நோட்டு கிடைத்தது. யாராவது கேட்பார்களா என்று சுற்று முற்றும் பார்த்தேன். கேட்காமல் போகவே, நானும் சோமுவும் ஆளுக்குப் பாதியாக எட்டணா எடுத்துக் கொண்டோம்'' என்றான் ராமு.

''இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது....?''

''நன்றாய்ச் சொன்னாயே! பஸ்ஸில் கிடைத்த ஒரு ரூபாய் நோட்டு என் சட்டைப் பையிலிருந்து விழுந்த பணம் என்று தெரிந்த பிறகுமா வருத்தப்படாமல் இருக்க முடியும்?'' என்று கேட்டான் ராமு.

ஃ ஃ ஃ

கார்டு ஒருவரின் மனைவி திடீரென்று இறந்து விட்டாள். மேலதிகாரிக்கு அவர் ஒரு தந்தி அடித்தார். வாசகம் இதுதான்:
'என் மனைவி இறந்துவிட்டாள். பர்த்திக்கு உடனே ஏற்பாடு செய்யவும்.'

ஃ ஃ ஃ

காகா சாகேப் காலேல்கர் சமீபத்தில் நாகபுரியில் இந்திய ஒற்றுமை பற்றி ஒரு கூட்டத்தில் கூறியதாவது:

இரண்டு வங்காளிகள் கூடினால் ஏதோ ஒரு சூழ்ச்சி உருவாகிறது என்று பொருள். இரண்டு மதராஸிகள் கூடினால் ஒரு தீர்மானமும் இரண்டு திருத்தங்களும் உருவாகின்றன என்று கொள்ளலாம். இரண்டு குஜராத்திகள் கூடினால் பங்கு பேரம் நடைபெறுகிறது என்று அர்த்தம். இரண்டு மகாராஷ்டிரர்கள் கூடினால் இரண்டு கட்சிகள் உருவாகின்றன என்று கூறலாம்.

ஃ ஃ ஃ

''அப்பா! கழுதைகள் கல்யாணம் செய்து கொள்வதுண்டோ?''

''உண்டே! ஆனால் ஒரு சின்னத் திருத்தம். கழுதைகள்தான் கல்யாணம் செய்துகொள்ளும்!'' என்றார் குடும்ப அநுபவம் பெற்ற தந்தை.

பொக்கைவாய் மொழிகள்

-சாமா-

நாலுபேர்கள் சேர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது ஓர் இளைஞன் குறுக்கிட்டால், 'யாருடா பயல், பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடறது? தப்பு, போ!' என்று சொல்லிக் கொண்டிருந்தது இப்ப எவ்வளவு விபரீதமாயிடுத்து தெரியுமா? இப்ப என் மாதிரி பொக்கை வாய்ப் பேர்வழிகள், இளைஞர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது குறுக்கிட்டால்.... 'தாத்தா! நீங்க தயவு செய்து குறுக்கிடாதீங்க! நாங்கள் முற்போக்குக்காரர்கள் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் பிற்போக்குப் பேர்வழி' என்று எகத்தாளம் பண்ணுவார்கள்.

ஒரு சமயம் நான் ஜட்கா வண்டியில் பிரயாணம் செய்ய நேரிட்டபோது அந்த வண்டி முற்போக்கு இளைஞர்கள் மத்தியில் வந்து நின்றுவிட்டது. அந்த இளைஞர்கள் கேலிக்குக் கேட்க வேண்டுமா? இந்தச் சமயத்தில், குதிரை திடீரென்று பின்னங் கால்களை ஆகாயத்தில் உதைத்து வண்டிக்காரனைக் கீழே தள்ளிவிட்டுச் சிட்டாகப் பறந்தது. தெருவில் எல்லோரும் அதனிடமிருந்து தப்பிக் கொள்ள அரும்பாடு பட்டார்கள். ஒரு தாவலாகத் தாவி லகானை எடுத்து இழுத்துப் பிடித்துக் குதிரையின் முற்போக்கு வெறியை அடக்கி அதை அரை மைலுக்கு மேல் திருப்பி ஓட்டி வந்தேன். இளைஞர்கள் கேலி செய்ததை விட்டு என் தைரியத்தைப் பாராட்டினர்.



உடனே நான் 'ஏண்டாப்பா, முற்போக்கு ஆசாமிகளே! பார்த்தீங்களா..... கட்டில்லாத முற்போக்கு என்ன கதி ஆகிறதென்று? அதனால்தான் முற்போக்குச் சக்திகளுக்கு ஒரு பிரேக் போடும் பிற்போக்கு ஆசாமி அவசியம் தேவைப்படுகிறது. லகான் இல்லாத முற்போக்கு, வெறியில் போய்த்தான் முடியும். பிற்போக்கும் முற்போக்கும் இணை பிரியாத நிலைதான் நாட்டுக்கு வேண்டும்' என்று ஒரு போடு போட்டேன். அங்கு ஏகக் கூட்டம் கூடிவிட்டது. கூட்டம் கூடியதனால் நான் பிரசங்கம் செய்தேனோ, அல்லது என் பிரசங்கம் கேட்கத்தான் அவ்வளவு கூட்டம் கூடியதோ, அது எனக்குத் தெரியாது!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathian Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10.
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon